# ஸகாத்
# வழக்கமும் விளக்கமும்

இமாம் ஷாபி (ரஹ்) இமாம் அபூஹனிபா (ரஹ்)
ஆகியோரது கருத்துக்களும் அடங்கியது

ஆசிரியர்
*அல்ஹாஜ் எம்.எஸ்.எம். உவைஸ்*
ஏ.ஆர் அண்ட் ஆர்.ஏ பி.ஏ. சிறப்பு (இலங்கை)
டிப்.இன் எ.ஸி.ஸி (லண்டன்)
இளைப்பாரிய வரிமதிப்பீட்டாளர் உள்நாட்டு இறைவரித்திணைக்களம்
அங்கீகாரம் பெற்ற கணக்காளரும்
சிரேஷ்ட வரிநிபுணத்துவ ஆலோசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Al- Haj. Aliyar Muzzammil
546A, 1st Cross Street
Sainthamaruthu- 16
Sri Lanka
1997/05/20

Copy right reserved
First Edition Jan 1997

# ஸகாத்

## வழக்கமும் விளக்கமும்

இமாம் ஷாபி (ரஹ்) இமாம் அபூஹனிபா (ரஹ்) ஆகியோரது கருத்துக்களும் அடங்கியது

☆

ஆசிரியர்
*அல்ஹாஜ் எம்.எஸ்.எம். உவைஸ்*
ஏ.ஆர் அன்ட் ஆர்.ஏ பி.ஏ. சிறப்பு (இலங்கை)
டிப்.இன் எ.ஸி.ஸி (லண்டன்)
இளைப்பாரிய வரிமதிப்பீட்டாளர் உள்நாட்டு இறைவரித்திணைக்களம்
அங்கீகாரம் பெற்ற கணக்காளரும்
சிரேஷ்ட வரிநிபுணத்துவ ஆலோசகர்

ஹிஸ்புல் இஸ்லாம் ட்ரஸ்ட்
இஸ்லாமிக் B புக் ஹவ்ஸ்
77, ஸ்ரீ வஜிராஞான மாவத
(தெமட்டகொட றோட்)
கொழும்பு 09.
தொ. பேசி: 634851/687091

Rs 95/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இஸ்லாம் ஒரு வாழ்க்கைத்திட்டம். அதன் போதனைகள் ஆன்மிகம், உலகியல் எனும் இரு துறைகளையும் உள்ளடக்கியவை, அதன் ஏவல் விலக்கலில் சில ஆன்மீக நலனோம்பலுக்கு முக்கியத்துவம் கொடுத்த போதும் அவற்றுள் பல ஆன்மீக நலனையும் உலகியல் நலனையும் கருத்திற் கொண்டுள்ளன. குறிப்பாக ஸகாத் எனும் இஸ்லாமியக்கடமை ஆன்மீக மேம்பாட்டையும் சமூகத்தின் நலிவுற்ற மக்களின் பொருளாதார நலன்களைப் பேணுவதையும் கருத்திற் கொண்டுள்ளது.

ஸக்காத்திற்கு இஸ்லாம் கொடுத்துள்ள முக்கியத்துவம் மற்றெந்த இஸ்லாமியக் கடமைக்கும் இரண்டாந்தரமானதல்ல, "சுவர்க்கத்தின் திறவுகோல்" என்று நபிகளார் (ஸல்) அவர்களால் பாராட்டப்பட்ட தொழுகை எனும் இபாதத்துடன் இணைந்து அல்குர்ஆனில் எண்பத்திரண்டு இடங்களில் ஸகாத் பற்றிப் பேசப்பட்டிருப்பதும் நபிகளார் (ஸல்) அவர்கள் காலமுதல் அது நடைமுறைப்படுத்தப் பட்டிருப்பதும் ஸகாத்தின் முக்கியத்துவத்தை நன்குணர்த்துகின்றன.

அல்குர்ஆன் அல்ஹதீஸ் என்பவற்றில் ஸக்காத் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றை இஸ்லாமியச் சட்ட அறிஞர்கள் தொகுத்து இலகுபடுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியுள்ளார்கள். காலத்துக்குக் காலம் பொருளாதாரத் துறையில் ஏற்படும் பண்முகப்பட்ட வளர்ச்சிபற்றி ஆராய்ந்து ஸக்காத் வழங்குவோருக்குஅவசியமான வழிகாட்டுதல்களையும் அவர்கள் வழங்கியுள்ளனர். இத்தகைய முயற்சி தற்காலத்திலும் தொடர்வது அவசியமாகும். அதிலும் குறிப்பாக முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் நாடுகளில் இத்தகைய வழிகாட்டல் மிக மிக அவசியம்.

இலங்கையில் த∴வாப் பணிபுரிகின்ற சில இயக்கங்கள் இஸ்லாமிய சமூக அமைப்பு ஸகாத்தைத் திரட்டி விநியோகித்தல் எனும் துறைகளில் மக்களின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. அதன் விளைவாக முஸ்லிம் கிராமங்கள் சிலவற்றில் தற்போது ஸகாத்தைச் சேகரித்து விநியோகிக்கும் நடைமுறை உயிர் பெற்றுள்ளது. இத்தகையதொரு காலகட்டத்தில் ஸக்காத் விளக்கமும் வழக்கமும் எனும் இந்நூல் தங்கள் கரங்களில் தவழ்வது மகிழ்ச்சிக்குரியதாகும். இந்நூலை இலகுநடையில் சாதாரண வாசகர்களும் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடியதாக வினாவிடை அமைப்பில் அதனாசிரியர் வடிவமைத்துள்ளார். அவர் நீண்ட நாட்களாக இறைவரித் திணைக்களத்தில் வரி மதிப்பீட்டாளராகக் கடமையாற்றியவர். தொடர்ந்தும் இத்துறையில் வர்த்தகர்களுக்கு ஆலோசனை வழங்கும் பணியை மேற்கொள்பவர். இதனால் ஸகாத் கொடுக்கும் நிலையில் உள்ள வர்த்தகர்கள் பலரின் சந்தேகங்களை இனங்காணும் வாய்ப்பை அவர் பெற்றுள்ளார். அவற்றுக்குத் தீர்வு காண உதவும் வகையில் உதாரணங்கள் பலவற்றினூடாக அவர் வழிகாட்டியுள்ளமை இந்நூலின் சிறப்பியல்பாகும்.

ஸகாத் பற்றிய தத்துவ விளக்கம், ஸகாத்தின் முக்கியத்துவம் என்பன பற்றி வலியுறுத்துவதை விட வழங்கப்பட வேண்டிய ஸகாத் நிதியின் அளவை நிர்ணயிப்பதில் உள்ளநடைமுறைப் பிரச்சினையை எளிமைப்படுத்தி விளங்க வைக்க இந்நூலில் முயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப் பட்டுள்ளமை பாராட்டத்தக்க ஒரு முயற்சியாகும்.

சமூக பயன் பெறத்தக்க இத்தகு முயற்சிகளை அல்லாஹ் அங்கீகரிப்பானாக.

எம். ஐ. எம். அமீன்
தலைவர்
அறபு இஸ்லாமிய நாகரிகத்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி முஸ்லிம் சங்கத்தலைவரின் பேனாவிலிருந்து......

எவர்கள் விசுவாசம் கொண்டு நற்கருமங்களைச் செய்து தொழுகையை கடைப்பிடித்து, ஸகாத்தை கொடுத்து வருகிறார்களோ, அவர்களுக்கு அவர்களது கூலி நிச்சயமாக அவர்யள் இறைவனிடத்தில் உண்டு. அன்றி அவர்களுக்கு (மறுமையில்) எவ்வித பயமும் இல்லை. அவர்கள் துக்கிக்கவும் மாட்டார்கள்:

(அல்குர்ஆன் 2:277)

மேற்குறித்த இறைவசனம் ஸகாத் மனித வாழ்க்கையின் வெற்றிக்கு எவ்வளவு முக்கியமானது என்பதனை விளக்குகிறது.

ஆனால் ஸகாத் பற்றிய சரியானவிளக்க புத்தகங்கள் தமிழில் இல்லாதது குறையாகும். இதணை இது நீக்குகிறது. மேலும் ஸகாத்பற்றி இன்றைய நிலையில் கீழ்வரும் ஆலோசனைகளை உங்கள்முன் வைக்க விரும்புகிறேன்

01. ஸகாத் மூலம் ஒருவரது வறுமையை நீக்கி தொழில்துறை வாய்ப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

02. ஸகாத் மூலம் கூட்டுறவு அடிப்படையிலான அல்லது பங்குடமை அடிப்படையிலான தொழில்வாய்ப்பை ஏற்படுத்துதல் வேண்டும். உதாரணமாக தற்போது இலங்கையில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை நூற்றுக்கும் மேற்பட்ட கைத்தொழில்களை சிறியமுதலீட்டுடன் ஆரம்பிக்க தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குகிறது. இதனைப்பயன்படுத்துதல்.

03. ஸகாத் கொடுப்பவர்கள், தனது இலாபத்தில் ஒருபகுதியை ஒதுக்குவதன் மூலம் வருடஇறுதியில் பெரிய ஒரு தொகையை ஸகாத்தாகவும், ஸதக்காவாகவும், கொடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. ஸகாத்தை ஒவ்வொரு ஊரிலும், சேர்த்து பங்கிடுவதன் மூலம் ஸகாத் பெறுபவர்கள் பாதைவழியே சீரழிவதும், ஸகாத் கட்டாயம் பெறவேண்டியவர்கள் பெறாமல் போகும் நிலையை நீக்குவது போன்ற பலநன்மைகளுக்கு வழிகோலும்.

இன்ஷா அல்லாஹ், இவைகள் நிறைவேற இறைவனை வேண்டுகிறேன்.

அத்துடன் இப்புத்தகத்தின் பல பிரதிகளை வாங்கி நண்பர்களுக்கு பங்கிடுவதன் மூலம் ஸகாத் கொடுப்பதற்கு ஊக்குவிக்கும்படி வேண்டுகிறேன்.

வஸ்ஸலாம்.

இப்படிக்கு
அல்ஹாஜ் எச்.எல்.எம். நிசாம்
அகில இலங்கை சமாதான நீதவான்
தலைவர் இன்பாலா குரூப்
தலைவர் கண்டி முஸ்லிம் வர்த்தகர் சங்கம்

வதிவிடம்:-
இல: 89/2, லேடி கார்டன் டிரைவ்,
கண்டி.
இலங்கை.
தொலைபேசி:- 08-234676

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி முஸ்லிம் வர்த்தகச்சங்கச் செயலாளரின் பேனாவிலிருந்து.......

ஸக்காத் விளக்கமும் வழக்கமும் என்ற தலைப்பில் அல்ஹாஜ் எம். எஸ். எம். உவைஸ் அவர்கள் எழுதியுள்ள வினா விடை அடிப்படையிலான இவ்விளக்க நூல் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளிலொன்றான சக்காத் (ஏழைவரி) பற்றிய உன்னதமான முயற்சியாகும். இஸ்லாமியப் பொருளாதாரத்தின் மிக முக்கிய அடிப்படைகளிலொன்றாகத் துலங்கும் ஸகாத்தை விளக்கமின்றி வழங்கிவரும் இக்கால கட்டத்தில் எளிய நடையில் எல்லாக் கோணங்களிலுமிருந்து ஆராய்ச்சி செய்து "பிக்ஹ்" சட்ட இமாம்களின் ஆதாரங்களுடன் எல்லோரும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் அழகான உதாரணங்களுடன் அமைந்துள்ளமை எமது முஸ்லிம் உம்மத்துக்களுக்கான வரப்பிரசாதமாகும்.

அல்ஹாஜ் உவைஸ் அவர்களுடைய அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகியவற்றின் பிரதிபலிப்பான இந்நூல் முஸ்லீம்கள் ஒவ்வொருவரின் இல்லத்திலும் இருக்க வேண்டிய ஒரு பொக்கிஷமாகும்.

இவ்வாறான முயற்சிகளில் மென்மேலும் முன்னேறிச் செல்ல அன்னாருக்குச் சர்வசக்தியையும் வழங்க வேண்டுமென எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் இம்முயற்சியை இறைவன் பொருந்திக் கொள்வானாக. கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தினூடாக இதனை வெளியிடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இப்புத்தகத்தை அநேகமானோர். வாசித்துப் பயன்பெற இறைவன் அருள்பாலிப்பானாக.

இப்படிக்கு
அல்ஹாஜ் எஸ்.ஏ.ஜே ஆப்தீன்
கௌரவப் பொதுச் செயலாளர்
கண்டி முஸ்லிம் வர்த்தகர் சங்கம்.

திகதி:- 25.11.96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி முஸ்லிம் வர்த்தக சங்க உபதலைவர் பேசுகிறார்..........

ஸக்காத் விளக்கமும், வழக்கமும். என்ற நூல் மிகவும் எளிய நடையில் கணக்காய்வாளர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம் உவைஸ் அவர்கள் வெளியிடுவதற்கு முன்வந்துள்ளமையையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். உண்மையிலே மனம் நினைத்தவாறெல்லாம். "ஸக்காத்" வழங்க முடியாது. அத்துடன் சரியான கணிப்பிட்டுடன் அல்லாவைப் பயந்து நாம் இப்புனித கைங்கரியத்தைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் எமக்கு விமோஷனம் உண்டு. அல்லாஹ் தொழுகையைப்பற்றியும், ஸக்காத்தைப்பற்றியும் புனித குர்ஆனில் பல இடங்களில் இணைத்தே வலியுறுத்தியுள்ளான் இதனடிப்படையில் ஸக்காத் எவ்வளவு தூரம் கடமை என்பது விளங்கும்.

நாம் இக்கடமையில் எச்சரிக்கையாகவும் கண்ணுங்கருத்துமாகவும் கணிப்பீடு செய்து ஸக்காத்தை வழங்கவும் உவைஸ் ஹாஜியார் அவர்களின் இப்புத்தக வெளியீடு எமக்கு வழிகாட்டியாயிருந்து உதவும் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

அன்னாரின் இவ்வாறான பணிகள் மேலும் தொடர எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வண்ணம்
அல்ஹாஜ் ஏ.எம் இஸ்மாயீல்
(உபதலைவர்)
கண்டி முஸ்லிம் வர்த்தகர்சங்கம்

"ஜெம்லைட்"
31, யடிநுவர வீதி
கண்டி
05.12.96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவுரை

ஸகாத் பற்றிய புத்தகங்கள் தமிழில் போதியளவு விளக்கத்துடன் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே தமிழ் தெரிந்தவர்கட்காக இப்புத்தகத்தை எழுதினேன். இப்புத்தகத்தைப் பார்த்து ஒருவர் தனது ஸகாத்தைச் சரியாகக் கொடுத்தால் அதுவே எனது மன நிறைவாகும்.

மேலும் இப்புத்தகத்தை வாசித்து பின் உங்களது ஆலோசனைகளையும் விமர்சனங்களையும் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்கும்படி தயவாய் வேண்டுகிறேன். அத்தோடு விளக்கம் பெறவேண்டிய ஸகாத்பற்றிய சந்தேகங்களை எனக்கு அறிவித்தால் உலமாக்களின் ஆலோசனையைப் பெற்று அடுத்த பதிப்பில் சேர்க்க உதவியாக இருக்கும்.

மேலும் இப்புத்தகத்தை வெளியிடத்துணை புரிந்த இறைவனுக்கே புகழ் அனைத்தும் உரித்தாகும். அத்துடன் பல்வேறு வகையில் துணைபுரிந்த கீழ்வருபவர்கள் உட்பட அனைவருக்கும் மனமுவந்து நன்றி தெரிவிக்கிறேன்.

01. கடும் வேலைப்பளுவுக்கு மத்தியில் இப்புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியைத் திருத்தி ஆலோசனைகளும் அணிந்துரையும் வழங்கிய பேராதனைப் பல்கலைக்கழக அரபு இஸ்லாமிய நாகரீகத் துறைத் தலைவர் அல்ஹாஜ் எம்.ஐ.எம். அமீன்(எம்.ஏ) அவர்கட்கும்

02. இதனை வெளியிட முன்வந்த கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் சகலருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பொருளுதவி வழங்கிய
அல்ஹாஜ் எச்.எல்.எம். நிஸாம் ஜே.பி.(இம்பாலா குரூப்) அவர்கட்கும்
அலஹாஜ் எம்.ஏ.எம். வபாf (ரேயல்) அவர்கட்கும்
அல்ஹாஜ் எம்.வி.எம். ரஹ்மதுல்லா( விஜித பீடி மாவநல்ல) அவர்கட்கும்

04. கையெழுத்துப் பிரதியைத்தயாரிப்பதில் உதவிய செல்வி அஸ்மியா பாட்ஷா அவர்களுக்கும்.

05. அச்சுவேலையை அழகுறச் செய்து தந்த அக்குறணை டிலான் பிரின்டர்ஸ் உரிமையாளர் ஜனாப். எம்.யு.ஏ. பரீட் அவர்கட்கும்

மேலும் இன்ஷா அல்லாஹ் இப்புத்தகத்தை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் வெளியிட உத்தேசிக்கிறேன்.

எம்.எஸ்.எம் உவைஸ்

விலாசம்:-
1) இரண்டாம் மாடி
46, கொடுகொடல்ல வீதி
கண்டி. போன் 08-234909

2) 4/12 மலபார் வீதி
கம்பளை.
போன்- 08-52437

3) ஸி 108 தீவுக்கடை
மருள்போவை
ஹேம்மாதகம.
01-01-1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு விடயங்கள் தவிர வேறு எதிலும் பொறாமை கொள்ளக்கூடாது. ஒரு மனிதனுக்கு அல்லாஹ் வழங்கிய செல்வத்தை அவர் நல்லவழியில் செலவு செய்தால், இன்னொரு மனிதருக்கு அல்லாஹ் அறிவு ஞானத்தை வழங்கி, அதற்கேற்ப அவர் தீர்ப்பு வழங்குபவ்ராகவும் இருப்பது ஆகிய அந்த இரண்டு விடயங்கள். (அல்ஹதீஸ் புகாரி 1409)

தர்மம் செய்யுங்கள். ஏனெனில் உங்களிடையே ஒரு காலம் வரும் அப்பொழுது ஒருவன் தனது தர்மப்பொருளை எடுத்துக் கொண்டு அலைவான். அதைப் பெறுவதற்கு யாரும் இருக்கமாட்டார்கள் அப்போது ஒருவன் நேற்றே இதை நீ கொண்டு வந்து இருந்தாலாவது நான் வாங்கி இருப்பேன், இன்றோ எனக்கு அது தேவையில்லையே! எனக்கூறுவார்.

(அல்ஹதீஸ் புஹாரி 1411)

நபி (ஸல்) அவர்கள் எங்களிடம், தர்மம் செய்ய வேண்டும் என ஏவினால் எங்களில் ஒருவர் கடைத்தெருவுக்குச் சென்று கூலிவேலை செய்து இருகையளவுத் தாணியம் சம்பாதித்து (அதைத்தர்மம் செய்து) விடுவார். ஆனால் இன்றோ எங்களில் சிலரிடம் ஓர் இலட்சம் (தினார்/திர்ஹம்) வரை உள்ளன.

(அல்ஹதீஸ் புகாரி 1416)

தேவை போக எஞ்சியதை தர்மம் செய்வது சிறந்ததாகும். மேலும் முதலில் உமது வீட்டாரிடமிருந்து தர்மம் செய்ய ஆரம்பிப்பீராக (அல்ஹதீஸ் புகாரி 1426)

"நீ (தர்மம் செய்யாமல்) முடித்து வைத்துக் கொள்ளாதே. அவ்வாறு செய்தால் (இறைவனின் கொடை) உனக்கு (வழங்கப்படாமல்) முடித்து வைத்துக் கொள்ளப்படும்" என நாயகம் (ஸல்) கூறுகிறார்கள் . மேலும் அப்தாவின் அறிவிப்பில் "நீ (இவ்வளவுதான்) என்று வரையறுத்து (தர்மம்) செய்யாதே! அல்லாஹ் (உன்மீது பொழியும் அருளை ) வரையறுத்து விடுவான்" எனக் கூறியுள்ளதாக உள்ளது.

(அல்ஹதீஸ் புகாரி 1433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| தலையங்கம் | பக்கம் | |
| --- | --- | --- |
| | தொடக்கம் | முடிவு |
| 1) ஸகாத் பற்றிய பொது விடயம் | 1 - | 15 |
| 2) தங்கம் வெள்ளி மீது ஸகாத் விதியாது | 16 - | 18 |
| 3) பணம் | 19 - | 23 |
| 4) வியாபாரப் பொருடள் | 24 - | 49 |
| 5) பங்குடமையும் சேமிப்பும் | 50 - | 58 |
| 6) கால்நடை | 59 - | 64 |
| 7) விவசாயம் | 65 - | 74 |
| 8) புதையல் | 75 - | 77 |
| 9) ஸகாத் கொடுத்தல் | 78 - | 92 |
| 10) ஸகாத் பெறுதல் | 93 - | 95 |
| 11) ஸதகதுல் பித்ர் | 96 - | 99 |



Al- Haj. Aliyar Muzzammil
546A, 1st Cross Street
Sainthamaruthu- 16
Sri Lanka


## துணை ஆக்கங்கள்

1) இஸ்லாமிய சட்டத்தீர்ப்புகள்
2) மாவாலி (மாப்பிள்ளை லெப்பை ஆலிம்)
3) ஸகாத் கொடுப்பது எப்படி
4) ஸகாத்தின் விதிமுறைகள்.
5) சமஞ்சம் சஞ்சிகை
6) வறுமை ஒழிப்பில் ஸகாத்தின் பங்கு
7) Fiqhus Sunnah.
8) Zakath and Ushr.
9) ஸகாத் பற்றிய சுருக்கமான விளக்கம்
10) ஸஹீஹுல் புகாரி (முதலாம் பாகம் தமிழாக்கம்)
11) ஸஹீஹுல் புகாரி (இரண்டாம் பாகம் தமிழாக்கம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸகாத் விதியாவதும் அது பற்றிய பொதுவான விடயமும்

01.கேள்வி:-

ஸகாத் என்றால் என்ன?

பதில் :-

ஸகாத் என்பது ஏழைவரி என்றும் ஒருவரது செல்வத்தில் ஏழைகளுக்குரிய பகுதியென்றும் கூறிக்கொள்ளலாம். மேலும் ஸகாத் என்பது ஒருவரி மட்டுமல்லாமல் இறைவணக்கமாகவும் காணப்படுகிறது. அத்தோடு இது இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகும்.

02.கேள்வி:-

ஸகாத் விதியாகும் பொருட்கள் யாவை? ஸகாதுல் பித்ர் என்பதும் ஒரு வகை ஸகாத்தானா? சிறிது விளக்கவும்.

பதில் :-

(அ) தங்கம், வெள்ளி

(ஆ) ஆடு, மாடு, ஒட்டக மந்தைகள்.

(இ) வியாபாரத்தில் அல்லது கைத்தொழிலுள்ள வியாபாரப் பொருட்கள்.

(ஈ) பழவகை உட்பட விவசாய பொருட்கள்.

(உ) புதையல்கள்.

ஸகாதுல் பித்ர் என்பதும் ஸகாத் ஆகும். இது ரமலான் மாத நேன்பு இறுதியில் பிரதான உணவுப் பொருளில் குறித்தளவு கொடுப்பதைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. கேள்வி:-

நிஸாப் அளவு என்றால் என்ன?

பதில் :-

ஸகாத் விதியாவதற்காக ஒருவரிடம் ஸகாத் விதியாகும் பொருளில் இருக்க வெண்டிய ஆகக் குறைந்தளவுத் தொகையை குறிக்கிறது.

04. கேள்வி:-

கடன்மீது ஸகாத் விதியாவது எவ்வாறு?

பதில் :-

கடன்பட்ட தொகையை ஒதுக்கிய பின் எஞ்சிய தொகை ஆரம்ப அளவை (நிஸாப்) உடையதாயின் அதற்கு ஸகாத் கொடுக்க வேண்டும்.

05. கேள்வி:-

ஒரு மனிதன் கொடுக்க வேண்டிய ஸகாதை கொடுப்பதற்குமுன் இறந்தால் அவரது ஸகாத் கொடுக்கப்பட வேண்டுமா?

பதில் :-

மரணமாகும் பொழுது விட்டுச்சென்ற சொத்திலிருந்து (மரணச் சொத்து) எடுத்துக் கொடுக்க வேண்டும்.

06. கேள்வி:-

ஸகாத் கொடுப்பதற்கு முன் நிய்யத்து வைக்க வேண்டுமா?

பதில் :-

ஸகாத் கொடுப்பது ஒரு இறையணக்கமாகவும், ஒருவரது செயல்கள், யாவும் நோக்கத்தைப் (நிய்யத்து) பொருத்தது என்று ஹதீஸ் வந்திருப்பதாலும் ஏற்ப நிய்யத்து வைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. கேள்வி :-

ஸகாத் எப்பொழுது கொடுத்தல் வேண்டும்?

பதில் :-

ஒருவரது சொத்திலிருந்து ஸகாத் விதியாகும் போது உடனடியாக அதை கொடுக்க வேண்டும். அதனைக் காலதாமதப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. என்றாலும் தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒருவர் ஸகாத்தை செலுத்த முடியாதுவிடின் அவருக்கு வசதிஏற்படும் போது அதை உடனடியாக செலுத்த வேண்டும். மேலும் ஒருவரது ஸகாத் குறிப்பிட்ட நேரத்தில் கொடுக்கப்பட வில்லையானால் சட்ட பூர்வமற்ற சொத்தானது (ஸகாதின் அளவு) சட்டபூர்வமான சொத்தை அழித்துவிடுமென நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

08. கேள்வி:-

ரமலான் மாதத்தில்தான் ஸகாத் கொடுக்க வேண்டும் என்ற கருத்து நிலவுகின்றது. அதுபற்றி என்ன கூறுகின்றீர்கள்?

பதில் :-

ரமலான் மாதத்தின் அமல்களுக்கு அதிக நன்மை கிடைப்பதால் அனேகமானோர் ஸகாத்தினை ரமலானில் கொடுக்கிறார்கள். ஆனால் ஸகாத் விதியாகும் சொத்துக்கள்மீது ஸகாத் விதியாகும் போது கொடுக்கப்பட வேண்டும்.

09. கேள்வி:-

ஸகாத்தினை முற்பணமாக கொடுக்கலாமா? அதாவது ஸகாத்தினை சில வருடங்களுக்கு முன்பாகவே வழங்கலாமா?

பதில் :-

3 வருடங்களுக்கு முன்பே முற்பணமாக ஸகாத்தினை வழங்க இஸ்லாத்தில் இடமுண்டு. என்பது இஸலாமிய அறிஞர்களின் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.கேள்வி:-

முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்பிருந்த உம்மத்தினருக்கு ஸகாத் கடமையாக்கப்பட்டதா?

பதில்:-

ஆரம்ப காலத்திலிருந்து ஒவ்வொரு சமூகத்திற்கும் ஸகாத் விதியாக்கப்பட்டிருந்தது. இதனை (21:73), (7:156), (5:12), (19:39) போன்ற அல்குர்ஆன் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

11.கேள்வி:-

ஒருவர் ஐவேளை தொழுதுகொண்டு ஸகாத் கொடுக்கவில்லையாயின் அவரது நிலைமை என்ன?

பதில்:-

ஸகாத் கொடக்காத தொழுகையாளியின் தொழுகை பெறுமதியில்லையென்று கூறப் பட்டுள்ளது. (அத்தபரானி).

12.கேள்வி:-

இறைவனின் வழியில் செலவுசெய்பவர்களின் செல்வம் குறையுமா?

பதில்:-

நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் ஒருவர் தான் சட்டபூர்வமாக சம்பாதித்த ஒரு பேரீச்சப்பழத்தையாவது தர்மம் கொடுத்தால் மக்கள் தமது சிறுபிள்ளைகளை வளர்ப்பதுபோல மலையளவு அது பெருகும்வரை இறைவன் பார்க்கிறான். (புஹாரி).

மேலும் ஒருவர் தர்மம் கொடுப்பதால் சொத்து குறைவதற்கு பதிலாக அதுமேலும் அதிகரிக்கும். (முஸ்லிம்).

13.கேள்வி:-

ஸகாத் கடமையாவதற்குரிய விதிகள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Al- Haj. Aliyar Muzzammil
546A, 1st Cross Street
Sainthamaruthu- 16
Sri Lanka

பதில் :-

(அ) முஸ்லிமாக இருத்தல், (முஸ்லிம் அல்லாதோருக்கு ஸகாத் கடமையாவதில்லை.)

(ஆ) ஸகாத் கொடுப்பவர் ஆரம்ப அளவு (நிஸாப்) கொண்ட சொத்தினை உடையவராக இருத்தல்.

(இ) ஒருவரது செல்வம் ஆரம்ப நிஸாப்பை அடைந்திருந்தாலும், கடன்சுமை உடையவராக இருந்தாலும் அந்த கடனை அடைத்து விட்டு மிகுதியான செல்வம் ஆரம்பளவு (நிஸாப்) கொண்ட சொத்தினை உடையவராக இருத்தல்.

(ஈ) ஸகாத் கொடுப்பவர் ஒரு வருடம்பூராகவும், சொத்தினை வைத்திருத்தல் வேண்டும். (விவசாய உற்பத்தியிலும், ஸதக்கதுல் பித்ர், புதையல் போன்றன இதற்கு விதிவிலக்காகும்.)

(உ) சித்தசுவாதினம் உடையவராக இருத்தல் வேண்டும்.

14.கேள்வி:-

மாணிக்கம், வைடூரியம், போன்ற விலையுயர்ந்த கற்களை ஒருவர் ஒருவருடம் பூராக வைத்திருந்தால் ஸகாத் கடமையாகுமா?

பதில் :-

இந்நிலையில் அவைகளுக்கு ஸகாத் இல்லை. ஆனால் இவை வியாபாரப் பொருளாக வைத்திருந்தால் வியாபாரப் பொருட்களுக்குரிய முறையில் ஸகாத் கொடுத்தல் வேண்டும்.

15.கேள்வி:-

ஈடுவைக்கப்பட்ட சொத்துமீது ஸகாத் விதியாகின்றதா?

பதில் :-

அவை மீது ஸகாத் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.கேள்வி:-

ஒருவர் தனது வீட்டுக்கு ஸகாத் கொடக்க வேண்டுமா?

பதில் :-

இல்லை. அது எத்தகைய பெறுமதி உடையதாயினும் சரியே. ஆனால் தங்கம், வெள்ளி அவ்வீட்டில் ஏதோ ஒருவகையில் உபயோகித்திருந்தால் அந்தத 'தங்கம் அல்லது அந்த வெள்ளி மீது ஸகாத் விதியாகும்.

17.கேள்வி:-

ஒருவரது பெறுமதிமிக்க அரிதான பொருட்கள் அல்லது சொந்த பாவனைப் பொருட்கள் மீது ஸகாத் கொடுக்க ணேடுமா?

பதில் :-

அவை மீது ஸகாத் இல்லை.

18.கேள்வி:-

கோழி, இறால், வாத்து போன்ற பண்ணைகளுக்கு ஸகாத் உண்டா?

பதில் :-

அவை மீது ஸகாத் இல்லை. ஆனால் இவை பண்ணையாக அல்லாது வியாபாரப் பொருட்களாக மாறினால் அவற்றிற்கு ஸகாத் கொடுக்க வேண்டும்.

19.கேள்வி:-

பொதுச்சொத்துக்கள், வக்புசொத்துக்கள் ஆகியவற்றுக்கு (பள்ளிவாசல் பணம் போன்றன) ஸகாத் செலுத்த வேண்டுமா?

பதில் :-

இவை மீது ஸகாத் விதியாவதில்லை.

20.கேள்வி:-

இஸ்லாத்தின் அடிப்படை சட்டத்தின்படி சொத்துக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரித்தாளி யார்?

பதில் :-

எந்த செல்வத்திற்கு இறைவன் உங்களை பிரதிநிதிகளாக ஆக்கினானோ, அந்த செல்வததிலிருந்து செலவு செய்யுங்கள். (அல்குர்ஆன் 57:7)

என்றதன்படி செல்வத்தின் உரித்தாளி இறைவனாகும்.

21. கேள்வி:-

கஞ்சத்தனம் அல்லது கருமித்தனம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இக்குணமுடையார் ஸகாத் கொடுக்க பின்வாங்குவது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில் :-

கஞ்சத்தனமானது ஒரு மனிதனை கேவலப்படுத்துவதுடன் அழிவிலும் கொண்டுபோய் நிறுத்துகிறது. நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று விடயங்கள் மனிதனை அழிவில் தள்ளிகிடுகின்றன என்றார்கள்:.

(அ) கஞ்சத்தனத்திற்கு கட்டுப்படுவது

(ஆ) மன இச்சையை பின்பற்றி செல்வது

(இ) தற்பெருமை கொள்வது (தபரானி)

தங்கக்காசுக்கும், வெள்ளிநாணயத்திற்கும் அடிமைப்பட்டு வாழ்கின்றவன் இழப்புக்குரியவன். (புஹாரி)

ஸகாத் ஐம்பெரும் கடமைகளுல் ஒன்றானதால் இதனை மறுப்பது இறைமறுப்பு (குபிர்) ஆகும்.

22. கேள்வி:-

விலக்கப்பட்ட வழியில் சம்பாதிக்கப்பட்ட சொத்து அதாவது உதாரணமாக கொள்ளையடிக்கப்பட்ட பணம், திருட்டுச்சொத்து, சூதாட்ட வருமானம் போன்றவற்றின்மீது ஸகாத் விதியாகின்றனவா?

பதில் :-

இத்தகைய முறையில் ஒருவன் சம்பாதித்தால் அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச்சொத்து உரித்தாக முடியாது. எனவே, ஸகாத் இவற்றின் மீது விதியாவதில்லை.

23.கேள்வி:-

ஸகாத் கொடுப்பதற்கு ஒருவர் கடனிலிருந்து விடுபட வேண்டுமா? அல்லது சுயதேவைப் பூர்த்தி அடைந்து இருக்க வேண்டுமா?

பதில்:-

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் தன்சொந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தன்னிறைவு அடைந்தபின்பு ஸகாத் கொடுப்பதே சிறந்த வழிமுறையாகும். (புஹாரி)

இதன்படி ஒருவர் தான்கடன்பட்டு இருந்தால் அவைகளை செலுத்தியதன் பின்பு ஸகாத் கொடுப்பதே சிறந்தது. மேலும் தன்னிறைவு அடையும் அளவிற்கு வசதியில்லையெனின் ஸகாத் அளிக்க வேண்டியதில்லை. இங்கு தன்னிறைவு அடைந்தவர் என்பது அடிப்படை தேவை நிறைவேறியவர் ஆவர்.

24.கேள்வி:-

ஸகாத், ஸதகா போன்றன வசதியானவர் மட்டும் கொடுத்து நன்மைபெற கூடியதாகவுள்ளது, வசதியற்றவர்கள் ஸதகாவின் நன்மைபெற என்ன செய்யலாம்?

பதில்:-

ஸதக்கா என்பதன் கருத்து நன்மையை நாடி ஏழைகளுக்கு தர்மம் அல்லது நன்கொடை கொடுப்பது என்ற கருத்துக்கு ஆழமான கருத்தினையுடையது. ஹதீஸ்படி ஸதக்கா ஆனது எந்ததொகை, எந்தஅளவு, எந்தபொருள், எந்தவகை என்பதற்கு அப்பாற்பட்டதாகும். ஒரு இஸ்லாமிய சகோதரனை பார்த்து புன்சிரிப்பு சிரிப்பதும் பாதையில் இருக்கும் தடங்கலை அப்புறப்படுத்துவதும் ஸதக்காவாகும்.

மேலும் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூமூஸா அஸ்ஹரி (ரலி) கூறுகிறார்கள் "ஒவ்வொரு முஸ்லிமும் ஸதக்கா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க வேண்டும்" என்று. ஒருவரிடம் ஒன்றுமில்லையாயின் எவ்வாறு இது செல்லுபடியாகுமென நாயகம் (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கு அவர்கள் ஒருவர் தன்கையால் உழைத்து அதன் மூலம் ஸதக்காகொடுக்க வேண்டும் என்று கூறினார்கள். அவ்வாறு ஒருவரால் முடியாது என்றால் அல்லது அவ்வாறு செய்யவில்லையென்றால் என்ன நடக்குமென இறைவனின் தூதரிடம் வினவப்பட்டது. அதற்கு அவர் ஒருவர் கஷ்டத்தில் இருக்கும் பொழுது அல்லது உதவிதேவைப்படும் பொழுது உதவுவது என்றார்கள். இதன்பின் ஒருவர் அவ்வாறு செய்யாதுவிடின் என்ன செய்ய வேண்டும் என கேட்கப்பட்டது. அதற்கு அவர் தீமையிலிருந்து விலகியிருப்பது அவருக்கு ஸதக்காவாகும் என்று ச றிப்பிட்டுள்ளார்கள். (ஸஹிஹுல் புஹாரி, ஸஹிஹுல் முஸ்லிம், மிஸ்காத், மஸாஹிப் முதலாம்பாகம் 403ம் பக்கம்)

25.கேள்வி:-

ஒருவரது ஸகாத் கொடுக்க வேண்டி இருந்த தொகையை கொடுக்காமல் விட்டு இஸ்லாமிய நிர்வாகம் அதனை அறவிடும் போது தண்டப்பணம் எதுவும் அறவிடலாமா?

பதில் :-

அவர் கொடுக்க வேண்டிய ஸகாத்தினை அறவிட்டு அவரிடம் மிகுதி இருக்கும் பணத்தில் அரைப்பகுதியை தண்டமாக அறவிடலாமென இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

26.கேள்வி:-

ஒருவரிடம் ஸகாத் விதியாகும் பொருள் ஒருநாளில் இருந்து அந்த வருட கடைசியிலும் அதேயளவு இருந்து வருட நடுப்பகுதியில் ஸகாத்தின் நிஸாப்பை விட குறைந்திருந்தால் வருட இறுதியில் ஸகாத் கொடுக்க வேண்டுமா?

பதில் :-

இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி இவ்வாறான நேரத்தில் வருட ஆரம்பத்திலிருந்த தொகைக்கு ஸகாத் கொடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அதாவது ஒருவரிடத்தில் 200 திர்ஹம் வெள்ளிக்காசு அல்லது 40 ஆடு வருட ஆரம்பத்தில் இருந்து வருடநடுப்பகுதியில் 199 வெள்ளிக்காசுகளை இழந்து அல்லது 39 ஆடுகளை இழந்து வருடகடைசியில் 200 திர்ஹம் வெள்ளிக்காசு அல்லது 40 ஆடுகள் இருந்தால் அவை அனைத்தின்மீதும் ஸகாத் விதியாகும். ஆனால் பழம், தானியம் மீது ஸகாத் விதியாவது அவை அறுவடை செய்யும் தினத்திலாவதால் இந்த பிரச்சினை எழாது.

ஆனால் இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி இவ்வாறான சந்தர்ப்பத்தில் அதாவது ஒருவரது ஸகாத் விதியாகும் நிஸாப் அளவை எய்த பின்னர் ஒருவருடம் பூர்த்தியாவதற்கு முன் நிஸாப்பை விட குறைந்தால் நிஸாப்பின் தொடர்பு இல்லாமல் போகிறது.

எனவே, முதலில் நிஸாபை அடைந்ததைக் கணக்கில் எடுக்காது மீண்டும் நிஸாப் அடையும் திகதியிலிருந்து ஒருவருடம் தொடர்ச்சியாக அந்த நிஸாப் பொருள் இருந்தால் மட்டுமே ஸகாத் விதியாகும்.

**27.கேள்வி:-**

ஸகாத் கொடுப்பதற்கு நிய்யத்து வைப்பது எப்பொழுது?

**பதில்:-**

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி ஒருவரது சொத்திலிருந்து ஸகாத்தினை பிரிக்கும் பொழுது அல்லது ஒதுக்கும் பொழுது நிய்யத்து வைக்க வேண்டும். இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி ஸகாத்தினை கொடுக்கும் போது அல்லது ஸகாத்தினை ஒரு பக்கமாக ஒருக்கி வைக்கும் போது நிய்யத்து வைக்க வேண்டும்.

**28.கேள்வி:-**

கடலிலிருந்து பெறப்படும் செல்வங்களுக்கு ஸகாத் உண்டா?

**பதில்:-**

இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29.கேள்வி:-

ஒருவர் வைத்திருக்கும் பொருளானது ஸகாத் விதியாகி அல்லது அறுவடையின் போது ஸகாத் செலுத்த வேண்டி ஏற்பட்டலின் அவரது சொத்தில் ஒரு பகுதி அந்த சொந்தகாரரின் கவனயீனத்தால் அல்லது வேறுவகையால் காணாமல் போனால் ஸகாத் கடமையாகுமா?

பதில்:-

ஆம். ஸகாத் கடமையாகும்.

30.கேள்வி:-

ஸகாத் பெற்ற ஒருவர் தனக்கு ஸகாத்தாகக் கிடைத்த பொருளை சந்தையில் விற்க வைத்து இருந்தால் அப்பொருளை ஸகாத்தாகக் கொடுத்தவர் வாங்கலாமா?

திரும்ப வாங்கலாமா?

பதில்:-

இதனை நாயகம் (ஸல்) அவர்கள் தடைசெய்துள்ளதாக புஹாரி முஸ்லிம் கிரந்தங்களில் கூறப்பட்டுள்ளது.

31.கேள்வி:-

ஒருவர் பின்னர் ஏற்படும் ஒரு செலவுக்காக ஒதுக்கிவைத்த பணம் ஆரம்ப நிஸாப்பை அடைந்து ஒருவருடம் பூர்த்தியானால் அதன் மீது ஸகாத் விதியாகுமா? (உதாரணமாக மகளது திருமணச் செலவுக்கு வைத்திருக்கும் பணம்.)

பதில்:-

இந்த நிலமையில் ஸகாத் கொடுக்க வேண்டும்.

32.கேள்வி:-

ஒருவரது சொந்த பாவனைக்கு வைத்துள்ள மிகபெறுமதியான பொருட்கள் அல்லது பழங்காலத்திற்குரிய பெறுமதிமிக்க பொருட்கள் மீது ஸகாத் உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் :-

அவை மீது ஸகாத் இல்லை.

33.கேள்வி:-

சேவைகள் வழங்கும் (Service) ஒரு தொழில்முயற்சியில் ஸகாத் எவ்வாறு வழங்க வேண்டும்?

பதில்

இங்கு வர்த்தகப் பொருள் ஒன்று சம்பந்தபடுவதாயின் அதன்மீது ஸகாத் கொடுக்க வேண்டும்.

உதாரணமாக ஒரு வைத்தியர் நோயாளிக்கு கொடுக்கும் மருந்து பொருட்களின் பெறுமதி நிஸாபை அடைந்தால் ஸகாத் கொடுக்க வேண்டும். ஆனால் சேவையை வழங்குதல் மீது ஸகாத் விதியாவது இல்லை.

34.கேள்வி:-

கீழ்வரும் நிலையில் ஸகாத் எவ்வாறு விதியாகின்றது? ஒருவரிடம் ஸகாத் கடமையாகக் கூடிய வகையிலான பொருள் நிஸாப் அளவைவிடக் குறைவாக உள்ளது, அல்லது ஸகாத் கடமையாகும் எப்பொருளும் அவரிடம் இல்லை. இந்நிலையில் அவர் ஸகாத் விதியாகும் பொருளை வாங்குகிறார் அல்லது நன்கொடையாகப் பெறுகிறார் அல்லது வாரிசு உரிமை மூலம் பெறுகிறார். இவ்வாறு ஸகாத் விதியாகும் பொருள் உரித்தாவதனால்.

பதில் :-

புதியபொருள் வாங்கப்பட்ட அன்று ஸகாத் விதியாகும் வருடம் ஆரம்பமாகிறது. அதாவது வாங்கிய அன்று நிஸாப்பை அடைகிறது.

உதாரணமாக ஒருவரிடம் 01.04.1411 இல் ரூபா 2500/= இருந்து 01.10.1411 இல் ரூபா 70,000/= மேற்குறிப்பிட்ட வழிகளில் ஏதாவது ஒரு வழியில் பெறப்பட்டால் 01.10.1411ம் திகதி அவர் ஸகாத் கொடுக்க வேண்டிய வருடம் ஆரம்பமாகிறது. இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் அவர் ஒருவருடம் முழுக்க இந்த பணத்தை வைத்திருந்தால் கையிலிருந்த பணமும். இந்தபணமும் சேர்ந்து ரூபா 72,500/= க்கு 01.10.1411இல் ஸகாத் கொடுக்க வேண்டும்.

மேலும் ஒருவரின் ஸகாத் விதியாகும் சொத்து இலாபம்மூலம் அதிகமானாலும் அல்லது கால்நடைகள் குட்டி ஈனுவதன்மூலம் அதிகமானாலும் ஸகாத் விதியாகும் திகதி அந்த நிஸாப்பை எட்டிய திகதியாகும். ஆனால் வியாபாரப் பெருட்களுக்கும் கால்நடைகளுக்கும் மட்டுமே இந்த நிபந்தனை செல்லுபடியாகும்.

அத்தோடு இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி இடையில் உரித்தான இவ்வாறான சொத்துக்கள் அதன்மீது ஸகாத் விதியாகும் வருடம் ஆரம்பித்த பின்பு அந்த சொத்துக்களினால் சம்பாதித்த அல்லாத சொந்தமாக வாங்கிய கொடையாக பெற்ற வாரிசு உரிமையாக பெற்ற பொருட்கள் சேர்க்கப்பட்டு வருட இறுதியில் ஸகாத் கொடுக்கப்பட வேண்டும். எனவே, ஸகாத் விதியாகும் வருடத்தினுள் பெறும் இலாபமும் வருட ஆரம்ப தொகையின் மீதும் ஸகாத் விதியாகும்.

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி புதிதாக உரித்தான சொத்தானது அதே போலவுள்ள சொத்துக்கள் முன்பிருந்தவைகளுடன் சேர்க்கப்பட்டு புதிய ஸகாத் விதியாகும் திகதி கணிப்பிடப்பட வேண்டும். இது பணம், கால்நடை ஆகியவற்றுக்கு செல்லுபடியாகும்.

உதாரணமாக ஒருவரிடம் 20 தினார் பணம் இருந்து வருடத்தினுள் 20 தினார் சம்பாதித்தால் ஸகாத் விதியாகும் திகதியிலிருந்து ஒரு வருடத்தில் ஸகாத் கொடுக்க வேண்டும். ஸகாத் விதியாகும் திகதி அவரது நிஸாப்பை எட்டிய திகதியாகும். இங்கு 20 தினார் இருக்கும் பொழுது ஸகாத் விதியாவதில்லை என்பது நோக்கத்தக்கது.

இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி இது கால்நடைகளுக்கு மட்டும் செல்லுபடியாகும் என்று கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சம்பாதித்த அல்லது வேறு முறையில் பெறப்பட்ட ஒரேவகையான சொத்து அல்லாதது முன்பிருந்த அதே வகையான அல்லாத சொத்துடன் சேர்க்கப்பட்டு நிஸாப் அல்லது ஸகாத் விதியாகும் காலம் கணிப்பிடப்படத் தேவை இல்லை. என இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆனால் இவ்வாறு சம்பாதித்த பொருள் அல்லது பெறப்பட்ட பொருள் நிஸாப்பை அடையுமாயின் அதன்மீது ஸகாத் விதியாகும்.

35.கேள்வி:-

பணம், வியாபாரப்பெருள், தங்கம், வெள்ளி போன்றன தங்க காசாக "தினார்" அல்லது வெள்ளி காசாக "திர்ஹம் " என்ற முறையில் நிஸாப் கணிப்பிடப்படகிறது. ஆனால் இன்று இவைகள் வழக்கத்தில் இல்லாதபடியால் எந்த அடிப்படையில் ஸகாத் எடுக்கப்பட வேண்டுமா?

பதில் :-

நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் தங்கநாணயமான தினார், வெள்ளிநாணயமான திர்ஹம் போன்ற பணம் வழக்கில் இருந்தன. இந்த நாணயங்கள் ஒவ்வொன்றும் அந்தநாணயம் செய்யப்பட்டுள்ள உலோகமான தங்கம் அல்லது வெள்ளியின் பெறுமதியில் கணிப்பீடு செய்யப்பட்டன. பின்னர் அரசாங்கங்கள் தங்கம் வெள்ளி, போன்றவைகளை வைத்துக் கொண்டு வெறும் காகிதத்தில் நோட்டுக்களாகவும், பெறுமதி குறைந்த உலோகத்தில் பணக்குற்றிகளாகவும் (நாணயம் - Coins) வெளியிட்டன. அத்தோடு நாட்டின் பொருளாதாரத்தின் நிலைமைக்கேற்ப இப்பணமானது பெறுமதி மாறியதையும் அத்தோடு அந்த பணத்தினால் கொள்வனவு செய்யக்கூடிய சக்தி மாறுபடுவதையும் காணலாம்.

மேலும் இவ்வாறு ஒவ்வொரு அரசாங்கமும் தனது நாட்டில் புழக்கத்திற்காக அச்சடித்த நோட்டுக்களும் நாணயங்களும், தங்கம், வெள்ளி நாணயங்கள் போன்று அல்லாது அந்த நாணயம் அதனுள் அடங்கியுள்ள உலோகமோ, காகிதமோ, கொண்டு பெறுமதிபடாது அரசாங்கம் விதித்த பெறுமதி மட்டுமே அதனுள் இருக்கின்றது. இதனை 1970ம் ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் ரூபா. 100/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா. 50/= நோட்டுகளை பெறுமதி இழக்கச்செய்ததன் மூலம் காணலாம்.

அத்தோடு இவ்வாறு அரசாங்கங்கள் வெளியிடும் நாணயமானது பெயரும், பெறுமதியும், வேறுபடுவதைக் காணலாம். இஸ்லாமானது அகில உலக மதம் என்பதனாலும் எத்தகைய பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்கக்கூடிய ஒரு அடிப்படை சட்டவிதிகளுக்க அமைவாக இருப்பதால், ஒவ்வொரு நாட்டினதும் ஒவ்வொரு காலத்தினதும் பணத்தின் பெறுமதி ஏற்ற இறக்கம் செய்யப் படுவதன் காரணமாக தங்கம், வெள்ளி அடிப்படையில் ஸகாத் கணிப்பிடுவது சிறந்தது என்பதைக் கூறலாம்.

36.கேள்வி:-

ஒருவர் ஸகாத் விதியாகும் ஒரு பொருளை வைத்திருந்து நிஸாப்பை அடைந்து அதன்பின்பு சிலமாதங்களில் வேறொரு ஸகாத் விதியாகும் பொருளை வாங்குகிறார். உதாரணமாக 01-09-1412 இல் 25 பவுண் நகையை ஒருவர் வைத்திருந்து பின்னர் 15-12-1412 இல் ரூபா 120.000/= க்கு விற்று வியாபாரத்தை தொடங்குகிறார். இவரது ஸகாத் விதியாகும் முறையை விளக்கவும்?

பதில் :-

ஸகாத் ஆனது ஒவ்வொரு மூலயத்தினதும் (Source) வெவ்வேறு முறையில் கணிப்பிடப்படுகிறது. எனவே, தங்கத்தினை அவர் ஒருவருடம் பூராக வைக்காதிருந்ததன் காரணமாக அதற்கு ஸகாத் விதியாவது இல்லை. ஆனால் வியாபாரப் பொருட்கள் ஸகாத் விதியாகும் நிஸாப்பை எய்து இருந்தால் நிஸாப்பை எய்திய ஒரு வருடத்தில் கணக்குப்பார்த்து ஸகாத் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கம், வெள்ளிமீது ஸகாத் விதியாது

**37.கேள்வி:-**

தங்கம், வெள்ளி போன்றவற்றில் ஸகாத் விதியாகும் ஆரம்ப அளவு யாது?

பதில் :-

தங்கத்தின் 20 தினார் பெறுமதி அதாவது 85 கிராம் (10.625 பவுண்) பெறுமானமுள்ளதை ஒருவர் ஒருவருடம் பூராகவும் வைத்திருந்தால் $2^1/_2$ % ஸகாத் கொடுக்க வேண்டும். இங்கு 10.625 பவுணுக்கு மேல் உள்ள தொகைக்கு அல்லாது முழு தங்கத்ததின் பெறுமதிக்கும் $2^1/_2$ % ஸகாத் கொடுக்க வேண்டும்

உதாரணமாக ஒருவரிடம் 25 பவுண்கள் ஒருவருடம் பூராக இருந்தால் அதன் அன்றைய பெறுமதியில் (ஸகாத் விதியாகும் திகதியன்று) ஸகாத் கொடுக்க வேண்டும்.

இங்கு வெள்ளியை பொறுத்தவரையில் 200 திர்ஹம் என்பது 595 கிராம்க்கு சமமானது. இன்றைய விலையில் 1 கிராம் வெள்ளி இலங்கைநாணயத்தின்படி ரூபா 14/ என்றபடி ரூபா 8330/ க்கு மேல் பெறுமதி உள்ள வெள்ளி வைத்திருப்பவர்கள் முழு தொகையிலும் $2^1/_2$ % ஸகாத் கொடுக்கப்படல் வேண்டும்.

**38.கேள்வி:-**

ஒருவரிடம் தங்கமாக 10.625 பவுணுக்கு குறைவாகவும், அத்தோடு வெள்ளியில் 595 கிராம்க்கு குறைய இருப்பின் அவைமீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸகாத் விதியாகுமா?

பதில் :-

இங்கு தனிப்பட்ட முறையில் தங்கத்திற்கோ, வெள்ளிக்கோ ஸகாத் கொடுக்க தேவைப்படுவதில்லை. ஏனெனில் இவ்விரண்டையும் ஸகாத் கணிப்பிடும் போது வெவ்வேறாகக் கணிக்க வேண்டும். ஏனவே, தங்கம் அல்லது வெள்ளி தனித்தனியே நிஸாப்பை அடையாததன் காரணமாக ஸகாத் விதியாகாது.

39.கேள்வி:-

ஒருவரது சுயதேவைக்காக உள்ள நகைக்களுக்கு ஸகாத் உண்டா?

பதில் :-

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி அணியும் நகைகளுக்கு ஸகாத் இல்லை. ஆனால் இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி சகலநகைகளுக்கும் ஸகாத் கொடுக்கப்பட வேண்டும்.

40.கேள்வி:-

தங்கம், வெள்ளி எனபன பாத்திரங்கள் போன்று வேறு அமைப்பில் காணப்பட்டால் அவைமீது ஸகாத் உணடா?

பதில் :-

தங்கம், வெள்ளி எந்த ரூபத்தில் இருந்தாலும் அவை நிஸாப்பை அடையுமாயின் ஸகாத் கொடுக்கப்பட வேண்டும்.

41.கேள்வி:-

ஒருவரது தங்கம் கையிருப்பு கீழ் வருமாறு ஒருவருடம் உள்ளது(01.01.1412)

| | | |
|---|---|---|
| தங்கத்தின் பெறுமதி | ரூபா | 200.00/= |
| அவரது கடன் | ரூபா | 175.000/= |

வேறு சொத்துக்கள் இல்லை 01.01.1411 திகதி தங்கத்தில் நிஸாப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைகிறார். ஸகாத்தை கணிப்பிடுக.?

பதல் :-

இங்கு அவரது தேறிய சொத்து ரூபா. 25,000/= ஆகும். அதாவது சொத்து ரூபா. 200,000/=லிருந்து ரூபா. 175,000/=க்கு கடன் கழிக்கப்பட வேண்டம். மிகுதி ரூபா 25,000/= நிஸாப்பை அடையாததால் ஸகாத் இல்லை.

42.கேள்வி:-

ஒருவரிடம் ரூபா 10,000/= பெறுமதியான தங்கநகை இருக்கிறது. இவர் ரூபா 100,000/= பெறுமதியான வெள்ளியினை பின்னர் வாங்குகிறார். ஸகாத் எவ்வாறு கணிப்பிடப்பட வேண்டும்?

பதில் :-

இங்கு தங்கமும் வெள்ளியும் சேர்த்து ஸகாத் விதியாகாது. இங்கு வாங்கியவெள்ளி ஒருவருடம் பூராவும் அவரிடம் இருந்தால் ஒருவருடத்தின் பின்பு அதன் சந்தைப் பெறுமதிக்கு ஸகாத் கொடுக்க வேண்டும். தங்கம் நிஸாப்பை அடையாத நிலையில் ஸகாத் விதியாவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணம்

43.கேள்வி:-

பணத்தின் நிஸாப் அளவு யாது?

பதில் :-

நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் தங்கநாணயங்களும், வெள்ளி நாணயங்களும் புழக்கத்தில் இருந்தன. தங்கநாணயத்தை மிஸ்காள் (தினார்) எனறும் வெள்ளி நாணயத்தை திர்ஹம் என்றும் கூறினார்கள். அத்தோடு 200 திர்ஹமும் 20 தினார் பெறுமதி அளவில் இருந்தன. இந்நிலமை பலநூற்றாண்டுகள் இருந்தது. இங்கு ஒருவரது பணம் தங்கநாணயம் 20 தினார் அல்லது வெள்ளிநாணயம் 200 திர்ஹமை விடக்குறைவாக இருந்தால் ஸகாத் விதியாகாது. அதாவது இதுதான் ஆரம்ப நிஸாப் அளவாகும்.

தங்கநாணயத்தை எடுத்துக் கொண்டால் ஒரு மிஸ்காள் (தினார்) என்பது 4.25 கிராம் ஆகும். இதன்படி 20 மிஸ்காள் 85 கிராம் ஆகும். எனவே, 85 கிராம் என்பது 10.625 பவுண்கள். ஆகும். எனவே, இன்றைய சந்தைப்பெறுமதி ஒரு பவுண் ரூபா. 5,800/= என இலங்கை நாணயப்படி எடுத்துக் கொண்டால் ரூபா.61,625/=க்கு மேல் பணம் இருந்தால் ஸகாத் விதியாகும்.

மேலும் தங்கத்தின் பெறமதி கணிப்பிடப்படும் போது கரட் என்னும் அளவிற்கேற்ப பெறுமதி மாறுபடுவதைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

வெள்ளியைப் பொறுத்தவரையில் ஒரு திர்ஹம் என்பது 2.975 கிராமுக்கு சமனாகும். எனவே, 200 திர்ஹம் எனபது 595 கிராம் வெள்ளி ஆகும். அதன்படி இலங்கையின் இன்றைய வெள்ளியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைப் பெறுமதியின் படி ஒரு கிராம் வெள்ளியின் பெறுமதி ரூபா.14/= ஆகும். எனவே, வெள்ளி நாணயம் அல்லது வெள்ளி (ரூபா.14 X 595)8,330/= க்கு மேல் இருந்தால் ஸகாத் விதியாகும்.

இங்கு தங்கம் அல்லது வெள்ளியின் பெறுமதிக்கு இவ்வாறு நிஸாப் அளவைக் கணிப்பிட்டாலும் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்தது போல் அல்லாது நோட்டுக்கள் பித்தளை, ஈயம் போன்றவற்றினாலான நாணயக்குற்றிகள் புழக்கத்தில் வந்தன. அதாவது தங்கம், வெள்ளி நாணயம் போன்று இந்த நாணயங்கள் அந்த நாணயத்தின் அல்லது நோட்டின் வகையினால் பெறுமதிபடாது அரசாங்கம் விதித்த பெறுமதி உள்ளதாக புழக்கத்தில் உள்ளது. எனவே, இந்த நாணயங்கள் மீது ஸகாத் விதியாகம் பொழுது அவை தங்கம் அல்லது வெள்ளி நாணயங்களின் பெறுமதிக்கு மாற்றீடு செய்து கணிப்பிட்டு அதன்பின் ஸகாத் விதியானால் ஸகாத் கொடுக்க வேண்டும்.

ஆனால் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் போலல்லாது 20 தினார் தங்கநாணயமும் 200 திர்ஹம் வெள்ளி நாணயமும் பெறுமதியில் பெரியவித்தியாசம் காணப்படுகிறது. எனவே, பணத்தின்மீது ஸகாத் கணிப்பிடும் போது தங்கத்தின் பெறுமதியை அளவுகோலாக எடுப்பதா, வேள்ளியின் பெறுமதியை அளவுகோலாக எடுப்பதா எனற பிரச்சினை எழுகின்றது. அதாவது இன்றைய நிஸாப்பை கணிப்பிடும் பொழுது தங்கம் 20 தினார் இலங்கை நாணயப்படி ரூபா. 61,625/= ஐ அடிப்படையிள் கொண்டதா அல்லது 200 திர்ஹம் வெள்ளி இலங்கை நாணயத்தின் பெறுமதி ரூபா.8,330/= ஐ அடிப்படையிள் கொண்டதா கணிப்பிடுவது என்ற பிரச்சினை எழுகின்றது இங்கு கீழ்வரும் வாதங்கள் முன்வைக்கப்படுகிறது.

பணத்திற்கு வெள்ளியின் பெறுமதி நிஸாப் ஆக கொண்டால் ரூபா.8,330/= ஒருவருடம் பூர்த்தியாக இருந்தால் ஸகாத் கொடுக்க வேண்டும். இன்றைய பொருளாதார நிலையில் ரூபா.8,330/= என்பது அதனை உள்ளவர் ஒரு வசதியான தன்னிறைவு உடையவர் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறமுடியாது என்று கூறி தங்கத்தின் இன்றைய பெறுமதியான ரூபா 61,625/= நிஸாப் ஆக பணத்தின்மீது கொள்ள வேண்டும் என்பது கூறப்படுகின்றது.

ஆனால் தங்கமோ, வெள்ளியோ பணத்தின் அளவீடாக கொளளும் போது நாயகம் (ஸல்) அவர்கள் தங்கத்தனை அல்லது வெள்ளியின் பெறுமதியே கணிப்பிடப்பட வேண்டும் எனறு கூறிய அளவிற்கு எடுப்பதும், தங்கத்தின் பெறுமதிமட்டும் எடுப்பது எனபது சுய கருத்தை இஸ்லாத்தினுள் நுழைப்பது என்றும் கூறுகின்றனர்.

ஆனால் தங்கம் வெள்ளியை அல்லது ஏனைய பொருட்களின் நிஸாப் அளவு பெறுமதி அதாவது 5 ஒட்டகம் 30 மாடு அல்லது 80 ஆடு என்பன போன்றவற்றின் பெறுமதியை ஒத்துப்பாத்த்தால் 20 தினார் தங்கத்தின் பெறுமதி ஆரம்ப நிஸாப் அளவாக கொள்வதை கலாநிதி யூசுப் கர்லாவி அவர்கள் ஏற்கிறார்.

எனவே, 20 தினார் தங்கத்தின் பெறுமதிக்கேற்ப ரூபா. 61,625/= நிஸாப்பாக எடுப்பதே நல்லது.

**44. கேள்வி:-**

ஒருவரிடம் ஸகாத் விதியாகும் பணம் இருந்து ஒருவருடம் பூர்த்தியானால் ஸகாத் விதியாகும் வருடத்தினுள் சமபாதிக்கும் பணம் மீது ஸகாத் கொடுக்க வெண்டுமா?

உதாரணமாக 200 திர்ஹம் பெறுமதியான பணம் இருந்து அந்த வருடத்தில் இன்னும் 200 திர்ஹம் பெறுமதியான் பணம் சம்பாதித்தால் 200 திர்ஹத்தை விட அதிகமான தொகை கிடைத்த அன்று ஸகாத் விதியாகுதம் காலம் ஆரம்பமாகிறது. அந்த திகதியிலிருந்து ஒர வருடத்தில் 400 திர்ஹத்திற்கு ஸகாத் கொடுக்க வேண்டும். இது இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்தாகும்.

**45. கேள்வி:-**

ஊழியர் சேமலாபநிதி (E.P.F) போன்ற நிதி சேர்ந்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை நிஸாப்பை அடைந்திருந்தால் அதன்மீது எவ்வாறு ஸகாத் கொடுப்பது.?

பதில் :-

இங்கு அந்தப் பணம் நிச்சயமாக கிடைக்கும் என்றிருந்தால் ஸகாத் விதியாகம் திகதியிலிருந்து ஒவ்வொரு வருடமும் அவரது கணக்கில் உள்ள நிலுவை தொகைக்கு ஸகாத் கொடுக்க வேண்டும்.

இந்தப் பணம் கிடைப்பது நிச்சயபடுத்த முடியாது இருந்தால் கிடைத்தபின்பு ஒருவருடத்துக்கு மட்டும் ஸகாத் கொடுக்கலாம். இது இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்தாகும்.

ஆனால் இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி இவ்வாறான் நிலையில் ஸகாத் கொடுக்க தேவையில்லை. ஆனால் ஊழியர் சேமலாப நிதி (E.P.F) நிச்சயமாகக் கிடைக்கக்கூடிய ஒரு நிதியாகும் என்பத நோக்கத் தக்கது. (கடனுக்கு ஸகாத் விதியாகும் முறை வேறு ஒரு இடத்தில் உள்ளது தயவுசெய்து பார்க்கவும்)

46.கேள் வி:-

ஒருவரது பணம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது. அதாவது அந்தப்பணத்திற்கு அல்லது இவ்வாறு கிடைப்பது சந்தேகமான சொத்துக்கு எவ்வாறு ஸகாத் கொடுப்பது.?

பதில் :-

இது ஒரு சந்தேகமான கடன் போன்றதாகும். அதாவது இங்க கிடைக்க வேண்டிய பணம் அல்லது சொத்து நிச்சயமாக கிடைக்கும் என்று இல்லை. எனவே, இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி இந்தப்பணம் அல்லது சொத்து கிடைத்தவுடன் ஒரு முறை ஸகாத் கொடுத்தல் போதுமானது. இமாம் அபூ ஹனிபா(ரஹ்) அவர்களின் கருத்துப்படி இதற்கு ஸகாத் கொடுப்பது கட்டாயம் இல்லை.

47.கேள் வி:-

சில வேளை அரசாங்கம் எடுத்த சொத்துக்களுக்கு நஷ்டஈடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைப்பதற்குப் பலகாலம் செல்கின்றது. இவ்வாறான நிலமையில் எவ்வாறு ஸகாத் கொடுக்க வேண்டும்.?

பதில் :-

இதுவும் மேற்குறிப்பிட்ட நிலை போல் கிடைப்பது சந்தேகமான கடன் போல தோன்றினாலும் உண்மையில் அரசாங்கம் தரவிருப்பமான ஒரு தொகை தெரியவந்தவுடன் ஸகாத் விதியாகின்றது. எனவே, அரசாங்கத்தின் கிடைக்க வேண்டிய தொகை உறுதியாக தீர்மானிக்கப்படாவிடினும் அரசாங்கம் நஷ்டஈடாக கொடுக்க இருக்கும் தொகைக்கு ஒவ்வொரு வருடமும் ஸகாத் கொடுக்க வேண்டும். அத்தோடு அந்தப்பணத்தொகை தீர்மானிக்கப்பட்டதன் பின்பு அதற்குறிய ஸகாத்தினை கொடுக்க வேண்டும்.

மேலும் இங்கு காலதாமதத்துக்காக கிடைக்கும் வட்டிக்கு ஸகாத் கொடுக்க தேவையில்லை. ஏனெனில் வட்டியானது இஸ்லாத்தில் தவிர்க்கப்பட்டதொன்றாகும்.

48.கேள்வி:-

சேமிப்பாக வெளிநாட்டுக்காசாக ஒருவர்(டொலர், ரியால் போன்றன) வைத்திருந்தால் ஸகாத் விதியாகும் முறையாது?

பதில் :-

பணம் என்ற வகையில் உள்நாட்டு வெளிநாட்டுப் பணத்தின் பெறுமதி நிஸாபை அடையுமாயின் ஒரு வருடத்தில் ஸகாத்தைக் கணிப்பிட்டு கொடுக்க வேண்டும். ஸகாத் கொடுக்கும் பொழுது வெளிநாட்டுக் காசின் உள்நாட்டுப் பெறுமதி பார்க்க வேண்டும். அத்தோடு உள்நாட்டுப் பணத்தையும் இதனுடன் சேர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாபாரப் பொருட்கள்

49.கேள்வி:-

உற்பத்தி செய்யப்படும் ஒரு தொழிற்சாலையயில் (Factory) உள்ள மூலப்பொருள் (Raw materials) மீது ஸகாத் விதியாகின்றனவா?

பதில் :-

மூலப்பொருளும் வியாபாரப் பொருள் போன்றே கணிக்கப்பட்டு அதற்குறிய ஸகாத் கொடுக்க வேண்டும்..

50.கேள்வி:-

ஒருவர் 5 வருட வாடகையாக ரூபா.500,000/= ஒரே முறையில் கொடுத்து, 5 வருடத்திற்கு ஒரு கடையை வியாபாரத்திற்காகப் பெறுகிறார். இந்த கடையில் வர்த்தகம் நடை பெறும் போது ஸகாத் எவ்வாறு விதியாகின்றது?

பதில் :-

ரூபா. 500,000/= கொடுப்பது வாடகை முற்பணமாக, பின்னர் திருப்பி கிடைக்காததாக இருந்தால் அதன்மீது கொடுத்தவர் ஸகாத் கொடுக்க தேவையில்லை. ஆனால் ரூபா. 500,000/= வாடகையாக அன்றி வாடகை வைப்பு பணமாக கொடுத்திருந்தால் அதற்கு கொடுத்தவர் ஸகாத் கொடுக்க வேண்டும். (வாடகையைப் பெறுபவரது நிதிநிலைமைக்கு ஏற்ப தான் திருப்பிச் செலுத்தத் தேவையற்ற வைப்பின் மீது ஸகாத் விதியாகின்றது)

51.கேள்வி:-

ஒருவரது ஸகாத் விதியாகும் வியாபாரப்பொருள் ஆரம்ப நிஸாப்பை அடைந்தவுடன் ஸகாத் விதியாகும் காலம் ஆரம்பமாகிறது. ஆனால் இவ்வாறு விதியாகும் காலம் ஆரம்பமாகிய திகதியிலிருந்து ஒரு வருடத்தினுல் நிஸாப்பின் அளவை விட அவரது வியாபாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் (Stock) குறைகிறது. இவ்வாறான நிலமையில் ஸகாத் விதியாகும் முறையை விளக்கவும்.?

மேலும் ஒருவரது வியாபாரப்பொருள் கீழ்வருமாறு அமைந்துள்ளது.

| திகதி | வியாபாரப்பொருளின் பெறுமதி |
|---|---|
| 01.04.1410 | 70,000/= |
| 01.06.1410 | 55,000/= |
| 01.07.1410 | 58,500/= |
| 01.04.1411 | 72,000/= |
| 01.07.1411 | 13,000/= |
| 01.04.1412 | 73,000/= |

குறிப்பு:-

(அ) வியாபாரத்தில் கையிருப்பில் பணம் இல்லை.

(ஆ) வியாபார பொருள் சந்தைப் பெறுமதியில் கணிப்பிடப்பட்டது.

பதில் :-

ஒருவரது வியாபாரப் பொருள் நிஸாப் அளவை எய்தி ஒருவருடம் பூர்த்தியாவதற்குள் நிஸாப் அளவை விட குறைந்தால் ஸகாத் விகியாகும் புதிய காலம் ஆரம்ப நிஸாப்பை அடைந்த புதிய திகதியாகும். இது இமாம் ஷாபி (ரஹ) அவர்களின் கருத்தாகும்.

இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி புதிய திகதி கணிப்பிடாது ஸகாத் விதியாகும் வருடம் ஆரம்பமாகி ஒரு வருடத்தில் ஸகாத் கொடுக்க வேண்டும். இடையில் அவரது வியாபாரப் பொருள் நிஸாப்பை விட குறைந்திருந்தாலும் சரியே.

இதன்படி தரப்பட்ட கேள்வின்படி 01-04-1410 இல் ஸகாத் விதியாகும் காலம் ஆரம்பமாகி 01-04-1411 இல் ரூபா72,000/=இற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸகாத் கொடுக்க வேண்டும் இது இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்தாகும். ஆனால் இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி 01-04-1412 இல் ரூபா. 73,000/=க்கு ஸகாத் கொடுக்க வேண்டும்.

52.கேள்வி:-

வியாபாரப் பொருள் அல்லது தங்கம், வெள்ளி போன்றன சந்தைப் பெறுமதியில் ஸகாத் கொடுக்க வேண்டும் என கூறுகிறார்களே, சந்தைப் பெறுமதி என்றால் என்ன?

பதில் :-

ஒரு பொருளின் சந்தைப்பெறுமதி என்பது எத்தகைய தலையீடும் அற்றநிலையில் சந்தையில் அதற்கு சுதந்திரமாக கிடைக்கக்கூடிய விலையாகும். இது தனத மனச்சாட்சிக்கேற்பவும் சந்தை பொருளை சந்தையில் கையாலும், ஒருவரது ஆலோசனைப்படியும் தீர்மானிக்கலாம்.

53.கேள்வி:-

ஒருவரது ஸகாத் விதியாகி ஒருவருடம் பூர்த்தயாகுமென்று வியாபாரப் பொருட்களுடன் வியாபாரத்திலுள்ள முதலிட்ட தொகையொன்று பணமாகவும் காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் ஸகாத் விதியாவது எவ்வாறு? உதாரணமாக

| திகதி | வியாபாரப் பொருள் (Stock) | கையிருப்பிலுள்ள பணம் (Cash In Hand) |
|---|---|---|
| 01-07-1410 | 60,000/= | 3,000/= |
| 01-07-1411 | 68,000/= | 1,500/= |

ஸகாத் கணிப்பிடுக.

பதில் :-

ஒருவரது ஸகாத் விதியாகும் வியாபாரப் பொருள் நிஸாப்பை எட்டியதா எனப்பார்ப்பதற்கும் ஸகாத்தை அளவிடுவதற்கும் வியாபாரப் பொருட்களுடன் அன்று உள்ள வியாபாரத்தில் கையிருப்பிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் வியாபாரப் பொருளுடன் சேர்க்கப்படுகிறது.

இங்கு இதன்படி 01-07-1411 அன்று ரூபா.68,000/= ரூபா.1000/=ரூபா.69,000/=க்கு ஸகாத் கொடுக்க வேண்டும். இங்கு வியாபாரப் பொருளே பணமாக மாறி உள்ளது.

54.கேள்வி:-

ஸகாத் கணிப்பிடும் போது வியாபாரப் பொருட்களின் பெறுமதி எவ்வாறு கணிப்பிடப்படும்?

பதில் :-

கையிருப்பிலுள்ள பொருட்களின் பெறுமதியானது வாங்கிய விலையிலன்றி அதன் சந்தை பெறுமதியிலேயே கணிப்பிடப்படும். அதாவது அன்றைய தினம் அந்தப்பொருளை சந்தையில் விற்பதாயின் கிடைக்கக் கூடிய விலையாகும். எனவே, பொருளை கொள்வனவு செய்த விலையை விட அது கூடுதலாகவும் அல்லது குறைவாகவும் இருக்கலாம்.

55.கேள்வி:-

மேற்குறித்த பதிலின்படி சந்தைப் பெறுமதியில் வியாபாரப் பொருளை கணிப்பது கற்பனை இலாபத்திற்கம் ஸகாத் கொடுப்பது போல் உள்ளது விளக்கம் தரவும்.

பதில் :-

ஒருவரது வியாபாரப் பொருள் அவரது சொத்தாகும். சந்தை விலைப்படி வியாபாரப் பொருளைக் கணித்தால் உண்மையில் அவரது சொத்தின் பெறுமதி விளங்கும். அத்தோடு ஸகாத் ஆனது உண்மை சொத்தின் மீது செலுத்தப்பட வேண்டும். மேலும் சந்தைப் பெறுமதி எப்பொழுதும் ஒரு பொருளை வாங்கிய விலையிலிருந்து வேறுபடும். அத்தோடு வியாபாரி விற்பனைக்காக இலாபம் பெற சந்தைப் பெறுமதியை விட குறைவாகவே கொள்வனவு செய்வார், அத்தோடு அந்தப்பொருள் பெறுமதி குறைந்தால் (அதாவது பழுதாதல் போன்ற காரணத்தினாலும்) அதற்கேற்ப பொருளின் பெறுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பிடப்படுகிறது. எனவே உண்மையான ஒருவரது வியாபாரப் பொருளின் செல்வநிலை சந்தைப் பெறுமதியிலே கணிப்பதால். மட்டுமே கணிக்கலாம்.

56.கேள்வி:-

ஒரு மனிதனது சொத்தினை வேறு ஒருவர் அபகரித்துக் கொண்டிருந்து உரியவர் காலதாமதித்து அந்த சொத்துக்களை பெற்றுக் கொண்டால் ஸகாத் விதியாகின்றனவா?

பதில்:-

அவரது சொத்து இல்லாமல் இருந்த காலத்திற்கு ஸகாத் கொடுக்கப்பட தேவையில்லை.

57.கேள்வி:-

ஒருவரது வர்த்தப பொருள் இருப்பு கிழ்வருமாறு தரப்படுகின்றது. அவரது ஸகாத் தொகை எவ்வளவு?

| திகதி | | கையிருப்பிலுள்ள காசுடன் |
|---|---|---|
| 01-04-1412 | வத்த்தகப்பொருள் | ரூபா.65,000/= |
| 01-04-1413 | " | ரூபா.110,000/= |

எனவே ஸகாத் கொடுக்க வேணடியது ரூபா.110,000/=மீதாகும். ஆகவே ஸகாத் (ரூபா.110,000 X $2^1/_2$ %) ரூபா.2,750/= ஆகும்.

58.கேள்வி:-

ஒருவர் ஒரு வியாபாரத்தில் முதலிட்டு அவரது கணக்குகள் குறிப்பிட்ட திகதிகளில் கீழ்வருமாறு உள்ளன.

| திகதி | 01-04-1410 | | 01-04-1411 |
|---|---|---|---|
| முதலிட்டது | 1,000,000/= | தளபாடம் | 2,000,000/= |
| தளபாடம் | 2,000,000/= | வாகனம் | 5,000,000/= |
| வாகனம் | 5,000,000/= | வியாபாரப் பொருள்கையிறுப் | 400,000/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரப்
பொருள்கையிருப்பு 300,000/= காசுகையிருப்பு 50,000/=

ஸகாத்தை கணிப்பிடுக.

பதில் :-

01-04-1410 இல் ஸகாத் விதியாகும் காலம் ஆரம்பமாகி 01-04-1411இல் ஸகாத் கொடுக்க வேண்டும்.

இங்கு 01-04-1411ம் திகதி ஸகாத்தாக கீழ்வருமாறு கொடுக்க வேண்டும்.

| | |
|---|---|
| கையிருப்பிலுள்ள வியாபாரப் பொருள் | ரூபா. 400,000/= |
| பணமாக வியாபாரத்தில் அன்றைய திகதியில் கையில் இருந்தது | ரூபா. 50,000/= |
| | 450,000/= |

இங்கு ரூபா. 450,000/=X $2^1/_2$% = ரூபா. 11,000/= செலுத்த வேண்டும்.

**59.கேள்வி:-**

ஸகாத் கணிப்பிடும் போது கடன் பற்றி எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?

**பதில் :-**

இஸ்லாமிய அறிஞர்கள் கடன்களை இரண்டு வகையாக வகுத்து அவைகள்மீது ஸகாத் விதியாவது பற்றி கூறியுள்ளார்கள்

(அ) நிச்சயமாக திருப்பிகிடைக்குமென எதிர்பார்க்கப்படும் கடன்கள்.

(ஆ) திருப்பி கிடைப்பது நிச்சயமில்லாத கடன்கள். ஏனெனில் கடன்காரர் கடனை தீர்க்க வசதியில்லாதிருந்தால் அல்லது கடன்காரர் கடனை காலதலமலப்படுத்தல், போன்ற நிலையில் கடன் கிடைப்பது சந்தேகமே.

(அ) நிச்சயமாக திருப்பி கிடைக்குமென எதிர்பார்க்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்கள் விடயத்தில் கடன் கொடுத்தவர் (Creditor) அதற்குறிய ஸகாத்தை கொடுக்க வேண்டுமென இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களும், இமாம் ஷாபி (ரஹ்) அவர்களும் கூறியுள்ளார்கள்.

இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி கடன் அந்தக் கடன் தொகை கடனாக இருந்த காலத்திற்கு வைப்புத் தொகை (ஹுநிழளவைள) போல கணிப்பிட்டு கடன் கொடுத்தவர் ஸகாத் கொடுக்க வேண்டும்.

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி இது ஒரு வப்புத்தொகை (Deposits) போன்றது. ஸகாத் ஒவ்வொரு வருடமும் நிஸாப்பைப்பார்த்து கொடுக்க வேண்டும். கடன் திருப்பிக் கிடைக்கும் வரை ஸகாத்தை காலதாமதப்படுத்த முடியாது.

(ஆ) இரண்டாம் கடன் வகையாகிய நிச்சயமற்ற கடன்கள் விடயத்தில் இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி அத்தகைய கடன்கிடைத்தபின் ஒருவருட ஸகாத் செலுத்தினால் போதுமானது. இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்கள் இத்தகைய கடன்களுக்கு ஸகாத் கொடுப்பது கட்டாயம் இல்லை எனக் கூறுகிறார்கள்.

60.கேள்வி:-

பங்குடமை வியாபாரத்தில் பங்குடைமையின் மொத்தச் சொத்தின் மீது மொத்த பெறுமதிமீது ஸகாத் விதியாகின்றனவா?

பதில்:-

ஸகாத் ஆனது தனித்தனியே ஒவ்வொருவரதும் சொத்தின் மீது விதியாவதால் பங்குடமை (Partner ship) மீது விதியாவது இல்லை. ஆனால் பங்காளரது ஸகாத் விதியாகும் பொருள் நிஸாப்பை அடைந்து ஒரு வருடத்தில் ஸகாத் விதியாகும்.

61.கேள்வி:-

ஸகாத் கொடுக்கும் பொழுது ஒருவரது வர்த்தகசரக்கு கணிப்பிடும் போது உத்தேச கணிப்பீடுமூலம் அதனை கணித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸகாத் கொடுக்கலாமா?

பதில் :-

ஸகாத் ஆனது ஒருபொருள் மீது விதியாவதற்கு அதன் நிஸாப்பினை அடைய வேண்டும். மேலும் அந்தப் பொருள் இவ்வளவு தான் இருக்கிறது என்பதை உறுதியாக தெரிந்து அதன்படி ஸகாத் கணிப்பிட்டு ஸகாத் கொடுக்க வேண்டும். உத்தேச கணக்கு செல்லுபடியாகாது.

அத்தோடு இது ஒரு இறைவணக்கம் (இபாத்) ஆக இருப்பதனால் இறைவன் கூறியபடி உரியமுறையில் செய்ய வேண்டும். ஆனால் வத்த்தக சரக்கு கணிப்பிடப்பட முடியாது மிக விஷேட நிலையில் உத்தேச கணக்கிற்கு ஸகாத் கொடுக்கலாம். (உதாரணம் : நாட்டில் உள்நாட்டுக் கலவரம் போன்றன).

62. கேள்வி:-

ஒருவர் வர்த்தகம் தொடங்கி வர்த்தக பொருள் ஆரம்ப அளவு (நிஸாப்பை) அடைந்த பின்னர், அதாவது சந்திரவருடம் ஒன்று கழிந்த பின்னர்தான் அவரது வியாபார சரக்குமீது ஸகாத் கடமையாகிறது. எனவே, ஒரு வருடத்தின்பின் ஒருவரது வியாபாரச் சரக்கு (வியாபாரத்தில் அன்று கையிலிருந்த பணம் உட்பட) வர்த்தகத்தில் நட்டம் ஏற்பட்டால் ஸகாத் எவ்வாறு கொடுக்கப்பட வேண்டும்?

பதில் :-

உதாரணமாக ஒருவர் வர்த்தகத்தை 01-04-1410 இல் தொடங்குகிறார், அவரின் அன்றைய ஐந்தொகை (Balance sheet) கீழ்வருமாறு உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| முதலீடு (Capital A/C) | 413,000 | நிலம், கட்டிடம் (land & Building) | 50,000 |
| | | தளபாடம் (Furniture) | 10,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | | வாகனம் (Motor vehicle) | 150,000 |
| | | வியாபாரப் பொருள் (Trading goods) | 200,000 |
| | | கையிலுள்ள பணம் (Cash in hand) | 3,000 |
| | 413,000 | | 413,000 |

01-04-1411 இல் ஐந்தொகை

| | | | | |
|---|---|---|---|---|
| முதலீடு (Capital A/C) | | 413,000 | கடைகட்டிடம் | 50,000 |
| கழி: நட்டம் (Loss) | (11,000) | | தளபாடம் | 10,000 |
| | | | வாகனங்கள் | 150,000 |
| | | | வியாபாரப்பொருள் | 150,000 |
| | | | கையிலுல்ல பணம் | 2,000 |
| சொந்தசெலவு பற்று | (40,000) | (51,000) | | |
| | | 362,000 | | 362,000 |

மேற்குறிப்பிட்ட உதாரணத்தின்படி குறிப்பிட்ட நபரின் முதலீட்டில் வர்த்தக பொருட்களும், வர்த்தகத்திலுள்ள காசும் ஸகாத் விதியாகின்றது. இதன்படி

01-04-1410 - 200,000 + 3,000 = 203,000/=
01-04-1411 - 150,000 + 2,000=152,000/=

இங்கு 01-04-1411ம் திகதி ஸகாத் கடமையாகிறது. அவரது வர்த்தக பொருள் ஒருவருடம் பூர்த்தியாகியுள்ள தொகையான ரூபா.152,000/= மீது $2^1/_2$% ஸகாத் கொடுக்கப்பட வேண்டும்.

**63.கேள்வி:-**

ஸகாத்தை காலதாமதப்படுத்தி கொடுக்கலாமா? அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் ஒருபொருளின் மீது கொடுக்க வேண்டிய ஸகாத்தினை சிரிது தாமதித்து கொடுக்கலாமா?

பதில் :-

ஸகாத்தை காலதாமாப்படுத்துவது ஹறாமாகும். என்று இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகிறார்கள்.

64. கேள் வி:-

ஒருவரது வியாபாரத்தின் ஐந்தொகை கீழ்வருமாறு உள்ளது. ஸகாத்தினை கணிப்படுக.

ஐந்தொகை (Balance sheet) 01-04-1410ம் திகதிப்படி.

| | | | | |
|---|---|---|---|---|
| முதலீடு (CapitalA/C) | 70,000 | | தளபாடம் | 10,000 |
| | | | வாடகை வைப்பு | 5,000 |
| இலாபம் | 30,000 | | வரவேண்டிய கடன் | 2,000 |
| | 100,000 | | வியாபாரப் பொருள் | 105,000 |
| கழி.பற்று (Drawings) | (20,000) | 80,000 | வங்கியில் நடைமுறைக க/கு மீதி | 6,000 |
| | | | கையிருப்பிலுள்ள பணம் | 22,000 |
| கொடுக்க வேண்டிய கடன்கள் | | 70,000 | | |
| | | 150,000 | | 150,000 |

ஐந்தொகை (Balance sheet) 01-04-1411ம் திகதிப்படி

| | | | | |
|---|---|---|---|---|
| முதலீடு | 80,000 | | தளபாடம் | 10,000 |
| இலாபம் | 40,000 | | வாடகை வைப்பு | 5,000 |
| | 120,000 | | வரவேண்டிய கடன் | 3,000 |
| கழி: பற்று | (20,000) | 100,000 | வியாபாரப் பொருள் | 305,000 |
| | | | வங்கியில் நடைமுறை க/கு மீதி | 4,000 |
| கொடுக்க வேண்டிய கடன் | | 250,000 | கையிருப்பிலுள்ள பணம் | 23,000 |
| | | 350,000 | | 350,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் :-

இங்கு 01-04-1411ம் திகதி ஸகாத் விதியாகிறது அது கீழ் வருமாமறு:-

| | |
|---|---|
| வாடகை வைப்பு | 5,000 |
| வரவேண்டிய கடன் | 3,000 |
| வியாபாரப் பொருள் | 305,000 |
| வங்கியில் நடைமுறை க/கு மீதி | 4,000 |
| கையிருப்பிலுள்ள பணம் | 23,000 |
| | 340,000 |
| கழி:- கொடுக்க வேண்டிய கடன் | (250,000) |
| ஸகாத் விதியாகும் தொகை | 90,000 |

இங்கு 01-04-1411ம் திகதிக்கு ரூபா. 90.000/=க்கு $2^1/_2$% ரூபா. 2,250/= ஸகாத் கொடுக்க வேண்டும். ஆனால் இந்த ரூபா. 90,000/= என்பது நிஸாப் அளவை விட குறைந்திருந்தால் ஸகாத் விதியாவது இல்லை.

இங்கு வாடகை வைப்பு பணத்தையும் வரவேண்டிய கடன்போல் கூட்டப்பட்டுள்ளது. அத்துடன் அது திருப்பி கிடைக்கும் என்ற நம்பிக்கை உடையது. இதே போல் வரவேண்டிய கடனும், கிடைக்கும் என்ற நம்பிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

அத்தோடு வங்கி நடைமுறை கணக்கு மீதியும் வியாபாரத்தில் கையில் இருக்கும் பணமும், வியாபார பொருள் (Stock) போன்று சேர்க்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

மேலும் கொடுக்க வேண்டிய கடன், வியாபாரப் பொருள் அல்லது ஸகாத் கணிப்பிடும் போது சேர்க்கும் சொத்து (மேல் உள்ளது போன்ற) சொத்துக்களுக்காக பெறப்பட்டதாக இருக்க வேண்டும். இதனை கீழ்வரும் உதாரணம் மூலம் விளக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபாடத்தின் மீது ஸகாத் விதியாவது இல்லை. என்பதால் அதனை ஸகாத் கணிப்பின் போது சேர்க்கப்படுவதில்லை.

65.கேள்வி:-

ஒரு வியாபாரியின் கீழ்வரும் ஐந்தொகை (Balance sheet) 01-04-1412ம் திததிக்கு தரப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| முதலீடு | 80,000 | | வாகனம் கொள்முதல் | 200,000 |
| இலாபம் | 50,000 | | தளபாடம் | 10.000 |
| கழி: | 130,000 | | வாடகைக் வைப்பு | 7,000 |
| பற்று | (30,000) | 100,000 | வரவேண்டிய கடன் | 4,000 |
| | | | வியாபார பொருள் | 249,000 |
| கொடுக்க | | | வங்கியில் நடைமுறை | |
| வேண்டிய கடன் | | 400,000 | க/கு மீதி | 5,000 |
| | | | கையிருப்பிலுள்ள பணம் | 25,000 |
| | | 500,000 | | 500,000 |

01-04-1413ம் திகதிப்படி ஐந்தொகை

| | | | | |
|---|---|---|---|---|
| முதலீடு | 100,000 | | வாகனம் | 200,000 |
| இலாபம் | 60,000 | | தளபாடம் | 12,000 |
| | 160,000 | | வாடகை வைப்பு | 7,000 |
| கழி: | | | | |
| பற்று | (35,000) | 125,000 | வரவேண்டிய கடன் | 3,000 |
| | | | வியாபார பொருள் | 118,000 |
| கொடுக்க | | | வங்கி நடைமுறை க/கு மீதி | 6,000 |
| வேண்டிய கடன் | | 375,000 | கையில் பணஇருப்பு | 154,000 |
| | | 500,000 | | 500,000 |

ஸகாத்தை கணிப்பிடுக.

குறிப்பு:- 01-04-1412 இல் கடனில் வாகனம் வாங்க ரூபா. 200,000/= அது 01-04-1413 இல் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

பதில் :-

இவரது ஸகாத் கணிப்பீடு வருமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | 01-04-1412ம் திகதி | 01-04-1413ம் திகதி |
|---|---|---|
| வாடகைவைப்பு | 7,000 | 7,000 |
| வரவேண்டிய கடன் | 4,000 | 3,000 |
| வியாபாரப்பொருள் | 249,000 | 118,000 |
| வங்கிநடைமுறை க/கு மீதி | 5,000 | 6,000 |
| கையில் பணஇருப்பு | 25,000 | 154,000 |
| | 290,000 | 288,000 |
| கழி: | | |
| கொடுக்க வேண்டிய கடன் | (200,000) | (175,000) |
| | 90,000 | 113,000 |

இவர் ஸகாத் ஆக ரூபா. 113,000/=க்கு $2^1/_2$% படி ரூபா 2,825/= 01-04-1413ம் திகதி கொடுக்கப்பட வேண்டும். அத்தோடு சிலமுக்கிய விடயங்கள் வருமாறு:-

(அ) இங்கு வாகனம் வாங்குவதற்காக பெறப்பட்ட கடன் அந்த வாகனம் வியாபார தேவைக்கு பாவிக்கப்படுவதன் காரணமாக(வியாபாரப்பொருளாக அல்லாது) ஸகாத் கணிப்பிடும் போது ஒரு சொத்தாக சேர்தெடுக்கப்படாமையால் அதனை கொள்வனவு செய்யப் பெறப்பட்ட கடனை கழிக்கப்பட முடியாது.

(ஆ) வியாபாரத்தில் முதலீடு செய்த பணம், மேற்கூறப்பட்ட கணிப்பீட்டில் அடங்கும் ரூபத்தில் இருந்திருந்தால் அதன் மீது ஸகாத் விதியாகும்.

(இ) இங்கு வியாபாரப் பொருட்களின் பெறுமதி குறைந்திருந்தாலும் அதாவது வருட ஆரம்பத்தில் ரூபா. 249,000/= ஆக இருந்து ரூபா.118,000/= ஆக குறைந்திருந்தாலும் வியாபாரத்தில் உள்ள ஏனைய பணவிடயங்களை பார்க்கும் போது அது அதிகரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) வரவேண்டிய கடனகள் எதுவும் அறவிடமுடியாத கடன் அல்ல கிடைக்கக் கூடிய கடன என எடுத்து சேர்க்கப்பட்டுள்ளது.

(உ) இங்கு வியாபாரப் பொருள் (stock) ஆனது சந்தைப் பெறுமதியில் (Open market) இல் பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

(ஊ) ஸகாத் விதியாகும் தொகைரூபா. 90,000/= ஆரம்ப நிஸாப்பை விட கூடுதலாக இருக்க வேண்டும்.

66. கேள்வி:-

மேற்கறித்த நபரது 01-04-1414ம் திகதிக்கு ஐந்தொகை வருமாறு:-

| | | | | |
|---|---|---|---|---|
| முதலீடு | 160,000 | | வாகனம் | 200,000 |
| இலாபம் | 70,000 | | தளபாடம் | 12,000 |
| | 230,000 | | வாடகைவைப்பு | 7,000 |
| கழி:பற்று | (85,000) | 145,000 | வரவேண்டிய கடன் | 4,000 |
| கொடுக்க வேண்டிய கடன் | | 300,000 | வியாபாரப் பொருள | 212,000 |
| | | | வங்கிநடைமுறை க/கு மீதி | 7,000 |
| | | | கையிருப்பிலுள்ள பணம் | 3,000 |
| | | 445,000 | | 445,000 |

01-04-1414இல் கொடுக்கப்பட வேண்டிய ஸகாத்தினை கணிப்பிடுக.

| திகதி | 01-04-1413 | 01-04-1414 |
|---|---|---|
| வாடகை வெப்பு | 7,000 | 7,000 |
| வெவேண்டிய கடன் | 3,000 | 4,000 |
| வியாபாரப் பொருள் | 118,000 | 212,000 |
| வங்கி நடைமுறை க/கு மீதி | 6,000 | 7,000 |
| கையிருப்பிலுள்ள பணம் | 154,000 | 3,000 |
| | 288,000 | 233,000 |
| கழி:கொடுக்க வேண்டிய கடன் | (175,000) | (132,000) |
| | 113,000 | 101,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ரூபா.113,000/= வருட முடிவில் அதாவது 01-04-1414 இல் ரூபா.101,000/= ஆகக் குறைந்துள்ளது. எனவே, 01-04-1414ம் திகதி ரூபா. 101,000/=க்கு $2\frac{1}{2}$% ஸகாத்தாக ரூப.2,525/= கொடுக்க வேண்டும்.

67.கேள்வி:-

கொடுக்க வெண்டிய ஸகாத்தை கொடுக்காமல் வரவேண்டிய கடனை அதற்கு ஈடாகக் கழிக்கலாமா?

பதில் :-

அவ்வாறு கழிக்கமுடியாது ஸகாத்தை ஸகாத்தாக கொடுக்க வேண்டும். இது ஒரு இஸ்லாமிய இபாதத்தாகும்.

68.கேள்வி:-

வியாபாரப் பொருள் என்னும் பொழுது வியாபாரத்திற்காக அதாவது விற்பதற்காக வைக்கப்பட்டுள்ள பொருட்கள் அனைததிற்கும் ஸகாத் விதியாகின்றனவா?

பதில் :-

ஸகாத் விதியாகும் வியாபாரப் பொருள் என்பதைப் புரிந்து கொள்ள கீழ்வரும் சந்கர்ப்பத்தைப் பார்க்கலாம்,

(ஆ) ஒருவர் விற்பனைக்காக வைத்திருக்கும் பொருளை கொள்முதல் செய்திருக்கலாம், அல்லது நன்கொடை, பரம்பரை உரித்து மூலம் போன்றவற்றால் பெற்றிருக்கலாம். இங்கு விற்பனைக்காக வைத்திருக்கும் நோக்கம் மட்டும் ஒரு பொருளை வியாபாரப் பொருள் என்று ஸகாத் விதியாகாது.

(ஆ) ஒருவர் ஒரு பொருளை கொள்முதல் செய்து பாவித்துவிட்டு பின்னர் விற்கும் பொழுது அப்பொருள் வியாபாரப் பொருளாகாது. அதே போல் ஒருவரது பரம்பரை உரித்தான பொருளை விற்கும் பொழுது அவை வியாபாரப் பொருள் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல், ஒருவர் விற்பதற்தாக வாங்கிய பொருளை சொந்தபாவனைக்கான வைத்திருக்கும் பொழுது அதன்மீது வியாபார பொருள் என்ற ரீதியில் ஸகாத் விதியாகாது.

எனவே, சாதாரணமாக ஒருவர் வாங்கி விற்றல் வியாபாரம் செய்யும் போது மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களன்றி ஏனைய நிலமையில் வியாபாரப் பொருளுக்கு ஸகாத் விதியாவதை காணலாம். மேலும் சொந்தமாக பாவித்த நிலமையில் ஒரு பொருளை விற்கும் பொழுது ஸகாத் விதியாவதில்லை. ஆனால் பிறர்பாவித்த பொருளை வாங்கிவிற்கும் போது ஸகாத் உண்டு. மேலும் அத்தோடு ஒருவர் ஒரு பொருளை மட்டும் வியாபார நோக்கத்திற்காக வாங்கினால் அத்தோடு அதனை வியாபார நோக்த்திற்காக விற்பதற்காக வைத்திருந்தால் அதன்மீது ஸகாத் விதியாகும்.

69. கேள்வி:-

ஒருவரது ஸகாத் விதியாகக்கூடிய வியாபாரப் பொருட்கள் ஒரு வருட ஆரம்பத்தில் நிஸாப் அளவை எட்டாது இடையில் நிஸாப்பின் எல்லையை விலை அதிகரிப்பு காரணமாக எட்டிவிட்டால் அல்லது வேறுவியாபாரப் பொருள் வருட இடையே சேர்ந்தால் அவரது ஸகாத் எப்பொழுதுமுதல் கணிப்பிடப்பட வேண்டும்? அவரது விபரம் கீழ்வருமாறு தரப்படுகிறது.

வியாபாரப் பொருளின் விபரம்

| திகதி | கையிருப்பிலுள்ள வியாபாரப் பொருளின் சந்தைப்பெறுமதி | சேர்க்கப்பட்டது (விலை அதிகரிப்பு அல்லது வியாபாரப் பொருள் கொள்முதல் செய்யப்பட்டது) | மொத்தம் |
|---|---|---|---|
| 01-04-1410 | 30,000 | - | 30,000 |
| 01-04-1410 | 32,000 | 40,000 | 72,000 |
| 01-04-1411 | 70,000 | 30,000 | 100,000 |
| 01-05-1411 | 80,000 | 40,000 | 120,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் :-

01-05-1410 தொடக்கம் ஸகாத் நிஸாப்பை அடைவதால் 01-05-1411ம் திகதி வியாபாரப் பொருட்களின் பெறுமதியை கணிப்பிட்டு ஸகாத் கொடுக்க வேண்டும், அதன்படி 01-05-1410ம் திகதி இருந்த வியாபாரப் பொருட்கள் ஒரு வருடபூர்த்தியாகும் 01-05-1411ம் திகதி ஸகாத் கொடுக்க வேண்டும். ஸகாத் ஆனது ரூபா. 120,000/=க்கு $2^{1}/_{2}$% ஆகும்.

இங்கு 01-04-1410ம் திகதி நிஸாப்பை அடையவில்லையாதலால் 01-04-1410ம் திகதி ஸகாத் கொடுக்க தேவையில்லை என்பது நோக்கத்தக்கது.

70.கேள்வி:-

ஒருவர் வர்த்தகத்தில் முதலீடுசெய்து வியாபார பொருட்களுக்கு ஸகாத் கொடுக்கும் போது வர்த்தகத்தில் கையிலுள்ள பணத்திற்கும் ஸகாத் கொடுக்க வேண்டுமா?

பதில் :-

வியாபாரப் பொருளே பணமாகவும், வியாபாரப் பொருளாகவும் வர்த்தகத்தில் மாறிமாறி வருகின்றது எனவே, அப்பணமும் வியாபாரப் பொருள் போல் கணிப்பிடப்பட வேண்டும்.

71.கேள்வி:-

தற்போது கணக்கியலில் ஒருவரது வியாபார இலாபநட்ட கணக்குகளை (Trading & Profit &Loss Accoutnt) அல்லது உற்பத்திக் கணக்கு (Manufacturing Account) பார்க்கும் பொழுது வியாபாரப் பொருட்களின் (Stock) அல்லது மூலப் பொருட்களின் (Raw materials) விலையை கொள்முதல் விலை (Purchases Price) அல்லது சந்தை விலையில் (Market price) எது குறைவானதோ அதன்படி கணிப்பிடுவதை காணலாம். ஆனால் ஸகாத் கணிப்பிடும் பொழுது சந்தை விலையில்மட்டும் பெறுமதியை கணிப்பிடுவதால் ஏற்படும் விளைவை விளக்குக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் :-

இதனை கீழ்வரும் உதாரணம் மூலம் விளக்கலாம்.

இங்கு இறுதி இருப்பு:-

கொள்முதல் விலையில் ரூபா. 35,000/=
சந்தை விலையில் ரூபா.40,000/=

என எடுப்போம்.

வியாபார இலாபநட்ட கணக்கு
(Trading & Profit & Liss A/C)

| | | | |
|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 25,000 | விற்பனை | 100,000 |
| கொள்வனவு (வருட ஆரம்பத்தில) | 100,000 | | |
| | 125,000 | | |
| கழி:இருப்பு (வருடஇறுதி) | (35,000) | | (90,000) |
| | | மொத்த இலாபம் | 10,000 |
| | | செலவுகள் | (7,000) |
| | | தேறிய இலாபம் | 3,000 |

ஐந்தொகை (Balance sheet)

| | | | | |
|---|---|---|---|---|
| முதலீடு | 100,000 | | வியாபாரப் பொருள் | 35,000 |
| இலாபம் | 3,000 | | கையிருப்பிலுள்ள பணம் | 66,000 |
| | 103,000 | | | |
| கழி:பற்று | (2,000) | 101,000 | | |
| | | 101,000 | | 101,000 |

இறுதி இருப்பு ரூபா.40,000/=ஆக சந்தைவிலையில் கணித்தால் அதன்படி கணக்குகள் கீழ்வருமாறு அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாபார இலாபநட்ட கணக்கு (Trading & profit & Loss Account)

| | | | |
|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 25,000 | விற்பனை | 100,000 |
| கொள்வனவு | 100,000 | | |
| | 125,000 | | |
| கழி:இறுதி இருப்பு | (40,000) | | (85,000) |
| | | மொத்த இலாபம் | 15,000 |
| கழி:செலவுகள் | | கழி: செலவுகள் | (7,000) |
| | | தேறிய இலாபம் | 8,000 |

## ஐந்தொகை(Balance Sheet)

| | | | | |
|---|---|---|---|---|
| முதலீடு | 100,000 | | வியாபாரப்பொருள் | 40,000 |
| இலாபம் | 8,000 | | கையிருப்பிலுள்ள பணம் | 66,000 |
| | 108,000 | | | |
| கழி:பற்று | (2,000) | 106,000 | | |
| | | 106,000 | | 106,000 |

இங்கு இறுதி இருப்பு பொருள் சந்தை விலையில் கணிப்பிடும் பொழுது ரூபா.5,000/= அதிகரித்துள்ளது. எனவே, அந்த அதிகரிப்புக்கு ஏற்ப இலாபமும் ரூபா.5,000/= அதிகரித்துள்ளது. எனவே, ஒருவர் ஸகாத் கொடுக்கும் பொழுது அவரது வியாபாரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் சந்தைப் பெறுமதியில் கணிப்பிடப்பட வேண்டும். உண்மையில் மேற்குறித்த நபரின ஸகாத் விதியாகும் சொத்துக்களின் பெறுமதி சந்தைப் பெறுமதியில் எடுப்பதால் அவரது உண்மையான செல்வத்தின் அளவு கணிப்பிடப்படுகிறது. அதே போல் ஒருவர் வாங்கிய விலையை விட சந்தைப்பெறுமதி குறைவடையுமாயின் அதன்படி வியாபாரப் பொருளின் பெறுமதி கணிப்பிடப்படும்.

72. கேள்வி:-

ஒருவரது பலவியாபாரங்கள் கீழ் வருமாறு உள்ளது. வியாபாரங்கள் ஸகாத் விதியாகி ஒரு வருடம் 01-08-1410இல் பூர்த்தியாகிறது. ஸகாத்தை கணிப்பிடுக. 01-08-1411 இல் வியாபார பொருள் வருமாறு:-

| கடையின் பெயர் | உரித்து நிலைமை | வியாபாரத்தன்மை | சந்தைப்பெறுமதி படிவியாபாரப் பொருளின் பெறுமதி |
|---|---|---|---|
| (அ) முஸ்லிம் ஸ்டோர்ஸ் | (தனியார் உரிமை) | தேங்காய் வியாபாரம் | 5,000 |
| (ஆ) முஸ்லிம் ட்ரேடர்ஸ் | (தனியார் உரிமை) | துணிமணி வியாபாரம் | 75,000 |
| (இ) முஸ்லிம் என்டபிரைஸஸ் | (தனியார் உரிமை) | இரும்புபொருட்கள் இறக்குமதி | 200,000 |
| (ஈ) முஸ்லிம் கம்பனி | (பங்கு உரிமை) | ஏற்றுமதி | 100,000 |
| | | | 380,000 |

இங்கு ஸகாத விதியாகும் தொகை ரூபா.380,000/= ஆகும்

73. கேள்வி:-

இறக்குமதி வியாபாரம் (Improt) செய்யும் ஒரவரது ஸகாத்தினை கணிப்பிடும் பொழுது அன்றைய திகதியில் இருந்த நாணயக்கடித மிகுதியைச் (Balance of Letter of credit ) சேர்க்க வேண்டுமா?

பதில் :-

நாணயக் கடிதம் (Letter of Credit) என்பது இறக்குமதி செய்யும் போது பொருட்களுக்காக முற்பணமாக அல்லது மொத்தமாக செலுத்தும் தொகை என்பதால் ஸகாத் கணிப்பிடும் போது அதனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிருப்பு பணம் போல் சேர்க்க வேண்டும்.

**74.கேள்வி:-**

திகதி பின்னிட்ட காசோலை (Post dated cheque) ஒருவரது வர்த்தகப் பொருள் கணிப்பீட்டில் எவ்வாறு கணிப்பிடப்படுகிறது?

பதில் :-

ஒருவரது வர்த்தகப் பொருளுடன் அவரது கணக்குப் புத்தகம் காட்டும் வங்கிமீதிக்கு ஏற்ப கடனோ, பணமோ கணக்கில் எடுக்க வேண்டும். ஆனால் வங்கியின் அறவீடுகள் (Charges) உதாரணமாக (செக்புத்தகத்திற்கான கட்டணம் போன்றன)

எனவே, தனது கணக்குப் புத்தகத்தில் சரியான வங்கி மிகுதித் தொகைக்கு ஏற்ப ஸகாத் கணிப்பீட்டில் செல்வாக்கு செலுத்துகிறது.

**75.கேள்வி:-**

ஒருவரது வியாபாரப் பொருள்மீது ஸகாத் கடமையாகி 10-11-1414 ஆம் திகதிக்கு கீழ்வரும் பொருள்மீது ஸகாத் விதியாகிறது.

09-11-1414 திகதி காலை

| | |
|---|---|
| வியாபாரபொருள் சந்தை விலைப்படி | ரூபா.80,000/= |
| கையிருப்பலுள்ள வியாபாரப் பணம் | ரூபா. 4,000/= |
| வங்கிமீதி (காசு) | ரூபா. 2,000/= |

9ம் திகதி மாலை ரூபா. 20,000/= இற்கு 01-12-1414 திகதியிட்ட காசோலைமூலம் ரூபா.20,000/=ற்கு கொள்வனவு செய்கிறார். ரூபா. 20,000/= கொள்வனவு செய்த பொருட்களில் சந்தைப் பெறுமதி ரூபா.26,300/= ஆகும். ஸகாத்தை கணிக்கவும். 09-11-1414 இல் வியாபாரம் செய்யப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கையிருப்பிலுள்ள வியாபாரப் பொருள் | | 80,000 |
| கொள்வனவு செய்த பொருளின் சந்தைப்பெறுமதி | | 26,300 |
| கையிருப்பிலுள்ள பணம் | | 4,000 |
| | | 110,300 |
| வய்கியின்மீதி கீழ்வருமாறு வருகிறது | | |
| இருந்த வங்கிமீதி பின் திகதியிடப்பட்டகாசோலை | | |
| தொகையுடன் சேர்க்கமுன்பு | 2,000 | |
| கழி:காசோலை கொடுத்தது | (20,000) | (18,000) |
| ஸகாத் விதியாகும் தொகை | | 92,300 |

எனவே, வங்கி விடயத்தில் அதன் மீதி எடுக்கும் பொழுது காசோலையிற்கு காசுபோட வேண்டிய தொகையை வங்கிமீதியுடன் சீர் செய்து மிகுதி (Balance) பார்க்க வேண்டும்.

**76.கேள்வி:-**

ஒருவரது வர்த்தகத்தில் ஸகாத் விதியாகும் திகதியன்று தான் கொடுத்த காசோலைகள் வங்கிக்கு கொடுக்கப்படாமல் இருந்தால் அதாவது காசோலை வந்து மாறாமல் இருந்தால் அதுபற்றி என்ன செய்ய வேண்டும்?

**பதில்:-**

இங்கு கொடுத்த தனது காசோலைகள் தனது கணக்கு புத்தகத்தில் பதிந்திருக்க வேண்டும். எனவே வங்கிமீதி வங்கிமாதாந்தறிக்கை பிரகாரமின்றி தனது புத்தகப்படி சேர்க்க வேண்டும். அல்லது வங்கிமீதி வங்கிமாதாந்த கூற்றுப்படி இக்கட்டத்தில் மறுசீரனமாக்கப்பட்டு ஸகாத் விதியாகும் தொகைக்கு உண்மையான வங்கிமீதி காணப்பட வேண்டும்.

அதாவது வண்கியின் மாதாந்த கூற்றுறுப்படி உள்ள இவ்வாறன தொகையிலிருந்து இந்தமாத காசோலைகள் கழிக்கப்பட வேண்டும்

**77.கேள்வி:-**

ஒருவர்மீது ஸகாத் விதியாகும் திகதியன்று வங்கியில் வைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த காசோலை காசாக மாறவில்லை . அது கீழ்வருமாறு தரப்படுகிறது. ஸகாத்தை கணிப்பிடுக.

| | | |
|---|---|---|
| 01-08-1412 | வியாபாரப் பொருள் | 100,000 |
| " | கையிருப்பு பணம் | 5,000 |
| " | வங்கியிலுள்ள நடைமுறை க/கு மீதி (வங்கி மாதாந்த அறிக்கைப்படி) | 3,000 |
| " | வங்கிக்கு வரவுவைக்க வேண்டிய காசோலை | 22,000 |
| | | 130,000 |

ஸகாத் எதன்மீது விதியாகின்றது?

பதில் :-

வங்கியில் வைப்பிலிட்டு வரவுவைக்கப் படாத காசோலைகள் பணமாக கிடைக்கும் எனற நம்பிக்கையில் ரூபா.130,000/= மீது ஸகாத் விதியாகின்றது.

78.கேள்வி:-

வர்த்தகத்தில் ஸகாத் கொடுக்க வேண்டிய நாளன்று திகதி பின்இிட்ட காசோலை (Post dated cheque) கொடுத்து பெறப்பட்ட சாமான்களுக்கு எவ்வாறு ஸகாத் கணிப்பிடுவது?

பதில் :-

ஒருவர் 10-10-1410 இல் வியாபார பொருட்களுக்கு ஸகாத் செலுத்த வேண்டும். அவரது வியாபார பொருட்கள் கீழ்வருமாறு உள்ளது.

| | |
|---|---|
| வியாபாரப்பொருள் சந்தைப்பெறுமதி | 100,000 |
| வியாபாரத்திலுள்ள கையிருப்புப்பணம் | 5,000 |
| வங்கியிலுள்ள நடைமுறை கணக்குமீதி | 8,000 |
| முன்திகதியிடப்பட்ட காசோலை கொடுத்த தொகை | 10,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, ஸகாத் விதியாகும் தொகை

| | | |
|---|---|---|
| வியாபாரப்பொருள் சந்தைப்பெறுமதி | | 100,000 |
| வியாபார கையிருப்பிலுள்ள பணம் | | 5,000 |
| | | 105,000 |
| வங்கிமீதி | 8,000 | |
| கழி:திகதியிடப்பட்ட காசோலை | (10,000) | (2,000) |
| | | 103,000 |

ஆகவே,103,000/=க்கு ஸகாத் கொடுக்க வேண்டும். ரூபா. 10,000/=காசோலை கொடுத்திருந்தாலும் தேறிய கடன்தொகையே கணக்கில் எடுக்கப்பட வேண்டும்.

79.கேள்வி:-

இவ்வாறான ஒருநிலையில் வங்கியில் மேலதிகப்பற்று (O/D) ஒருந்தால் அதாவது வங்கியில் ரூபா. 5,000/= மேலதிகப்பற்றாக இருந்தால் எவ்வாறு ஸகாத் கணிப்பிடப்பட வேண்டும்?

| | | |
|---|---|---|
| முன்தந்த தரவின்படி | | |
| வியாபாப் பொருள் | | 100,000 |
| கையிருப்பு பணம் | | 5,000 |
| | | 105,000 |
| கழி:கடன்கள் | | |
| வங்கி மேலதிகப்பற்று | 5,000 | |
| முன்திகதியிடப்பட்ட காசோலை | 10,000 | (15,000) |
| | | 90,000 |

இங்கு ரூபா.90,000/=க்கு ஸகாத் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80.கேள்வி:-

ஒருவரது வியாபாரப்பொருள் ஸகாத் விதியாகும் காலம் ஆரம்பமாகி ஒரு வருடத்தின்பின் ஸகாத் கொடுக்கும் பொழுது அந்தவருடத்தின் இடையே சம்பாதித்த பொருட்களுக்கும் ஸகாத் கொடுக்க வேண்டுமா? (அதாவது வருடத்தின இடையே சம்பாதித்த இலாபம்.)

பதில்:-

ஆம், உதாரணமாக 01-01-1410 இல் வியாபாரப் பொருள் ரூபா.100,000/= 01-01-1411ஆக இருந்தால் ஸகாத் ரூபா,125,000/=க்கு கொடுக்க வேண்டும். இங்கு வியாபாரப் பொருள் சந்தைப்பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்படும்.

81.கேள்வி:-

இன்றைய சமூக அமைப்பில் கடன் என்பது பலவாறு அமைகிறது ஒருவரது வியாபாரப் பொருள்மீது ஸகாத் கொடுக்க வேண்டியிருந்தாலும் அவர் கடனாளியாக இருந்தால் ஸகாத் விதியாக மாட்டாது என கூறப்படுகிறது இது பற்றி விளக்கவும்?

பதில்:-

தன்னிறைவு உடையவனே ஸகாத் கொடுக்க வேண்டுமென நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே, அடிப்படை தேவை பூர்த்தியான ஒருவர் ஸகாத் விதியாகும் பொருள் அல்லாத ஏனைய பொருட்களுக்காக கடன் வாங்கி இருந்தால் அது ஸகாத் விதியாகும் பொருளிலிருந்து கழிக்க தேவையில்லை. (உதாரணமாக ஒரு வர்த்தக தாபணத்தில் வியாபாரப் பொருளின் ஸகாத்தைக் கணிப்பிடும் போது வாகனத்திற்காகப் பெறப்பட்ட கடன் கழிக்க முடியாது)

அத்தோடு, தன்னிறைவு அடையாத அல்லது தன்னிறைவு அடைந்திருந்து பின்னர் கடனாளியாக மாறின(அதாவது குடும்ப அங்கத்தினர் ஒருவரின் கடும் சுகயீனம் காரணமாக அல்லது வேறு காரணமாக கடனாளியாக இருந்தால்) ஸகாத் விதியாகும் பொருளிலிருந்து முதலில் கடனை கொடுத்து எஞ்சியது நிஸாப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தால் அதன்மீது ஸகாத் கொடுக்கப்பட வேண்டும்.

82. கேள்வி:-

வியாபார பொருட்களின் ஒருவரது ஸகாத் விதியாகும் தொகை யாது?

பதில்:-

வியாபார பொருளை பொறுத்தவரையில் 20 தினார் தங்கப் பெறுமதி அல்லது 200 திர்ஹம் வெள்ளியின் பெறுமதி கணக்கில் எடுக்கப்படும். இதன்படி 84 கிராம் தங்கன் அதாவது 10,625 பவுண் தங்கத்தின் பெறுமதி அல்லது 200 திர்ஹம் என்னும் 594 கிராம் வெள்ளி பெறுமதி இருந்தால் ஸகாத் விதியாகும். அவற்றின் இன்றைய (1996 செப்டெம்பர்) இலங்கை பெறுமதி கீழ்வருமாறு உள்ளது.

தங்கம் 10,625 X 5,800 = 61,625/=
வெள்ளி 594 X 14 = 8,316/=

10.625 பவுண் தங்கத்தை அடிப்படை பெறுமதியாக ஏற்பதை இஸ்லாமிய அறிஞர்கள் பலர் ஏற்கின்றனர். எனவே, ரூபா 61,625/= இற்கு மேல் வர்த்தக பொருளை ஒருவர் வைத்திருந்தால் ஸகாத் விதியாகும் காலம் தொடங்குகிறது.

83. கேள்வி:-

நீங்கள் குறிப்பிடுபவைகளிலிருந்து ஒருவரது வியாபாத்தில் அல்லது கைத்தொழிலுள்ள இயநதிரங்கள், பாரிய கட்டங்கள், பாரிய தோட்டங்கள் போன்ற பெறுமதிமிக்க சொத்துக்கள் ஸகாத்தில் இருந்து விடுபடுகின்றன. இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில்:-

இவைகள் மீது ஸகாத் விதியாகா விட்டாலும் இப்பொருள்கள் மீது ஸதகா கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குடமையும், சேமிப்பும்

84. கேள்வி:-

பங்குடமையில் (Partnership) ஸகாத் எவ்வாறு கணிப்பிடப்படுகிறது?

பதில் :-

பங்குடமை மீது (Partneership) ஸகாத் விதியாவது இல்லை. அனால் ஒவ்வொருவரினதும் பங்குமீது ஸகாத் விதியாக்கப்படுவதை நாம் காணலாம். எனவே, பங்குடமையில் ஒவ்வொரு பங்காளரினதும் பங்குமீது ஸகாத் விதியாகும். இங்கு முக்கியமாக ஸகாத் விதியாகும் பொருட்கள் எவ்வாறு ஒவ்வொருவரினதும் பங்கு அமைகின்றதோ அதன்மீது ஸகாத் விதியாகும்.

85. கேள்வி:-

ஒவ்வொரு பங்காளரினதும் தனித்தனியே ஆரம்பளவு (நிஸாப்) கணிப்பிடப்பட்டு ஸகாத் கணிப்பிடுவதன் காரணமாக ஒருவரது பல பங்குடமையில் உள்ள பங்குகளின் ஸகாத் விதியாகும் பொருட்கள் தனித்தனியாக நிஸாப்பை அடையாவிட்டாலும் அவைகளை இணைத்து (அதாவது பங்குடமையில் உள்ள ஒருவரது அணைத்து வியாபாரங்களையும் சேர்த்து) ஸகாத் செலுத்த வேண்டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Al- Haj. Aliyar Muzzammil
546A, 1st Cross Street.
Sainthamaruthu- 16
Sri Lanka

**பதில் :-**

**ஸகாத் ஆனது வெவ்வேறு மூலகங்களின் மீது வெவ்வேறு விகிதங்களில் விதிக்கப்படுவதன் காரணமாக வியாபாரப் பொருட்கள்மீது (Stock)விதிக்கப்படும் ஸகாத் ஆனது பல பங்குடமை வியாபாரத்தில் ஒருவரது விதியாகும் பொருட்களின் பங்கின் விகிதத்திற்கு ஏற்ப ஸகாத் விதியாக்கப்படும்.**

86.கேள்வி:-

ஒரு பங்குடமையில் கணவன், மனைவி பங்காளராக இருந்தால் எவ்வாறு ஸகாத் கணிப்பிடப்படும்?

**பதில் :-**

**கணவனும், மனைவியும், இரண்டுதனிநபர்களாக கணிப்பிடப்பட்டு ஒவ்வொருவரினதும் ஸகாத் வெவ்வேறாக கணித்து கொடுக்கப்பட வேண்டும்.**

**87.கேள்வி:-**

கீழ்வரும் நிலமையில் மூன்று பங்காளரினதும் ஸகாத் விதியாகும் முறையை கணிப்பிடுக.?

முஸ்லிம் ஸ்டோர்ஸ் 01-04-1410ஆம் திகதிக்கு ஐந்தொகை(Balance Sheet)

| | | | | |
|---|---|---|---|---|
| <u>முதலீடு (Capital)</u> | | | | |
| எம்.ஹுஸைசன் | 50,000 | | நன்மதிப்பு | 50,000 |
| எம்.ஹஸன் | 40,000 | | (Goodwill) | |
| எம்.இப்திகார் | 30,000 | 120,000 | வாகனம் | 80,000 |
| <u>நடைமுறை கணக்கு</u> | | | தளபாடம் | 15,000 |
| 1) <u>எம்.ஹுஸைசன</u> | 20,000 | | வாடகைவைப்பு | 10,000 |
| இலாபம் | <u>10,000</u> | | வரவேண்டிய கடன் | 18,000 |
| | 30,000 | | வியாபார பொருட்கள் | 147,000 |
| கழி:பற்று | <u>(5,000)</u> | 25,000 | வங்கியிலுள்ள | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடைமுறைக் க/கு மீதி | 2,000 |
| 2) எம்.ஹஸன் | 3,000 | | கையிலுள்ள பணம் | 3,000 |
| இலாபம் | 10,000 | | | |
| | 13,000 | | | |
| கழி:பற்று | (3,000) | 10,000 | | |
| 3) எம்.இப்திகார் | 62,000 | | | |
| இலாபம் | 10,000 | | | |
| | 72,000 | | | |
| கழி:பற்று | (2,000) | 70,000 | | |
| கடன்கள் | | 100,000 | | |
| | | 325,000 | | 325,000 |

(அ) இங்கு கடன்பெற்றதில் ரூபா.80,000/= வாகனம் கொள்முதல் செய்யப்பட்டதாகும்.

(ஆ) எம்.ஹுசைன், எம்.ஹஸன், எம். இப்திகார், ஆகிய பங்காளர்கள் முறையே இலாபத்தினை சமமாக பங்கிடுகின்றனர்.

(இ) வியாபார பொருடகள் கொள்முதல் விலையில் அன்றி சந்தைப்பெறுமதியில் கணிப்பிடப்பட்டுள்ளது.

(ஈ) இந்த மூவருக்கும் வேறுவியாபாரம் இல்லை.

இங்கு ஒவ்வொருவரினதும் ஸகாத் கொடுக்க வேண்டிய தொகையை கணிப்பிடுக.?

பதில் :-

பங்காளர்களுக்கு ஸகாத் விதியாகும் தொகை வியாபாரத்தில் அவர்களது பணத்தில உள்ள விகிதத்திற்கு (Ratio) அமைய அமையும். இங்கு வர்த்தகர்கள் இலாபத்தினை எவ்வாறு பங்கிட்டாலும் அவர்களது முதலீடு நடைமுறை கணக்குகளின் அடிப்படையிலேயே ஸகாத் விதியாகும். மேலும் நன்மதிப்புமீது ஸகாத் விதியாகாது பொருட்களும், சொத்துக்களும் கீழ்வருமாறு கணிப்பிடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Al- Haj Aliyar Muzzammil
546A, 1st Cross Street
Sainthamaruthu- 16
Sri Lanka

| | |
|---|---|
| வாடகை வைப்பு | 10,000 |
| வரவேண்டிய கடன் | 18,000 |
| வியாபாரப் பொருள் | 147,000 |
| வங்கியிலுள்ள் நடைமுறை க/கு மீதி | 2,000 |
| கையிருப்பிலுள்ள பணம் | 3,000 |
| | 180,000 |
| கழி:கொடுக்க வேண்டிய கடன் | (20,000) |
| | 160,000 |

| பங்காளரின் பெயர் | முதலீட்டு கணக்கு | நடைமுறை கணக்கு | மொத்தம் |
|---|---|---|---|
| எம்.ஹுசைன் | 50,000 | 25,000 | 75,000 |
| எம்.ஹஸன் | 40,000 | 10,000 | 50,000 |
| எம்.இப்திகார் | 30,000 | 70,000 | 100,000 |

எனவே செத்து விகிதம் 75,000:50,000:100,000 அதாவது 3:2:4 என்ற விகிதத்தில ரூபா.160,000/= ஒவ்வொருவரினதும் ஸகாத் விதியாக கூடிய சொத்தாகும்.

ஆகவே,

எம்.ஹுசைன் $^3/_9$ X 160,000 = 53,333/=
எம்.ஹஸன் $^2/_9$ X 160,000 = 35,555/=
எம்.இப்திகார் $^4/_9$ X 160,000 = 71,112/=

இங்கு ஒவ்வொருவரும் தனது ஸகாத் விதியாகும் தொகை நிஸாப்பை விட அதிகமாயின் ஸகாத் செலுத்த வேண்டும் ஆகவே இன்றைய நிலையில் எம். ஹுசைனும், எம். ஹஸனும் ஸகாத் விதியாகும் நிஸாப்பபைவிட அதிகமான சொத்து இல்லையென்பதால் அவர்கள் ஸகாத் செலுத்த தேவையில்லை எம. இப்திகார் ரூபா. 71112/=இல் $2^1/_2$ % ரூபா. 1,778 /= ஸகாத் கொடுக்க வேண்டும்.

88.கேள்வி:-

பருவம் ஏய்தாத பங்காளர் உள்ள பங்குடமையில் அவரது ஸகாத்தை யார் செலுத்த வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் :-

தகப்பன் அல்லது பாதுகாவலன் அதனைச் செலுத்த வேண்டும்.

90.கேள்வி:-

வங்கியின் நிலையான வைப்பு ( Fixed Deposit) நடைமுறைக் கணக்கு போன்றவற்றிட்கு ஸகாத் எவ்வாறு செலுத்தப்பட வேண்டும்?

பதில் :-

இன்று காணப்படும் வங்கி அமைப்பானது வட்டி அமைப்பினை கொண்டது. நிலையான வைப்பானது பெரும்பாலும் வட்டி உழைக்கின்றது எனவே. ஹறாமான முறையில் பணம் பெறும் ஒரு வழியில் ஸகாத் செலுத்துவதைவிட அந்த பாவத்திலிருந்து மீள்வதே சிறந்தது.

சேமிப்பு வைப்பு என்பது வட்டி வரவு வைக்கப்பட கூடியது. ஒரு சிலர் தமது கணக்கில் வட்டி வரவு வைக்கக் கூடாது என வங்கிக்கு அறிவித்திருப்பர். எனவே, வட்டி உழைக்காத சேமிப்பு வைப்புமீது ஸகாத் கொடுக்க வேண்டும். அத்தோடு சேமிப்பு வைப்பாக வைப்பதனால் மட்டும் பணம் பத்திரப்படுத்தக் கூடிய நிலமையில் வங்கிகளில் உள்ள சேமிப்பு வைப்புக்கு ஸகாத் செலுத்தலாம்.

நடைமுறை கணக்கு என்னும் போது அதன்மீது வட்டி செலுத்தப்படுவதில்லை. எனவே, அதன்மிகுதி கணிப்பிடப்பட்டு வருட முடிவில் ஸகாத்கொடுக்கப்பட வேண்டும்.

91.கேள்வி:-

கம்பனி பங்குகள் (Shares) மீது ஸகாத் விதியாகும் முறையை விளக்குக?

பதில் :-

கம்பனிப் பங்கு எனும் போது ஒரு கம்பனியில் ஒருவரின் உரித்தை அலகுகளாகப் பிரிக்கப்பட்ட தொகை எனலாம். கம்பனிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மூலதனத்தைப் பெறுவதற்காக அதனைச் சிறிய அலகுகளாகப் பிரித்து ரூபா.10/=, ரூப. 50/= ரூபா.100/=, ரூபா. 1000/= என பங்காக விற்பர் இவ்வாறன நிலையில் கம்பனியின் எதிர்கால அபிவிருத்தி அல்லது இலாபநிலையை எதிர்பார்த்து அதிக விலை கொடுத்து வாங்குவர். இவ்வாறு கம்பனிப் பங்குகளை வாங்குபவர்களுக்கு பங்கு அத்தாட்சிப் பத்திரம் (Share Certificate) கொடுக்கப்படும் ரூபா. 10/= பெயரளவிளான விலை உள்ள பங்கை ரூபா 100/= இற்கும் வாங்குபவர் உளர் அதே போல இதன் சந்தைப் பெறுமதி சிரிது காலத்தில் ரூபா.150/= ஆக விற்கப்படுவதும் உண்டு.

மேலும் இப்பங்குகள் வாங்குபவருக்கு கம்பனியில் உரித்தாகும் உரிமைக் கேற்ப பல் வேறுவகையான பங்குகள் உண்டு. (உதாரணமாக முன்னுரிமைப் பங்குகள்)

கம்பணிகளின் தனமைக்கு ஏற்ப தனியார் கம்பனிகளின் (Private Ltd) பங்குகள் பங்குடைமை போல ஒருசிலருக்கு மட்டுமே உரித்துடையதாக இருக்கும் பொதுக்கம்பனிகள் (Public companies) இப் பங்குகள் பலருக்கு உரித்தாக இருக்கும். இவ்வகையான கம்பனிகளில் சில தமது பங்குகளைப் பங்குச் சந்தையில் விற்கின்றன.

பங்குகளின் வகைக்கு ஏற்ப கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியை பங்காளருக்கு கம்பனி நிர்வாகம் பகிர்ந்து அளிக்கும். இவை பணமாகவோ அல்லது கம்பனியின் பங்காகவோ இருக்கும். இவ்விரு வகை இலாபப் பங்கீடும் பங்கிலாபம் (Divident) என அழைப்பர்.

எனவே பங்கிலாபம் மீது ஸகாத் ஆனது கிடைத்த பணம் கையிறுப்பிலுள்ள சொந்தப் பணத்துடன் சேர்த்து நிஸாப்பை அடையுமாயின் ஸகாத் விதியாகின்றது.

இலாபம் பங்காகக் கிடைத்தால் பங்குகள்மீது ஸகாத் விதியாகும் முறையில் கீழ் வருமாறு பார்த்து ஸகாத் கணிப்பிடப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் கம்பனிகளும் பொதுவில் பங்குச் சந்தையில் பங்கினை விற்காத பொதுக்கம்பனிகளினதும் வியாபார நடவடிக்கையின் தன்மைக்கு (Nature of Business) ஏற்ப பங்குடைமை போல அவ்வியாபாரத்தைப் பார்த்து ஸகாத் கணிப்பிடப்படல் வேண்டும்

அதாவது அக்கம்பனியின் வியாபாரப் பொருளின் சந்தைப் பெறுமதி அல்லது விவசாய அறுவடை வருமானம் போன்றன கணக்கில் எடுக்கப்பட வேண்டும். வியாபாரப் விவசாயம் என்பன பற்றி விளக்கமாக இப்புத்தகத்தில் கூறிவுள்ளது இக்கமபனிகளுக்கும் செல்லுபடியாகும்.

மேலும் இலங்கை போன்ற முஸ்லிம் அல்லாத நாட்டில் பகிரங்கக் கம்பனிகளின் பெறுமதி மதிப்பீடு சிரமமானது. இவ்வாறன நிலையில் கம்பனியின் இறுதிக் கணக்குக் கூறும் (Final accounts) உம் பங்குகளின் சந்தைப் பெறுமதியும் கணக்கிலெடுக்கப்பட வேண்டும். அத்தோடு ஸகாத் விதியாகும் இக்கம்பனிகளின் பொருட்களின் தனது பங்கிற்கு ஏற்ப ஸகாத் கொடுக்க வேண்டும்.

91.கேள்வி:-

ஒருவரிடம் சேமிப்பாக நிஸாப்பை எட்டிய பணம் ஒருவருடம் பூர்த்தியாக இருக்கும் பொழுது இடையில் சொந்த செலவுகள்(உதாரணமாக மருத்துவ செலவ்குள்) ஏற்பட்டு வருட இறுதியில் அப்பணம் குறைந்து இருந்தால் ஸகாத் எவ்வாறு கொடுக்க வேண்டும்?

பதில் :-

உதாரணமாக 01-04-1410 திகதி ரூபா. 100,000/= இருந்தது 01-04-1411 திகதி ரூபா. 80,000/= இருந்தது. இங்கு 01-04-1410 தொடக்கம் 01-04-1411 வரை ரூபா.20,000/= சொந்த செலவு ஏற்பட்டால் 01-04-1411ம் திகதி ரூபா. 80,000/=க்கு ஸகாத் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. கேள்வி:-

ஒருவர் வியாபாரத்தில் ஈடுபடும் போது ஸகாத் கொடுக்க வேண்டிய திகதி அன்று பின்திகதியிட்ட காசோலை (Post Dated Cheque) கிடைத்து இருப்பவற்றை எவ்வாறு கணக்கில எடுக்க வேண்டும்?

பதில் :-

காசோலைகள் பணத்திற்கு சமனாக கணிப்படப்படுகிறன. இந்தக் காசோலைகள் வியாபாரப் பொருள் விற்பனை மூலம் கிடைத்து இருந்தால் நாம் அதனை வியாபாரத்தில் உள்ள பணம் ஆகக் கணித்து அதனையும் சேர்த்து ஸகாத் கொடுத்தல் வேண்டும. இங்கு கையிருப்பிலுள்ள காசோலைத்தொகை வங்கிக் கணக்கு எடுக்கப்பட்டு இருக்க வேண்டும் இவ்வாறு கணக்கில் எடுக்கப்பட்டு இருந்தால் அதற்கு மேலதிகமாக திரும்பவும் சேர்க்கத் தேவையில்லை ஆனால் இவ்வாறு சேர்க்கப்படாது இருந்தால் அதனையும் வங்கி மீதியுடன் சேர்த்து ஸகாத் கொடுத்தல் வேண்டும். உதாரணமாக ஒருவரது ஸகாத் கொடுக்க வேண்டிய திகதியன்று விபரம் கீழ்வருமாறு.

| | |
|---|---|
| வியாபாரப் பொருட்கள் (சந்தை விலையில்) | 150,000 |
| கையிருப்பிலுள்ள பணம் | 2,000 |
| வங்கிமேலதிகப்பற்று (O/D) | |
| (மேலதிக காசோலை கொடுத்தது) | 20,000 |
| கையிலுள்ள வங்கிக்கு கொடுக்காத காசோலை | 33,000 |

ஸகாத் கணிப்பிடுக.

| | | |
|---|---|---|
| வியாபாரப் பொருட்கள் | | 150,000 |
| கையிருப்பிலுள்ள பணம் | | 2,000 |
| வங்கி மீதி | (22,000) | |
| கூட்டுக:- | | |
| காசோலை வங்கிக்கு கொடுக்காதது | 33,000 | 13,000 |
| ஸகாத் விதியாகும் தொகை | | 165,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. கேள்வி:-

ஒருவர் இன்னொருவரிடம் பெற்றுக்கொண்ட காசோலை ஸகாத் கொடுக்க வேண்டிய திகதியன்று திரும்பி இருந்தால் (Return cheque) ஸகாத் கணிப்பீட்டில் எத்தகைய விளைவை ஏற்படுத்தும்?

பதில் :-

இவ்வாறான சந்தர்பத்தில் அந்தக் கொடுக்கல் வாங்கல்களை பார்க்க வேண்டும். இங்கு வியாபாரப் பொருள் விற்பனையில் அக்காசோலை கிடைத்து இருந்தால் அதனை கீழ்வருமாறு பார்க்க வேண்டும்.

01. இந்தக் கொடுக்கல் வாங்களில் காசோலைக்கான பணம் திரும்பக் கிடைக்கும் என நிச்சயமாக இருந்தால் வரவேண்டிய வியாபாரக் கடன் என்ற ரீதியில ஸகாத கொடுக்க வேண்டிய சொத்தில் சேர்க்க வேண்டும்.

02. இந்தக் கொடுக்கல் வாங்களில் இந்தக் காசோலைக்கான பணம் கிடைப்பது சந்தேகம் என்று இருந்தால், சந்தேகமான கடன் என்ற முறையில் அதற்குறிய சட்டம் செல்லுபடியாகும். அதாவது இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி அந்தப்பணம் கிடைத்தவுடன் ஸகாத் கொடுக்க வேண்டும். இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி இதற்கு கிடைத்த பின்பும் இதற்கு கொடுக்கத் தேவையில்லை.

மேலும் இது வியாபாரப் பொருட்களுக்கு அல்லாது கிடைத்த காசோலையாயின் அவரது ஸகாத் கணிப்பிடும் பொழுது பணத்துக்கு ஸகாத் கணிக்கப் படும் போது ஏற்படின் அதனை கணக்கில் எடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால் நடை

94.கேள்வி:-

வீட்டுவளர்ப்பு பிராணிகள்மீது ஸகாத் கடமையாகின்றதா?

பதில் :-

அவைகளுக்கு ஸகாத் இல்லை.

95.கேளவி:-

கால் நடைகளில் எதன்மீது ஸகாத் விதியாகின்றது?

பதில் :-

ஆடு, மாடு, ஒட்டகங்கள்.

96.கேள்வி:-

ஒட்டகத்திற்கான நிஸாப்பும், ஸகாத்தும் எவ்வளவு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் :-

| மொத்த ஒட்டகம் | ஸகாத் |
|---|---|
| 5 - 9 | ஒரு வருட பூர்த்தியான ஆடு |
| 10 - 14 | 2 ஆடு |
| 15 - 19 | 3 ஆடு |
| 20 - 24 | 4 ஆடு |
| 25 - 35 | 1 ஆண்டு பூர்த்தியாகி 2ம் ஆண்டு நடக்கக்கூடிய ஒருபெண் ஒட்டகம் |
| 36 - 45 | 2 " " 3ம் " " " |
| 46 - 60 | 3 ஆண்டு கடந்து 4ம் ஆண்டில் பிரவேசித்த பெண் ஒட்டகம் |
| 61 - 75 | 4 ஆண்டு பூர்த்தியாகி 5ம் ஆண்டில் " " |
| 76 -90 | 2 ஆண்டு பூர்த்தியான 2 பெண் ஒட்டகம் |
| 91 -120 | 3 " " 2 " " |

இதைவிட மேலதிகமாக உள்ள ஒவ்வொரு உபரி 40 ஒட்டகத்திற்கும் 2 வயதான ஒரு பெண் ஒட்டகம் கொடுக்க வேண்டம்.

98. கேள்வி:-

ஆடுகளின் ஆரம்ப அளவு எவ்வளவு?

பதில் :-

40 ஆடுகள் இருந்தாலே ஸகாத் விதியாகும்.

99. கேள்வி:-

ஆடுகளுக்கான ஸகாத் விதியாகும்முறை எவ்வாறு அமைகின்றது?

| ஆடுகளின் தொகை | ஸகாத் |
|---|---|
| 39 ஆடுகள்வலை | இல்லை |
| 40 - 120 வரை | 1 ஆடு |
| 121 - 200 வரை | 2 ஆடு |
| 201 - 300 வரை | 3 ஆடு |

இதை விட கூடவுள்ள ஒவ்வொரு 100 ஆட்டுக்கும் சராசரி ஒரு ஆடு கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**100.கேள்வி:-**

மாடுகளுக்கான ஆரம்ப அளவு நிஸாப் எவ்வளவு?

பதில் :-

பசு மற்றும் எருமை போன்ற கால்நடைகள் வைத்திருப்பவர்களுக்கு குறைந்தபட்சம் 30 மாடுகள் இருத்தல் வேண்டும்.

**101.கேள்வி:-**

உரிமையாளரின் சொந்தவேலை உதாரணமாக வயல் வேலைக்கு உள்ள மாடு மீது ஸகாத் உண்டா?

பதில் :-

இல்லை.

**102.கேள்வி:-**

மாடுகளுக்கான ஸகாத் அளவு யாது?

பதில் :-

| மாடுகளின் தொகை | ஸகாத் |
|---|---|
| 29 மாடுகள் வரை | இல்லை |
| 30 - 39 | 1 வருடம் பூர்த்தியான ஒரு கன்று |
| 40 - 59 | 2 வருடம் " " " |
| 60 - 69 | 1 " " இரு " |

**103.கேள்வி:-**

ஸகாத் ஆக வயதுமுதிர்ந்த அல்லது உறுப்புகள் சேதமுற்ற பிராணிகள் கொடுக்கலாமா?

**பதில் :-**

**இதனை நாயகம் (ஸல்) அவர்கள் ஸகாத்தாக ஏற்கமுடியாதென புஹாரி கிரந்தத்தில் நபிமொழியில் (1455 இல்) கூறப்பட்டுள்ளது. என்றாலும் ஒருவரிடமுள்ள அனைத்து கால்நடைகளும் அங்ககுறைவானதாக இருப்பின் மட்டுமே அங்கக்குறைவான ஒரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகத்தை ஸகாத்தாக கொடுக்கலாம். என இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகிறார்கள்.

104.கேள்வி:-

குதிரைகள்மீது ஸகாத் விதியாகின்றனவா?

பதில்:-

ஒருவரிடம் விற்பனை நோக்கத்திற்கல்லாது வைத்திருக்கும் குதிரைகளுக்கு ஸகாத் செலுத்த தேவையில்லையென இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படியும் அவைகளுக்கு ஸகாத் செலுத்தப்பட தேவையில்லை. எனவே, குதிரைகள் வியாபாரபொருளாக அல்லாது வைத்திருந்தால் ஸகாத் விதியாகாது.

105.கேள்வி:-

ஒருவர் கால்நடைமீது ஸகாத் விதியாகும் நிஸாப்பை அடைந்து இடையில் அம்மிருகங்கள் குட்டிஈன்றால் அவற்றுக்கும் ஸகாத் உண்டா?

பதில்:-

அவைகளையும் சேர்த்து ஸகாத் கொடுக்க வேண்டுமென்று அதிகமான இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகிறார்கள்.

106.கேள்வி:-

ஸகாத் அறவிடுபவா கால்நடைகளுக்கான ஸகாத் அறவிடும் போது கவணிக்க வேண்டிய அம்சங்கள் யாவை?

பதில்:-

இடையன் தூக்கிச்செல்லும் புதிதாக ஈண்டுஎடுத்த ஆட்டுக்குட்டி, மலட்டுத்தன்மையான ஆடு, பால்தரக்கூடிய ஆடு, கருவுற்று இருக்கும் ஆடு, பயிற்றப்பட்ட ஆடுகள், போன்றவை ஸகாத்தாக எடுக்கக்கூடாது. எனவே, ஸகாத் பெறுபவர், ஸகாத் கொடுப்பவர் ஆகிய இருவரும் இதனால் பாதிக்கப்படக்கூடாது என்பது விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

107. கேள்வி:-

ஸகாத் கணிப்பீட்டில் கால்நடைகளில் சிறியகுட்டிகளின் பங்கீடு யாது?

பதில் :-

இமாம் ஷாபி (ரஹ்), இமாம் அபூஹனிபா (ரஹ்) ஆகியோர்களது கருத்துப்படி வளர்ந்த கால்நடைகள் நிஸாப்பை அடையாதுவிடின் இவைகளையும் சேர்த்து நிஸாபைக் கணிப்பிடலாம். அல்லாதுவிடின் இவைகளின் குட்டிகளை சேர்க்க தேவையில்லை.

இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி இளம்செம்மறி ஆடு, அதே இடத்தில் இருக்கும் ஆடுகளின்குட்டி அல்லாவிடினும் சேர்த்து கணிப்பிடலாம். ஆனால் இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள், இதற்கு நிஸாப் அளவை எட்டுவதற்கு முன்பாக இக்குட்டிகள் பிறந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை கூறுகிறார்.

108. கேள்வி:-

ஒருகால்நடை தொகுதி பலருக்கு பங்காக இருந்தால் எவ்வாறு ஸகாத் கொடுக்கப்பட வேண்டும்?

பதில் :-

ஒவ்வொரு பங்காளரும் பங்குடமையில் தனக்கு உரித்தான கால்நடை நிஸாப்பை அடையுமாயின் ஸகாத்தை செலுத்த வேண்டும்.

109. கேள்வி:-

கால்நடைகளுக்கு ஸகாத் விதியாவதற்கு வயது எல்லை உண்டா?

பதில் :-

ஒரு வருடம் பூர்த்தியாக வேண்டும் ஆனால் நிஸாப்பை எய்துவதற்காகவும் இதை விடக் குறைந்த குட்டிகளை கணக்கிலெடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110.கேள்வி:-

வீட்டில் வளர்க்கும் கால்நடைகளுக்கு ஸகாத் உண்டா?

பதில் :-

புல்வெளியில் மேயும் மந்தைகளுக்கு மட்டுமே ஸகாத் உண்டு. வீட்டில் வளர்க்கும் பிராணிகளுக்கு ஸகாத் இல்லை. அதாவது தனது உணவைத் தானே தேடிக்கொள்ளும் திறந்த வெளியில் மேயும் மந்தைகளுக்கே ஸகாத் உண்டு.

111.கேள்வி:-

செம்மறி ஆடு, வெள்ளை ஆடு என பலவகையான ஆடு வகைகள் இருக்கின்றன ஸகாத் கணிப்பீட்டில் இவைகள் வெவ்வேறாக கணிப்பிடப்பட வேண்டுமா?

பதில் :-

ஆடு வகைகள் ஒரே இனமாகக் கொண்டே ஸகாத் விதியாகின்றது.

112.கேள்வி:-

மாட்டில் எருமை, கடா, பசு என பலவகைகள் உண்டு. இவைகள் மீது ஸகாத் கணிப்பீட்டில் எவ்வாறு இன வித்தியாசம் செல்வாக்குச் செலுத்துகிறது?

பதில் :-

மாட்டின் வகைகள் வெவ்வேறாயினும் மாடுகள் அனைத்து இனமும் சேர்க்கப்பட்டு அவைகளின் மீது ஸகாத் விதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயப் பொருள்

113. கேள்வி:-

விவசாய உற்பத்தி பொருட்கள்மீது எவ்வாறு ஸகாத் விதியாக்கிறது?

பதில் :-

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி விவசாயப்பொருள் காய்த்து பத்திரப்படுத்தி வைக்கக்கூடியவைகளுக்கு மட்டுமே ஸகாத் உண்டு. அதாவது கோதுமை, பார்லி, பேரீச்சம்பழம், உலர்ந்த திராட்சை போன்றவற்றின்மீது ஸகாத் விதியாகின்றது.

ஆனால் இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி எல்லாவகையான உற்பத்திபொருட்கள்மீதும் ஸகாத் செலுத்தப்பட வேண்டும். எனினும் விறகு, மூங்கில், புல், போன்ற கனிவர்க்கம் தராத இவைகள் தவிர்த்தே ஏனையவற்றின்மீது ஸகாத் செலுத்தப்பட வேண்டும்.

114. கேள்வி:-

விவசாய பொருட்கள்மீது எவ்வாறு ஸகாத் விதியாகின்றது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் :-

உற்பத்தியாகும் விவசாயபொருள் ஐந்து வஸாக்கைவிட மேற்பட்டதாயின் ஸகாத் கடமையாகும். ஒரு வஸாக் என்பது 60 ஸாஊ ஆகும். ஒரு ஸாஊ என்பது 2 கிலோ 176 கிராமாகும். ஆகவே 652.8 கிலோகிராம் உற்பத்தியாகும் பொருட்கள் மீது ஸகாத் விதியாகும். இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி எல்லா விவசாய பொருட்கள்மீதும் ஸகாத் விதியாவதுடன் இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி தொடர்ந்து உணவாக கொள்ளக்கூடிய மனிதனால் சேமித்துவைத்து (காய்த்து வைக்கக்கூடிய) விதைக்கக்கூடிய பார்லி, கடலை, நெல், போன்ற பொருட்களுக்கு மட்டுமே ஸகாத் விதியாகும்.

115.கேள்வி:-

வக்ப் செய்யப்பட்ட காணியில் விவசாயம் செய்து ஸகாத் விதியாகும் பொருள் அறுவடைசெய்யப்பட்டால் ஸகாத் கொடுக்க வேண்டுமா? யார் அதனைக் கொடுப்பது?

பதில் :-

ஸகாத்தை கொடுக்க வேண்டும். விவசாயம் செய்தவர் அதனைக் கொடுக்க வேண்டும்.

116.கேள்வி:-

விவசாயம் செய்து அறுவடைமீது ஸகாத் விதியாகும் பொழுது அதனை பணமாகவோ, விவசாய பொருளாகவோ செலுத்தலாமா?

பதில் :-

முடியும்.

117.கேள்வி:-

பயிரிடப்பட்டு அறுவடையாகும் வருடத்தில் ஒவ்வொரு அறுவடை முறைக்கும் ஸகாத் வெவ்வேறாகக் கணித்து கொடுக்க வேண்டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் :-

ஆம்.

118.கேள்வி:-

அறுவடையின் பின்பு ஏதாவது கழிவுகள் பயிர்செய்கை செலவுகளுக்காக கழித்து மிகுதி அறுவடையில் ஸகாத் கொடுக்கலாமா?

பதில் :-

முடியாது. முதலில் ஸகாத்தினைக் கணிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

119.கேள்வி:-

அறுவடையில் ஸகாத் விதியாகும் பொழுது ஒருவருடம் பூர்த்தியாகும் கட்டுப்பாடு உள்ளதா?

பதில் :-

ஸகாத் ஆனது அறுவடையின் பின்பு கொடுப்பதனால் இத்தகைய கட்டுப்பாடு ஒன்று இல்லை.

120. கேள்வி:-

ஒருவர் ஒரு காணியை சிறிது காலத்திறகு தற்காலிகமாக வாங்கி (வாடகைக்கு Lease) விவசாயம் செய்தால் அறுவடைக்கு ஸகாத் கொடுக்க வேண்டுமா?

பதில் :-

ஆம்.

121. கேள்வி:-

காணிக்கான வரிகள் கட்டுவதனை அறுவடைக்கான ஸகாத்தில் குறைக்கலாமா?

பதில:-

முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122.கேள்வி:-

ஒருவரது நிலத்தில் விளைந்த வெவ்வேறு பழவகைகள் அல்லது வெவ்வேறு தானியவகைகள் ஒன்றாக இணைத்து ஸகாத் (நிஸாப்) அளவிடப்பட வேண்டுமா?

பதில் :-

சட்டத்துறை இமாம்களின் கருத்துப்படி பல்வேறு தரமான பழவர்க்கங்களை ஒன்றிணைத்து நிஸாப் அளவினைப் பார்க்க வேண்டும். அது நல்ல தரமானதாகவோ, அல்லது தரம் குறைவானதாகவோ இருந்தாலும் சரியே. இதேபோல வெவ்வேறு வகையான தானிய அறுவடைகளையும் ஒன்றிணைத்து நிஸாப், அடையுமாயின் ஸகாத் விதியாகும்..

123.கேள்வி:-

விவசாய பொருட்கள்மீது ஸகாத் எந்த விகிதம் கடமையாகும்?

பதில் :-

குறிப்பிட்ட நிஸாப்பை அடைந்த விவசாய பொருட்கள் நீர்பாசனத்தை பொறுத்து ஸகாத் விகிதம் மாறுபடுகின்றது.

அதாவது பூரணமழைவீழ்ச்சி அல்லது ஊற்றுநீர் போன்றவற்றால் நீர்பாசனம் செய்திருந்தால் 10% ஸகாத் விதியாகும். ஒருவர் மேற்குறிப்பிட் வழிகள் போல் அல்லாது இயந்திரமூலமாகவோ, வேறுவழியிலோ, விவசாயம் செய்து விளைவித்த பொருட்களுக்கு ஸகாத் 5% செலுத்தப்பட வேண்டும். ஆனால் எத்தகைய நீர்பாசனமுறை அதிகமாக பாவிக்கப்படுகின்றதோ அதற்கேற்ப ஸகாத் விகிதம் அனுசரிக்கபட வேண்டுமென இமாம் ஷாபி (ரஹ்) அவர்கதளும் கூறியுள்ளார்கள். ஏனெனில் மழைநீர் போன்றவைகளின் பயன்பாட்டிற்கேற்ப ஸகாத்விகிதம் 5% லிருந்து 10% வரை அதிகரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

124. கேள்வி:-

ஒருவர் எத்தகைய விளைச்சலும் இல்லாத நிலத்தை வைத்திருந்தால் அவற்றுக்கு ஸகாத் உண்டா?

பதில்:-

அவைகளுக்கு ஸகாத் இல்லை.

125. கேள்வி:-

ஒருவர் விவசாயம் செய்து அது அறுவடை பெறுவதற்கு முன்பாகவே, செய்த பயிர்செய்கை நாசமாகி விட்டால் ஸகாத் உண்டா?

பதில்:-

ஸகாத் கொடுக்கத் தேவையில்லை.

126. கேள்வி:-

விவசாய பொருட்கள் பயிரிட்டு அறுவடை செய்யும் போது ஒருவருடத்தில் பல முறை விவசாயம் செய்கால் நிஸாப் எவ்வாறு கணிப்பிடப்பட வேண்டும்?

பதில்:-

ஸகாத் விதியாகும் பொருள் அறுவடை செய்யும் பொழுது ஒவ்வொரு அறுவடையும் வெவ்வேறாக கணிப்பிட்டு ஸகாத் கொடுக்க வேண்டும். ஆனால் ஒருவரது அறுவடையின்போது நிஸாப்பை அடையாதுவிடின் ஒரு வருடத்தினுள் அதேமாதிரியான பொருள் விளைத்து அறுவடை செய்தால் இரண்டையும் சேர்த்து அந்தளவு நிஸாப்பை எய்து இருந்தால் அதற்கு ஸகாத் கொடுக்க வேண்டும். இவ்வாறு அறுவடைசெய்சு ஒரு வருடத்தினுள் ஒருசில அறுவடைகள் நிஸாப்பை எய்தாதுவிடினும் அவைகளை சேகரித்து ஸகாத் கொடுக்க வேண்டும்.

127. கேள்வி:-

ஒருவர் விவசாய பொருளை விதைத்து அறுவடைசெய்யும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடையானது தரம்குறைந்த உற்பத்தியை தந்தால் ஸகாத் கொடுக்க வேண்டுமா?

பதில் :-

குறிப்பிட்ட நிஸாப்பை அந்தபொருள் எய்துமாயின் ஸகாத் கொடுக்கப்பட வேண்டும். அதாவது ஸகாத் விதியாவதைத் தரம்பாதிக்கிறது.

128.கேள்வி:-

தானியவர்க்கங்களும், பழவர்க்கங்களும் வெவ்வேறாக பயிரிட்டு உற்பத்தி செய்யும் பொழுது அவைகளை இணைத்து நிஸாப் அளவை மட்டிட முடியுமா?

பதில் :-

இஸ்லாமிய அறிஞர்கள் வெவ்வேறான தானிய வகைகளை அல்லது வெவ்வேறு வகையான பழவர்க்கங்களை இணைத்து ஒன்றாக நிஸாப் அளவு கணிப்பிட பயன்படுத்தலாம் என கூறியுள்ளார்கள். அதாவது தானிய வகைகளை தானிய வகையுடன் மட்டும் பழவகைகளை பழவகையுடன் மட்டும் இணைக்கலாம். மேலும் இவைகளை ஒன்றிணைக்கும் பொழுது அவற்றின் தன்மை (Quality) வெவ்வேறாக இருந்தாலும் சரியே. ஆனால் கடலை வகைகளை ஒன்றிணைக்க முடியாது. இவை இமாம் ஷாபி (ரஹ்) அவர்களது அபிப்பராயம் ஆகும். மேலும் வெவ்வேறு வகையான கால்நடைகளை ஒன்றாக இணைத்து ஸகாத் அளவிட முடியாது. உதாரணமாக ஆட்டை மாட்டுடன் இணைக்க முடியாது.

129.கேள்வி:-

ஒருவர் விவசாயம் செய்து அறுவடை செய்யாது அந்தப்பயிர் மரத்தில் அல்லது செடியிலே இருக்கும் போது விற்பனை செய்தால் ஸகாத்தை யார் கொடுக்க வேண்டும்?

பதில் :-

அந்த பயிரை உற்பத்தி செய்தவர்தான் ஸகாத் கொடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமே தவிர வாங்கியவர் அல்ல.

130.கேள்வி:-

ஒலிவ் மீது (Olive) ஸகாத் உண்டா?

பதில்:-

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி ஒலிவ்மீது ஸகாத் இல்லை. ஆனால் இமாம் அபூஹனிபாவின் கருத்துப்படி அதற்கு ஸகாத் உண்டு. ஆனால் ஸகாத்தை கணிப்பிடும் பொழுது அனுமானமாக கணிப்பிட்டு ஒலிவ் எண்ணையிலிருந்து ஸகாத்தை பெறவேண்டும்.

131.கேள்வி:-

விவசாய பொருட்கள்மீது ஸகாத் விதியாகும் பொழுது அடிப்படையாக கொள்ள வேண்டியது யாது?

பதில்:-

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி முக்கிய உணவாக கொள்ளக்கூடிய நிலத்தில் விளையும் உற்பத்திப்பொருள். சேமித்து வைக்கக்கூடியதும் மனிதனால் பயிர்செய்யப்பட்டதுமான கடலை, பார்லி போன்றவற்றிக்கு ஸகாத் உண்டு.

அதேபோல் இமாம் அபூஹனிபாவின் கருத்துப்படி காய்கறி உட்பட சகல உற்பத்திப் பொருட்களும் அதாவது விறகு, மூங்கில், புல், போன்றன தவிர மற்றைய அனைத்தின்மீதும் ஸகாத் கொடுக்க வேண்டும்.

132.கேள்வி:-

விவசாய உற்பத்திப் பொருட்கள்மீது எவ்வாறு ஸகாத் விதியாகின்றது?

பதில்:-

விவசாய பொருட்கள் தோல், உமி, பதர், வைக்கோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றை நீக்கி மிகுதியானது 5 வஸாக் அளவு இருந்தால் அதன்மீது ஸகாத் விதியாகும். இவ்வாறு துப்பரவு செய்யப்படாமல் இருந்தால 10 வஸாக்குக்கு மேற்பட்ட தொகைமீது ஸகாத் விதியாகும். அதாவது 5 வஸக் = 652.8 கிலோகிராம்

10 வஸக் = 1305.6 கிலோகிராமாகும்.

133. கேள்வி:-

விவசாய பொருட்களை அறுவடைசெய்தபின் சரியாக கணிப்பீடு செய்ய முடியாதுவிடின் எவ்வாறு ஸகாத் கொடுப்பது?

பதில்:-

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அந்த விவசாய பொருள் நிஸாப்பை அடைந்த பெறுமதி வந்தால் அதன் ஆகக்குறைந்த பொருளலவு ஸகாத் கொடுக்க வேண்டும்.

134. கேள்வி:-

விவசாய பொருட்களை உற்பத்தி செய்யும் பொழுது ஸகாத் விதியாவதனால் அறுவடையின் முன் அல்லது பின்பு ஏற்படும் செலவுகள் ஸகாத்திலிருந்து கழிக்கலாமா?

பதில்:-

முடியாது

135. கேள்வி:-

அறுவடையின்போது ஸகாத் விதியாவதனால் அந்த பயிர் செய்கைக்கு பெறப்பட்ட அல்லது அறுவடைக்கு பெறப்பட்ட கடன்களை கழிக்கலாமா?

பதில்:-

ஒருவர் ஸகாத் கொடுக்கமுன்பு அவரது கடன்களை கழிக்க வேண்டும். இங்கு விவசாய நோக்கத்திற்காக பெறப்பட்ட கடன்களை கழிக்கலாம். ஆனால் செலவுகளை கழிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**136. கேள்வி:-**

ஒருவர் விவசாயம் அறுவடைசெய்து ஸகாத் கொடுப்பதற்கு முன்பாக அதிலிருந்து சாப்பிடலாமா?

**பதில் :-**

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி அதிலிருந்து சாப்பிடலாம். ஆனால் அதனை ஸகாத்திற்கு கணக்கில் எடுக்கும் அறுவடைத்தொகைக்கு சேர்க்கத் தேவையில்லை.

இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி அவைகளை சாப்பிடலாம். ஆனால் அதனை ஸகாத் கணக்கில் எடுக்கும் போது பயிர் செய்கையுடன் சேர்த்தல் வேண்டும்.

**137. கேள்வி:-**

பழவகைகள் அறுவடையின் போது ஸக்காத் விதியாவதன் ஆரம்ப அளவு (நிஸாப்) யாது?

**பதில் :-**

1520 இறாத்தலாகும்.

**138. கேள்வி:-**

இலங்கையில் புசல் அளவில் நெல் போன்ற விளை பொருள் கணிப்பிடப்படுகிறது. எனவே நெல்லின் நிஸாப் அளவு யாது?

**பதில் :-**

நெல்லின் $47^{1}/_{2}$ புசல் நிஸாபாகும். (ஆனால் தோல் நீக்கிய விவசாயப் பொருட்கள் அறுவடையின், அதன் நிஸாப் அளவு $23^{3}/_{4}$ புசலாகும்)

**139. கேள்வி:-**

விவசாய அறுவடையின் போது ஸக்காத்தைக் கணிப்பிடும் போது மழை நீர் போன்றனவும், நீர்ப்பாய்ச்சுதல் போன்றனவும் ஸக்காத்தின் விகிதத்தை தீர்மானித்ததில் வேறுபடுகின்றன. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான இலகு முறை யாது?

பதில் :-

இதனை விளக்க கீழ்வரும் உதாரணத்தைக் குறிப்பிடலாம் ஒருவர் விவசாயம் செய்யும் போது 50% நீர்ப்பாய்ச்சியும் 50% மழை நீரையும் உபயோகித்து இருக்கிறார். ஆகவே அவரது ஸக்காத் வீதம் கீழ் வருமாறு.

$^1/_2$ வாசி 5% ஸக்காத்
$^1/_2$ வாசி 10% ஸக்காத்

ஆகவே

1) $^1/_2 \text{ X } 5\% = {}^1/_2 \text{ X } {}^5/_{100} = {}^1/_{40}$

2) $^1/_2 \text{ X } 5\% = {}^1/_2 \text{ X } {}^5/_{100} = {}^1/_{40}$

$(1) + (2) = {}^1/_{40} + {}^1/_{20} = {}^{1+2}/_{40} = {}^3/_{40}$

$^3/_{40}$ ஐ வீதத்தில் பார்த்தால் $= {}^3/_{40} \text{ X } 100 = 7.5\%$

எனவே மேல்வரும் கணிப்பீட்டினைப் போல் நீர் உபயோகித்த முறையே வீதத்தில் பார்த்து அதன் பின் ஸக்காத் வீதத்தினை உபயோகித்து குறிப்பிட்ட விவசாயியின் ஸக்காத் அளவினைக் கணிப்பிடலாம்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலத்திலிருந்து பெறுபவைகள், புதையல்கள்

140. கேள்வி:-

புதையல்களும் மிகபெறுமதிமிக்க நிலத்தின் அடியிலிருந்து பெறப்படும் சுரங்கப்பொருள்மீது எவ்வாறு ஸகாத் விதியாகிறது?

பதில் :-

இஸ்லாமிய அறிஞர்கள் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்பாக அராபியர்கள் புதைத்து வைத்திருந்த பொருட்கள் எத்தகைய பணசச்செலவோ, முயற்சியோ இன்றி தானாக எடுக்கப்பட்ட பொருட்களுக்கு ஸகாத் கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

மேலும் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி இது மனிதனாலோ, அல்லது இறைவணாலோ நிலத்துக்கு அடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த செல்வங்களைக் குறிக்கும்.

141. கேள்வி:-

நிலத்தில் உள்ளிருந்து பெறப்படும் செல்வங்களுக்கு ஸகாத் எவ்வாறு கொடுக்கப்பட வேண்டும்?

பதில் :-

இஸ்லாமிய அறிஞர்கள் இதுபற்றி பலவாறு கூறியிருக்கிறார்கள். அஹ்மத் (ரஹ்) அவர்கள் நிலத்திலிருந்து தோண்டி எடுக்கும் சகலதுக்கும் அது நிலத்தின் உள்ளே மனிதனால் புதைத்து வைத்ததொன்றாயினும் இறைவனால் படைககப்பட்டதாயினும் அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸகாத் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். அத்தோடு அந்த பொருளுக்கு பெறுமதியும் இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

இதன்படி நிலத்தின் அடியிலிருந்து பெறப்படும் தங்கம், வெள்ளி, இரும்பு, பித்தளை, பெற்றோலியம் போன்ற சகலதுக்கும் ஸகாத் விதியாகும். அத்தோடு இவைகள் நிஸாப்பை எட்டியதாக இருக்க வேண்டும்.

இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி எந்த நிலத்திலிருந்து பெறப்படும் கனிவர்க்கமும் நெருப்பினால் உருக்கக்கூடியதாக இருந்தால் அதன் மீது ஸகாத் விதியாகும். உதாரணமாக தங்கம், வெள்ளி, போன்றன.

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி தங்கமும், வெள்ளியும் மட்டுமே இவ்வாறான ஸகாத்துக்கு உட்படும். அத்தோடு தங்கம் 20 மிஸ்காலும், வெள்ளி 200 திர்ஹமும் (அதாவது நிஸாப் அளவு) அதிகமாக கிடைக்க வேண்டும்.

அத்தோடு இவைகள் ஒருவருடம் பூர்த்தியாக வேண்டும் என்ற நிபந்தனை இல்லை. இதனை இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

142. கேள்வி:-

ஒருவர் புதையல் ஒன்றை பெற்றால் அந்த புதையல் இருந்த நிலத்தின் உரித்து ஏதும் அதன் உரிமையில் தாக்கத்தை ஏற்படுத்துமா?

பதில் :-

நிலமானது உரித்து குறிப்பிட்ட ஒருவருக்கு என்று இல்லாது இருந்தால் அதனை கண்டு எடுப்பவருக்கே உரித்தாகி அதற்கு 20% ஸகாத் கொடுக்க வேண்டும். அதேபோல் ஒருவரது வாங்கிய காணியை முன்பு வைத்திருந்தவர் கேட்டால் திருப்பி கொடுக்க வேண்டும். அல்லது கண்டெடுத்த தற்போதைய காணிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தக்காரருக்கே உரித்தாகும். ஆனால் தற்காலத்தில் காணிகளின் மாற்றத்தில் உறுதி (Reed) மூலம் சகலதும் மாற்றப் படுவதனால் காணியை எடுத்தவருக்கே அது சொந்தமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸகாத் கொடுத்தல்

143.கேள்வி :-

ஒருவரது ஸகாத் கொடுக்கும் போது அவரின்கீழ் வேலைசெய்யும், வேலையாளர் தொழிலார்களுக்கு அவர்களது சேவைக்கு சம்பளமாக ஸகாத் கொடுக்கலாமா?

பதில் :-

முடியாது.

144. **கேள்வி:-**

ஸகாத் கொடுக்கும் பொழுது கஷ்டத்தில் உள்ள தனது சகோதரனுக்கு கொடுக்கலாமா?

பதில் :-

இப்னுதைமியா (ரஹ்) போன்றோரின் கருத்துப்படி கொடுக்கலாம்.

145.கேள்வி:-

ஸகாத்தினை முட்பணமாக பூமுட்படுத்தி மாதாந்தமாக கொடுக்கலாமா?

பதில் :-

ஸகாத் விதியாகும் தினத்திற்கு முன்னர் முற்பணமாக ஸகாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கலாம்.

146.கேள்வி:-

ஸகாத் பொருளாகவோ, பணமாகவோ, கொடுக்கலாமா?

பதில் :-

கொடுக்கலாம், ஆனால் பொருட்களுக்கு பதிலாக பணமாக கொடுக்கும் போது அது பணப்பெறுமதி நேர்மையாக இருக்க வேண்டும்.

147.கேள்வி:-

ஸகாத் பெற தகுதியானவர்களின் தங்கி வாழும் பிள்ளைக்கு பணமாகவோ, பொருளாகவோ, நன்கொடையாகவோ கொடுக்கலாமா?

பதில் :-

முடியும்.

148.கேள்வி:-

ஒருவர் தனது சொந்தகாரர் ஒருவரின் அல்லது நண்பர் ஒருவரின் அல்லது வேறு ஒருவரின் சார்பாக ஸகாத்தினை கொடுத்தால் ஸகாத் கொடுக்க வேண்டியவரின் ஸகாத் நிறைவேறுமா? (பிரதிநிதியூடாகக் கொடுத்தல்)

பதில் :-

நிறைவேறும்.

149.கேள்வி:-

ஸகாத் கணிப்பிடும் போது ஒருவருடம் பூர்த்தியாகும் சொத்து சம்பந்தகமாக சந்திரவருடமா, சூரியவருடமா கணக்கில் எடுக்கப்படும்?

பதில் :-

நாம் கணிப்பிடும் சந்திரவருடமாகிய முஹர்ரம், ஸபர் போன்ற மாதங்கள் உள்ள வருடமுறையே கணிப்பீடு முறையாகும். ஏனெனில் இஸ்லாமியருக்கு இஸ்லாமிய கலண்டர் சந்திரவருட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலாகும்.

150.கேள்வி:-

ஸகாத் கொடுக்கும் போது ஸகாத்தாக கொடுக்கும் சொத்து ஒருவருக்கு கொடுக்கப்பட்டு அதன் சட்டபூரண உரிமை கொடுக்கப்படாவிடின் அந்த ஸகாத் செல்லுபடியாகுமா?

பதில்:-

உதாரணமாக ஒருவருக்கு சொந்தமான காணியினை ஸகாத்தாக கொடுக்கிறார் எனின் அதற்குரிய உறுதிப்பத்திரம் (Deed) கொடுக்க வேண்டும். இங்கு சட்டபூர்வமான சகல ஆவணங்களையும் ஸகாத் கொடுப்பவர் பெறுபவருக்கு மாற்றிக் கையளிக்க வேண்டும்.

151.கேள்வி:-

ஸகாத் பெறத்தடுக்கப்பட்டவர்கள் யாவர்?

பதில்:-

(அ) நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தினர் அதாவது பனூஹாஷிம் குடும்பத்தினர்.

(ஆ) ஸகாத் கொடுப்பவரது வேலையாள்.(கூலியாகக் கொடுத்தல்)

(இ) ஸகாத் கொடுப்பவரது தாய், தந்தை, பிள்ளை, கணவன், மனைவி, போன்ற நெருங்கிய சொந்தகாரருக்கு ஸகாத்தினை கொடுக்க முடியாது. ஏனெனில் இவர்களைக் கவணிப்பது கட்டாய கடமையாகும் (தங்கிவாழ்வோர்)

152.கேள்வி:-

ஸகாத் விதியான ஒருபொருள் அல்லது அதன் ஒரு பகுதி ஸகாத் விதியானபின்பு காணாமல் போனாலும் அதன் மீது ஸகாத் விதியாகுமா?

பதில்:-

இவ்வாறான ஒருபொருள் ஒருவரது பலவீனத்தால் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுவகையில் காணாமல் போனாலும் கட்டாயம் ஸகாத் கொடுக்கப்பட வேண்டும்.

153.கேள்வி:-

ஒருவரது ஸகாத் விதியாகும் பொருள் மீது ஸகாத் கொடுக்காமல் வைத்திருந்து அதில் ஒரு பகுதி காணாமல் போனால் ஸகாத் கொடுக்க வேண்டுமா?

பதில்:-

கொடுக்க வேண்டும் அது அவரது கடமையும் ஆகும்.

154.கேள்வி:-

ஒருவர் தனக்குக் கடமையான ஸகாத்தை பல ஆண்டுகள் தெரிந்தோ, தெரியாமலோ, கொடுக்காமல் வைத்திருந்தால் அதற்குறிய சட்டம் யாது?

பதில்:-

நிச்சயமாக பல ஆண்டுகள் கொடுக்க வேண்டிய ஸகாத்தை ஒன்றாகக் கணித்துக் கொடுக்க வேண்டும்.

155.கேள்வி:-

நேர்மையற்ற நிர்வாகிகளிடம் ஸகாத்தை ஒப்படைக்கலாமா?

பதில்:-

ஸகாத்தை கொடுப்பதற்கு ஒப்படைக்கலாம். ஏனெனில் ஸகாத்தை கொடுக்காமலிருக்க இது ஒரு சாட்டாகக் கொள்ளப்பட முடியாது.

156.கேள்வி:-

ஒருவர் வேண்டுமென்றே ஸகாத் கொடுக்காமல் இருப்பதற்காக ஸகாத் விதியாகும் பொருட்கள் ஒருவருட பூர்த்திக்குமுன் சொத்தின் ஒரு பகுதியை அழித்தால் அல்லது வேறு ஒருவருக்கு திருப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் செய்து கொடுத்தால் அல்லது ஒரு பகுதியை பரிசாக கொடுத்தல் போன்றவற்றால் ஸகாத் செலுத்தாது தவிர்க்க முடியுமா?

பதில் :-

இவ்வாறான நிலையில் ஸகாத் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் இவ்வாறான நிலமை ஒருவர் ஸகாத்கொடுக்க வேண்டிவரும் வருட ஆரம்பத்தில் சாதாரண நிகழ்ச்சியாக நடந்தால் ஸகாத் கொடுக்கப்பட தேவையில்லை. வேண்டுமென்றே ஸகாத்திலிருந்து தப்புவதற்கு இவ்வாறு செய்தால் சரியானதொரு அளவில் ஸகாத் கொடுக்க வேண்டுமென்றே இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகிறார்கள்.

157.கேள்வி:-

ஸகாத் விநியோகிக்கும் பொழுது ஸகாத் பெறத்தகுதியான கூட்டத்தினர் அனைவருக்கும் சமமாக பங்கிடப்பட வேண்டுமா?

பதில் :-

ஸகாத் ஆனது ஸகாத்பெற தகுதியுடைய எல்லா கூட்டத்தினருக்கும் பகிர்ந்தளிக்க, வேண்டுமென ஒரு அபிப்பிராயம் காணப்படுகிறது. ஸகாத் ஆனது பெறதகுதியுடைய எந்த கூட்டத்தினருக்கும் எந்த விகிதப்படியும் பகிர்தளிக்கலாம். ஸகாத் கொடுக்கும் நேரத்தில் அவ்வூர் நிலமைக்கு ஏற்ப ஆட்களைத் தெரிவு செய்யலாம். மேலும் அவர்களுக்குப் போதுமான அளவு கொடுக்க வேண்டும்

158.கேள்வி:-

ஒருவரது ஸகாத் ஆனது வரவேண்டிய கடனிலிருந்து கழித்து விடலாமா?

பதில் :-

ஸகாத் ஆனது எத்தகைய கடன்களிலிருந்தும் கழிக்க முடியாது அத்தோடு அது கொடுக்கப்படவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

159.கேள்வி:-

ஸகாத் கொடுத்த ஒருவர் அதனைப் பகிரங்கப்படுத்தலாமா?

பதில் :-

ஒருவர் ஸகாத் கொடுத்தபின் அதனை பகிரங்கப்படுத்தலாம். ஆனால் அதனை பகிரங்கப்படுத்தாமல் இருப்பின் இறைவனிடம் நண்மை அதிகமாகும்.

160.கேள்வி:-

ஸகாத் ஆனது ஒவ்வொரு மூலகத்திற்கும் பலவிகிதங்களில் விதியாகின்றது இங்கு ஒவ்வொரு மூலகமும் குறிப்பிட்ட நிஸாப்பை விட குறைநதிருந்தால் சேர்த்து ஸகாத் கொடுக்கப்பட வேண்டுமா? உதாரணமாக தங்கமும் பணமும் சேர்த்து.

பதில் :-

அவ்வாறு சேர்த்து ஸகாத் விதியாவதில்லை.

161.கேள்வி:-

ஒரு ஊரில் இருந்து ஸகாத் தொகையினை இன்னொரு ஊருக்கு எடுத்துச் செல்லலாமா?

பதில் :-

ஸகாத் ஆனது சேகரிக்கப்பட்ட ஊரிலேயே கொடுக்கப்பட வேண்டும். அவ்வூரில் ஸகாத் பெறத் தகுதியானவர் இல்லையெனில் பக்கத்து ஊர்களுக்குக் கொடுக்கலாம். பஞ்சம், பாரிய அழிவு போன்ற காரணங்களினாலும் ஸகாத்தினை ஊரைவிட்டு எடுத்துச்செல்லலாம். மேலும், ஒருவர் தனது குடும்பத்தினருக்கு கொடுப்பதற்காக ஸகாத்தினை வேறு ஒரு ஊருக்கு எடுத்துச்செல்லலாமென இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகிறார்கள்.

162.கேள்வி:-

சொந்த பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும், மனைவிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாரிய நோய் அல்லது மகளின் சீதனத்தேவை போன்ற முக்கிய தேவையிருக்கும் போது ஸகாத்தினை வெளியே கொடுக்கலாமா?

பதில் :-

ஒருவர் தமது பெற்றாரையும், பிள்ளைகளையும், மனைவியையும் பராமரிப்பது கடமையென்பதால் ஸகாத்தினை அவர்களுக்கு வழங்க முடியாது.

163. கேள்வி:-

ஒரு வசதியான மனைவி தன் கணவனுக்கு ஸகாத் பெற தகுதியிருந்தால் வழங்க முடியுமா?

பதில் :-

மனைவி தனது கணவனுக்கு செலவு செய்ய வேண்டிய கட்டாயம் இல்லையென்பதால் ஸகாத் வழங்கலாம். ஆனால் அவர் ஸகாத்பெற தகுதியான மேற்சொன்ன ஒரு குழுவில் இருக்க வேண்டும். விபரங்களுக்கு(பத்ஹுல் பாரிஹ் 3:330 பார்க்க)

164. கேள்வி:-

முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ஸகாத் வழங்கலாமா?

பதில் :-

கீழ் வரும் நிலைமையில் முஸ்லிம் அல்லாதோருக்கும் ஸகாத் வழங்கலாம்.

I) இஸ்லாத்தை எதிர்காலத்தில் ஏற்கக் கூடியவர்கள்

II) ஸகாத்தை வழங்குவதன் காரணமாக முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்யக் கூடியவர்கள் அதனை விட்டு விடக் கூடியவர்கள் ஆனால் இவர்களுக்கு வழங்குவது இஸ்லாம் வளர்ச்சி கண்டுள்ளதன் காரணமாக இரத்தாகிறது எனக்கூறுகிறார்கள் எனினும் முஸ்லிம் அல்லாத ஒரு நாட்டில் மேற்குறித்த வகைகளில் முஸ்லிம் அல்லாதோருக்குக் கொடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

165.கேள்வி:-

தீயவர்களுக்கு ஸகாத் கொடுக்கலாமா?

பதில் :-

தீயவர்களை நண்மையிண்பக்கம் எடுக்க ஸகாத் கொடுக்கலாம். அத்தோடு அவரது குடும்பத்திற்கும் கொடுக்கலாம்.

166.கேள்வி:-

ஸகாத் கொடுக்க வேண்டியவர்களிடம் ஸகாத்தை அறவீடு செய்து பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமா?

பதில் :-

நபியே! நீர் அவர்களுடைய செல்வத்திலிருந்து ஸகாத்தை கைப்பற்றும் ( அல்குர்ஆன் 9:103)

என்ற அல்குர்ஆன் வசனப்படி ஸகாத் ஆனது அறவிடப்பட்டு பகிர்தளிக்கப்பட வேண்டும். இதன்மூலம் பல நல்ல விளைவுகள் ஏற்படுகின்றன. அத்தோடு ஸகாத்தை தனிப்பட்ட முறையில் கொடுப்பதை காட்டிலும் இம்முறை சிறந்தது என நடைமுறையில் காண முடிகிறது அத்தோடு ஸகாத்தை அறவிட்டுக் கொடுப்பது முஸ்லிம் தலைவர்களது கடமையாகும்.

167.கேள்வி:-

ஸகாத் வழங்குவதில் அதாவது ஒருவர் தனிப்பட்ட முறையில் வழங்குவதில் யாருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்?

பதில் :-

ஒருவர் ஸகாத் எடுக்க ஆகுமான தனது குடும்பத்தில் உள்ளவர்களுக்கு முதலில் கொடுப்பது ஏற்றமாகும். நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள் ஒர் ஏழைக்கு தர்மம் கொடுத்தால் ஒரு கூலி கிடைக்கும். ஆனால் ஏழை உறவினருக்கு தர்மம் செய்தால் தர்மத்தின் கூலியும், உறவை பேணிய கூலியும் சேர்த்து இருவிதமான கூலிகள் கிடைக்கும். (திர்மிதி, நஸாயி, இப்னுமார்ஜித்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

168.கேள்வி:-

உடல் வலிமையுள்ளவர்களுக்கு ஸகாத் கொடுக்கலாமா?

பதில்:-

உடல் வலிமையுள்ள இருமனிதர்கள் வந்து ஸகாத் தரும்படி நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டபொழுது நீங்கள் ஸகாத் வேண்டுமென்று விரும்பினால் நான் தந்து விடுவேன். ஆனால் வசதி உள்ளவர்களுக்கும் சம்பாதிக்கும் உடல்வலிமை, திறமை உள்ளவர்களுக்கும் இதிலிருந்து தரப்படுவது இல்லை என கூறினார்கள். (நஸாயி,அபூதாவூத்,அஹ்மத்)

எனவே, உடல் வலிமையும், திறமையும் உள்ளவர்கள் உழைப்பதையே இஸ்லாம் விரும்புகிறது. அவ்வாறு உழைத்து அதன்பின்பும் ஸகாத்பெற கூடிய குழுவில் உள்ள தகுதி அவருக்கு இருந்தால் ஸகாத்தினை அவர்களுக்குக் கொடுக்கலாம் என இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் கருதுகிறார்கள்.

169.கேள்வி:-

கணவனை இழந்த தனது மகளுக்கு (தந்தை) ஸகாத் கொடுக்கலலாமா?

பதில்:-

இந்த நிலையில் ஒருதகப்பன் தனது மகளை காப்பாற்றுவது கடமையாகிறது. எனவே, இந்த நிலையில் அவருக்கு ஸகாத் கொடுக்க முடியாது.

170.கேள்வி:-

ஒருவரின் ஸகாத் விதியாகும் தொகையிலிருந்து ஒருவருடம் பூர்த்தியாகுமுன் அவர் இறந்து அப்பொருள் மீது ஸகாத் விதியானால் ஸகாத் கொடுக்க வேண்டுமா? அதனை யார் கொடுப்பது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் :-

கொடுக்க வேண்டும் அதனை அவரது வாரிசு கொடுக்க வேண்டும்.

171. கேள்வி:-

யாரும் ஒரு புதியவர் வந்து தனக்கு ஸகாத்தை தரும்படி கேட்டால் என்ன செய்ய வேண்டும்?

பதில் :-

ஸகாத்தை தரும்படி கேட்டால் ஸகாத்பெறத் தகுதியான ஒரு குழுவில் ஒருவராக உள்ளாரா எனப் பார்க்க வேண்டும். இதனை நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் ஒருவர் ஸகாத் தாருங்கள் என்று கேட்டதற்கு ஸகாத்தை ஒரு நபி அல்லது மற்றொருவர்தாம் விரும்பியபடி விரும்பியவர்களுக்கெல்லாம் வழங்கிவிட முடியாது அவ்வாறு வழங்குவதை இறைவன் ஏற்கமாட்டான். யாருக்கெல்லாம் வழங்க வேண்டுமென அவனே பட்டியல் போட்டு தந்துள்ளான். அந்த பட்டியலில் உள்ளவர்களின் தகுதி உனக்கிருந்தால் நான் தருவேன் என்றார்கள். (அபூதாவுத்)

172. கேள்வி:-

ஸகாத்தை கொடுக்கும்போது பெறுபவர்களை எவ்வாறு தெரிவு செய்ய வேண்டும்?

பதில் :-

இஸ்லாமிய அறிஞர்கள் பலரும் பலவிதமாக கூறியிருந்தாலும் இமாம் அபூஹனிபா(ரஹ்) அவர்கள் ஸகாத் பெற தகுதியான எட்டு கூட்டத்தாரில் யாருக்கும், ஸகாத் கொடுப்பவர் தெரிவுசெய்து பகிர்தளிப்பது நன்று என கூறியுள்ளார்கள்.

மேலும் ஸகாத் ஆனது சிலவேளை சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப கொடுக்கப்பட வேண்டும். உதாரணமாக ஸகாத் கொடுக்கும் பொழுது புனிதயுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டால் அதற்கே முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க வேண்டும்.

173.கேள்வி:-

அனாதை சிறுவர், சித்தசுவாதினமற்ற மனிதன், ஆகியோரது ஸகாத் விதியாகும் பொருள்மீது ஸகாத் விதியானால் யார் அதனை கொடுக்க வேண்டும்?

பதில் :-

அவர்களது பாதுகாவலன் ஸகாத் கொடுக்க வேண்டும்.

174.கேள்வி:-

திடகாத்திரமான ஒருவர் தனது வாழ்க்கைச் செலவுக்குச் சம்பாதிக்கக் கூடியவராக உள்ளார் இந்நிலையில் அவர் இஸ்லாமியக் கல்வி கற்கிறார் இப்பொழுது அவருக்கு அக்கல்வி கற்பது தொழில் செய்வதற்கு இடைஞ்சலாக உள்ளது. இவருக்கு ஸகாத் கொடுக்கலாமா?

பதில் :-

இஸ்லாமியக கல்வி கற்பது. "பர்ளுகிபாய" என்பதன் காரணமாக ஸகாத் அவருக்கு கொடுக்கலாம் என அன்நவவி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். மேலும் அவர் கல்வித்தாபனமொன்றில் வதித்தாலும் அவர் இஸ்லாமிய கல்விகற்கும் காலத்துக்கு மட்டுமே ஸகாத் பெறலாம் எனக் கூறுகிறார்.

175. கேள்வி:-

திடகாத்திரமான சம்பாதிக்கக் கூடிய ஒருவர் அவ்வாறு சம்பாதிக்காது நபில் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டு சம்பாதிக்காது அல்லது சம்பாதிக்க நேரமின்றி இருந்தால் அவருக்கு ஸகாத் கொடுக்கலாமா?

பதில் :-

அவர் நபில் தொழுவது அவருக்காக மட்டுமே. இந்நிலையில் அவருக்கு ஸகாத் வழங்க முடியாது என அன நவவி (ரஹ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கூறுகிறார். மேலும் அவர் தொழில் செய்து சம்பாதிக்க முயல வேண்டும்.

176. கேள்வி:-

ஸகாத் பெறக் கூடியவர்களின் நலனைக் கவனிக்கும் ஒரு தாபனம் ஸகாத் பெறலாமா? (உதாரணமாக அனாதை இல்லம், அரபு மதரஸா, அனாதைகளது கல்விக் கூடம் போன்றன)

பதில் :-

இத்தகைய தாபனங்களின் நண்மை பெறுபவர்கள் ஸகாத் பெறத்தகுதியாவதனால், ஸகாத்தை இத்தாபனங்களுக்கும் வழங்கலாம்.

177. கேள்வி:-

ஸகாத் கொடுக்கும் பொழுது ஸகாத் விதியாகும் பொருளின் கணிப்பீடு சரியாக அமையாது விடின் அதன் விளைவு யாது?

பதில் :-

ஸகாத் கொடுப்பது இறைவணக்கமாகும். அந்த இறைவணக்கம் சரியாக செய்யப்படுவது சரியான முறையில் கணிப்பிட்டால் மட்டுமே.

178. கேள்வி:-

ஸக்காத் அறவிடுவோர் ஒருவரின் சொத்திலிருந்து மிக நல்ல பொருட்களை ஸக்காதாக அறவிடலாமா?

பதில் :-

ஸகாத்தானது நல்ல பொருளிலே கொடுக்க வேண்டுமாயிருப்பினும் அறவிடும் போது அச்சொத்தின் உரிமையாளர் விரும்பினால் அன்றி மிகநல்ல பொருளை ஸகாதாக அறவிடக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

179.கேள்வி:-

ஒருவர் ஸகாத், ஸதக்கா கொடுப்பதன் நன்மை இவ்வுலகிலும் கிடைக்குமா?

பதில் :-

இறைவன் ஸதக்காவினை தனது வலதுகையால் பெற்று அதனை அபிவிருத்தி அடைய செய்கிறான். எவ்வாறெனில் ஒருசிறிய தொகை ஸதகா கொடுப்பது உஹுதுமலை அளவு பெருகும் என நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். (அஹ்மத் அத்தீர்மதி)

மேலும், நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் ஒருவரது ஸகாத் செலுத்தப்படுமாயின் நன்மையாது என வினவப்பட்டது. அதற்கு அவர்கள் ஒருவர் தனது பொருள்மீது ஸகாத் செலுத்தப்படும் போது அந்தப் பொருட்கள் மீதான தீமையை அல்லாஹ் அகற்றிவிடுவான் . (அத்தபரானி)

180.கேள்வி:-

ஸகாத் சேகரிப்பாளர் ஸகாத் கொடுப்பவருடன் எவ்வாறு நடக்க வேண்டும்?

பதில் :-

ஸகாத் ஆனது ஒருவர் தனது சொத்திலிருந்து தானே எடுத்துக்கொடுப்பதை இஸ்லாம் விரும்புகிறது. மேலும் ஸகாத் ஆனது மக்களிடையே அன்பும், ஆதர்வும், வளர்ப்பதற்கு தூண்டுகோலாக அமைகிறது. "பொருளின் உரித்தை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாற்றுவதன் மூலம் மட்டும் சமூகத்திலிருந்து ஏழ்மையை அழிக்க முடியாது. இதன் காரணமாக கிரிஸ்தவ மார்க்கம் மீது வெறுப்படைய வைத்தது" என அலி இஸத்பிகோபிக் கிழக்கிக்கும் மேற்கிற்கும் இடையே என்ற இஸ்லாமிய நூலில் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

181.கேள்வி:-

ஸகாத்துறை ஊழியர் ஸகாத்தின் சட்டதிட்டங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டுமா?

பதில் :-

நிச்சயமாக ஸகாத்திற்குரிய சட்டதிட்டங்களை மேலேழுத்து வாரியாக அன்றி முழுமையாக அறிந்திருத்தல் வேண்டும்.

182.கேள்வி:-

ஸகாத்துறை ஊழியர் வசதியுள்ளவராக இருந்தால் அவரது ஸகாத்துறை வேலைகளுக்காக சம்பளம் பெறலாமா?

பதில் :-

சம்பளம் பெறலாம்.

183.கேள்வி:-

ஸகாத்துறை ஊழியர்களாக பெண்களை நியமிக்கலாமா?

பதில் :-

முடியுமானளவு ஆண்களையே இந்தப்பதவியில் நியமிக்க வேண்டும். ஆனால் பெண்களுக்கு ஸகாத் விநியோகம் அல்லது பெண்களிடம் ஸகாத் அறவீடு போன்ற சிறப்பான வேலைகளுக்கு பெண்களை நியமிக்கலாம். இது ஒரு கடினமான வேலையாதலால் ஆண்களையே நியமிப்பது நல்லது.

184.கேள்வி:-

ஒருவர் அதிக வரி விதிப்பு உள்ள ஒரு நாட்டில்தான் வரி செலுத்தும் போது, கொடுக்க வேண்டிய ஸக்காத்தை, ஸக்காத்தாக நினைத்து வரியினைச் செலுத்துகிறார் இவ்வாறு ஸக்காத் கொடுப்பது, அவர் ஸக்காத் கொடுத்தவராக அங்கீகரிக்க முடியுமா?

பதில் :-

இவ்வாறான கட்டத்தில் இது ஸக்காத் செலுத்தியதாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பிடப்பட மாட்டாது என கல்ாநிதி யூசுப் அல்கர்லாவி கூறுகிறார். ஸகாத் பெறத் தகுதியானவர்களுக்கே கொடுக்க வேண்டும்.

**185.கேள்வி:-**

ஸகாத் கொடுக்க வேண்டிய தொகையை மொத்தமாக ஒருவர் ஒதுக்கி வைத்திருந்து சிறிது சிறிதாக ஸகாத் பெறத் தகுதியான ஒவ்வொருவரினதும் தேவைக்கேற்ப சிறிதுகாலம் கொடுத்து வருகிறார். இது சரியானதா?

பதில் :-

ஒருவரது சொத்தின்மீது ஸகாத் விதியாகும் போது அதனை உடனடியாக கொடுத்துவிட வேண்டும். காலதாமதப்படுத்த முடியாது. ஆனால் ஸகாத்தை வசூலித்து விநியோகிக்கும் ஒருதாபனம் இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸகாத் பெறுதல்

தேவைக்கேற்ப விநியோகிக்கலாம். தனியார் சில்லரைக்காசாக மாற்றி சிரிது சிரிது கொடுப்பது சமூகத்தில் ஏழையை உரவாக்கும் ஒரு விளைவை ஏற்பாடுத்துகிறது.

**186. கேள்வி:-**

ஸகாத் பெறுவதற்குத் தகுதியான பீஸபில்லா எனப்படும் கூட்டத்தினர் (அல்லாஹ்வின் வழியில் போராடுபவர்கள்) என்பதை விளக்குவீர்களா?

**பதில் :-**

ஒருவர் வாளினால் மட்டுமின்றி, பேனாவினால், உடலினால், செல்வத்தினால் போராடலாம். அக்கிரம அதிகாரியிடம், மன்னரிடம் சத்தியத்னை எடுத்துரைப்பகைவிட சிறந்த போராட்டம் (ஜிஹாத்) வேறில்லை. எனவே, ஸகாத்தை பெறக்கூடியவரில் இவர்களும் இந்தப் பகுதியில் அடங்குவர்.

**187. கேள்வி:-**

இலங்கையில் ஸ்தாபனரீதியில் ஸகாத் சேர்த்துப்பகிர்ந்தளிக்கலாமா?

**பதில் :-**

முஸ்லிம் கலாச்சார திணைக்களத்தின் மேற்பார்வையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசல் நிர்வாகத்தின் கீழ் ஸ்தாபன ரீதியில் அறவிட்டுப் பகிர்ந்தளிக்கலாம். என்றாலும் நடைமுறையில் ஒருவர் தனது சொத்துக்களை வெளிப்படுத்த விரும்பாமை போன்ற நடைமுறைச்சிக்கல்களுக்குத் தகுந்த தீர்வு காணப்படல் வேண்டும்.

188.கேள்வி:-

ஸகாத் பெறக்கூடாத வசதியுள்ளவர்கள் யார்?

பதில்:-

வாழ்வில் எத்தகைய கஷ்டமும் இன்றி தமது அத்தியவசிய தேவைக்கு, தேவையான வருமானத்தைப் பெறுபவர்கள். அடிப்படைத் தேவைகள் நிறைவேரியவர்கள் ஆவர்.

189.கேள்வி:-

ஸகாத்தைப்பெற தகுதியுடையவர்கள் யாவர்?

பதில்:-

(அ) வசதியற்ற பிறரிடம் கேட்க கூச்சப்படும் ஏழைகள் (ஃபுகராக்கள்)

(ஆ) பிறரிடம் கூச்சப்படாமல் கேட்டுப்பெறும் ஏழைகள், மிஸ்கீன்கள்.

(இ) ஸகாத் வசூலிப்பு, பகிர்தளிப்பு ஊழியர்கள்.

(ஈ) இதயம் குணமாக்கப்பட வேண்டியவர்கள்(நவமுஸ்லிம் உட்பட)

(உ) அடிமை, விடுதலைக்காக நிதியுதவி வேண்டுபவர்கள்.

(ஊ) இஸ்லாமிய சட்டத்திற்கு முரணில்லாத தேவைகளுக்காக வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியாதவர்கள்

(எ) அல்லாஹ்வின் வழியில் அருற்போர் செய்பவர்கள்.

(ஏ) பயணிகள், பயணத்தில் அல்லல்படுபவர்கள்.

190.கேள்வி:-

வீடு, அணியும் உடை, போன்றவைகள் உள்ள ஒருவருக்கு ஸகாத் பெறலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் :-

அவ்வாறு இருந்தாலும் மேற்குறிப்பிட்ட ஒரு குழுவில் இவர் சேர்வதாயின் இவர் ஸகாத்பெற தகுதியுடையவராவர். மேலும் வசதி உள்ளவர்களில் ஐந்து பிரிவினர் ஸகாத் வாங்கிக் கொள்ளலாம். அவர்களில் ஒரு பிரிவினர் ஸகாத்துறை ஊழியர்களாவர்.

(அபூதாவூத்முஹத்தா)

191.கேள்வி:-

ஸகாத் கொடுக்க வேண்டிய ஒருவர் ஸகாத் எடுக்கத்தகுதிவுடைய ஒருவராகவும் உள்ளார். (உதாரணமாக விவசாய அறுவடைமீது ஸகாத் விதியாதும் ஒருவர் கடனாளியாக உள்ளார்)

பதில் :-

இங்கு ஸகாத் ஆனது அத்தகைய விவசாய பொருள்மீது செலுத்தப்படவும். அவர் கடனாளி என்ற ரீதியில் ஸகாத் பெற்றுக்கொள்ளவும் முடியும். ஆனால் தன்னிறைவு அடைந்தவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸதக்கதுல் பித்ர்

மீதே ஸகாத் விதியாகின்றது. அத்தோடு வசதியான ஐந்து கூட்டத்தினர் ஸகாத் எடுக்கலாம் என நாயகம் (ஸல்) கூறி உள்ளார்கள்.

192.கேள்வி:-

ஸதக்கதுல் பித்ரா எப்போது கடமையாகின்றது?

பதில் :-

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி ரமலான் மாதம் முடிந்து சூரியன் அஸ்தமிக்கும் போது நோன்பு திறக்கும் நேரமாகும். ஆனால் இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி பெருநாள் அன்று அதிகாலை அதாவது பஜர் நேரம் விதியாகின்றது.

193.கேள்வி:-

ஸதக்கதுல் பித்ர் விதியாவதன் நோக்கம் யாது?

பதில் :-

ரமலான் மாதத்தில் நோன்பு நோற்கும் போது ஏற்பட்ட தவறுக்காகவும் வசதியில்லாதவர்கள் நோன்புபெருநாளை கொண்டாடுவதற்காகவும் கொடுக்கப்படுகிறது. மேலும் ஸகாத் போன்று நிஸாப் அளவு குறிப்பிடப்படாது ஒரு சிறுதொகையான தானியம் (2.176 கிலோகிராம்) அளவு கொடுக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

194. கேள்வி:-

ஒருவரது தகப்பன் காலமானால் அவரது பிள்ளைகளுக்கு யார் ஸதக்கதுல் பித்ரா கொடுக்க வேண்டும்.?

பதில் :-

அந்த ஸதக்கதுல் பித்ராவை பாட்டனார் ( Grand Father) தமது பேரப்பிள்ளைகளுக்காக கொடுக்க வேண்டும்.

195. கேள்வி:-

ஒரு வயது வந்த மகனுக்கு ஸதக்கதுல் பித்ரா கொடுக்க, ஏழ்மையின் காரணமாக வசதியில்லையெனில் அதனை அப்பிள்ளையின் தகப்பன் கொடுப்பது கடமையா?

பதில் :-

இன்நிலையில் வயதுவந்த மகனுக்கு ஏழ்மையின் காரணமாக தகப்பன் ஸதக்கதுல் பித்ரா கொடுக்க வேண்டும்.

196. கேள்வி:-

ஒருவர் நோன்பு பெருநாளைக்கு பிறகு கொடுக்கும் ஸதக்கதுல் பித்ராவின் நிலமை யாது?

பதில் :-

ஸதக்கதுல் பித்ரா நோன்பு பெருநாளைக்கு முன்பு கொடுக்க வேண்டும் நோன்பு பெருநாளைக்கு பின்பு கொடுப்பது சாதாரண ஸதக்காவாக அமையும்.

197. கேள்வி:-

ஸதக்கதுல் பித்ர் கொடுக்கும் பொழுது ஈரமான, பழுதான நெல் கொடுக்கலமா?

பதில் :-

இவைகளை ஸதக்கதுல் பித்ர் ஆக கொடுக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

198.கேள்வி:-

பெருநாள் தொழுகைக்கு பின்பு ஸதக்கதுல் பித்ர் கொடுக்கலாம்.?

பதில்:-

பெருநாள் தொழுகையின் பின்பு கொடுப்பது மக்ரூ ஆகும். ஆனால் இனபந்து ஒருவரை எதிர்பார்த்து பெருநாள் தொழுகைக்கு பின்பு கொடுக்கலாம்.

199.கேள்வி:-

ரமலான் மாதம் ஒருவர் நோன்பு பிடிக்காவிட்டால் அவர்மீது ஸதக்கதுல் பித்ரா கடமையாகுமா?

பதில்:-

ஸதக்கதுல் பித்ரா கொடுக்க வேண்டும்.

200.கேள்வி:-

ஒரு வசதியான பெண்மனி தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் ஸாதக்கதுல் பித்ரா கொடுக்க வெண்டுமா?

பதில்:-

அந்த பெண்மனி அவளுக்கான ஸதக்கதுல் பித்ரா கொடுக்க வேண்டும். அவளது பிள்ளைக்கு அவர் கொடுப்பது கட்டாயம் இல்லை. ஆனால் தகப்பன் இருந்தால் அவர் கொடுக்க வேண்டும்.

201.கேள்வி:-

ஷவ்வால் மாதம் முதலாம் பிறை அதாவது ரமலான்மாதம் முடிந்த சூரியன் அஸ்தமிக்கும் அன்று சூரிய அஸ்தமனத்திற்கும், அதிகாலைக்குமிடையில் பெறும் குழந்தைக்கு எவ்வாறு ஸதக்கதுல் பித்ரா கொடுக்க வேண்டும்.?

பதில்:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி சூரிய அஸ்தமன நேரத்தில் ஸதக்கதுல் பித்ரா விதியாவதால் இந்த பிள்ளைக்கு ஸதக்கதுல் பித்ரா கொடுக்க தேவையில்லை. இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி ஸதக்கதுல் பித்ர் கொடுக்க வேண்டும்.

**202. கேள்வி:-**

ஸதக்கதுல் பித்ரை முட்படுத்தி கொடுக்கலாமா?

பதில் :-

இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி ஸதக்கதுல் பித்ர் ரமலானுக்கு முன்புகூட கொடுக்கலாம். இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி ரமலான் ஆரம்பத்திலிருந்து கொடுக்கலாம்.

**203. கேள்வி:-**

ஸதக்கதுல் பித்ராவை பங்கிடுவது எவ்வாறு?

**பதில் :-**

ஸகாத்தை போன்றே பங்கிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் கூறுகிறான்,

நம்பிக்கை கொண்டவர்களே அல்லாஹ்வின் மீதும் இறுதிநாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல் மனிதர்களுக்குக் காட்டுவதற்காகவே தன் பொருளைச் செலவழிப்பது போல் கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும் நோவினை செய்தும் உங்கள் தான தர்மங்களைப் பாழாக்கி விடாதீர்கள்

(அல்குர்ஆன் 2:264)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org